பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 தை 16 சனிக்கிழமை (29.01.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :64

# சர்வதேச உதவி நிதியை புலிகளிடம் தரமாட்டோம்!

## லக்ஷ்மன் கதிர்காமர் கூறுகின்றார்

கொழும்பு,ஜனவரி29

**ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிப்புற்ற மக்களின் நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்காகச் சர்வதேச சமூகம் வழங்கும் உதவுதொகை விடுதலைப் புலிகளுக்கு நேரடியாக வழங்கப்படவேமாட்டாது.**

**- இப்படி அடித்துக் கூறியிருக்கின்றார் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்.**

'த ஹிண்டு' பத்திரிகையின் கொழும்பு செய்தியாளர் வி.சம்பந்தனுக்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். அப்பேட்டியின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

கேள்வி:- நிதி நேரடியாகத் தங்களுக்கு அனுப்பப்பட வேண்டும் எனப் புலிகள் கோருகின்றார்கள் என்று செய்திகள் வெளியாகியுள்ளனவே. அத்தகைய கோரிக்கை ஏதும் வந்தால் அரசின் பதில் என்னவாக இருக்கும்?

பதில்:- புலிகள் அரசிடம் இதுவரை எழுப்பியிருக்கும் விடயங்களில் நிதி தங்களுக்கு நேரடியாக அனுப்பப்படவேண்டும் என்ற விவகாரம் அடங்கியிருக்கவில்லை.

நிதி புலிகளுக்கு நேரடியாக வழங்கப்பட முடியாது என்பதே அரசினதும் சர்வதேச உதவும் சமூகத்தினதும் நிலைப்பாடாக இருந்து வந்துள்ளது.

களத்தில் திட்டங்களைச் செயற்படுத்துவதில் உள்ள பிரச்சினைகளே இதுவரை எதிர்கொள்ளப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ரூ.40 கோடி பெறுமதி பொருள்கள் வடக்கு-கிழக்குக்கு அனுப்பிவைப்பு

### அரசுத் தரப்பில் தகவல் தெரிவிப்பு

கொழும்பு.ஜன.29

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண மக்களுக்கு அரச நிவாரணமாக 40கோடி 30 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன எனத் தேசிய அனர்த்த முகாமைத்துவ செயலணியின் பணிப்பாளர் கலாநிதி தாரா டிமெல் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அரசின் நிவாரணப் பொருள்கள் போதியளவில் கிடைக்கவில்லை எனப் பரவலாகக் குற்றம் சாட்டப்படுகிறது. அதனை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றார் அவர்.

கடந்த ஜனவரி 26ஆம் திகதி வரை ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணமாக மாவட்டங்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குத் தளபதிகள் கிளிநொச்சிக்கு வருகை

கிளிநொச்சி.ஜன.29

விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகள், தலைவர் பிரபாகரனுடன் ஆலோசனை கலப்பதற்காக நேற்று வன்னிக்கு வந்து சேர்ந்தனர்.

திருகோணமலையின் விசேட தளபதி கேணல் சொர்ணம், மட்டக்களப்பு-அம்பாறை விசேட தளபதி கேணல் பானு, தளபதி நாகேஷ் ஆகியோரே ஸ்ரீலங்கா விமானப்படையின் விசேட ஹெலிக்கொப்டரில் நேற்றுக் காலை கிளி நொச்சியை வந்தடைந்தனர்.

ஆழிப்பேரலை அனர்த்தப் பாதிப்புகள் தொடர்பான நிவாரணப் பணிகள் மற்றும் மீள்கட்டுமான நடவடிக்கைகள் உட்படப் பல்வேறு விடயங்கள் குறித்துத் தளபதிகள் தலைவரோடு விரிவாக ஆலோசனை நடத்துவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (கு-க)

### நிவாரணப் பணிக்கென வந்திருந்த

## அமெரிக்கப் படையினரில் ஆயிரம் பேர் திரும்பினர்!

கொழும்பு.ஜன.29

ஆழிப்பேரலையால்பாதிக்கப்பட்ட இலங்கையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவென இங்கு வந்திருந்த அமெரிக்கப் படையினரில் சுமார் ஆயிரம் பேர்வரையானோர் நேற்றுமுன்தினம் நாடு திரும்பியுள்ளனர்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரட்ணாயக்கா இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இலங்கையில் மீட்பு மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்கென ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் அமெரிக்கப் படையினர் இங்கு வந்திருந்தனர். இவ்வாறு 1,650 இற்கும் மேற்பட்ட அமெரிக்கப் படையினர் இங்கு தங்கியிருந்து சேவையாற்றினர். அவர்களில் ஆயிரம் பேரே தற்போது நாடுதிரும்பியுள்ளனர்.

எஞ்சியுள்ள நூற்றுக்கணக்கான படையினர் தொடர்ந்தும் இலங்கையில் தங்கியிருந்து மீள் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மீள் கட்டுமானப் பணிகள் அனைத்தும் நிறைவடைந்ததும் அவர்களும் நாடு திரும்பிவிடுவர் என்றும் பிரிகேடியர் தயா ரட்ணாயக்க தெரிவித்தார்.

எனினும் அமெரிக்கப் படையினரில் சிலர் இந்த ஆண்டு இறுதிவரை இலங்கையில் தங்கியிருப்பர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.(கு-க)

## மீண்டும் சுனாமி என்ற வதந்தியால் தமிழர் பகுதிகளில் நேற்றுக் களேபரம்

வடமராட்சி.ஜன.29

மீண்டும் சுனாமி அலைகள் ஆர்ப்பரிப்பதாக பரவிய வதந்தியால் வடமராட்சி மற்றும் முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, பொத்துவில் ஆகிய தமிழர் பிரதேசங்களில் நேற்றுப் பெரும் களேபரம் ஏற்பட்டது.

சுனாமி அலைகள் ஆர்ப்பரிப்பதாக நேற்றுக் காலை பரவிய செய்தியால் வடமராட்சிப் பிரதேசத்தின் கரையோரப் பகுதிகளில் மீளக் குடியமர்ந்த மக்கள் அவசர அவசரமாக அங்கிருந்து வெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர். அங்குள்ள பாடசாலைகளும் உடன் மூடப்பட்டு மாணவர்களும் ஆசிரியர்களும் வெளியேறி வேறு இடங்களுக்குச் சென்றனர்.

ஆர்ப்பரிப்பதாகப் பரவிய செய்தியாலேயே இந்தக் களேபரம் ஏற்பட்டது. இதனால் சுப்பர்மடம், சக்கோட்டை, பொலிகண்டி, முனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் நாலாபக்கமும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## உதவிகளைச் சமமாகப் பகிர்ந்தளிக்க வலியுறுத்தி மன்னாரில் நேற்றுப் பேரணி


மன்னார்.ஜன.29

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சர்வதேச உதவிகள், பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கும் சமமாக பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி மன்னாரில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது. ஆயிரக்கணக்கானவர்கள் இதில் கலந்துகொண்டு தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

காலை 10.30மணிக்கு மன்னார் வைத்தியசாலை முன்பாக பேரணி ஆரம்பமானது. நகரின் பிரதான வீதிகள் வழியாக அது மன்னார் செயலகத்தைச் சென்றடைந்தது.

புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன் , தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம்

(16ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் தலைமை தாங்கிச் செல்வதையும் பேரணியில் கலந்துகொண்ட பொதுமக்களையும் படங்களில் காணலாம்.

கிழக்கு மாகாணத்தில் கடல் அலைகள்

## திருகோணமலையில் வீடமைப்புத் திட்டம்

கொழும்பு.ஜன.29

திருகோணமலை மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களை மீளக் குடியமர்த்துவதற்கான புதிய வீடமைப்புத் திட்டங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை திருகோணமலை மாவட்ட புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி அமைச்சர் நஜீப் ஏ.மஜீத் மேற்கொண்டுள்ளார் என அவரது அமைச்சின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

திருகோணமலை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடமைப்புத் திட்டம் ஏற்படுத்தப்படவேண்டும் என அமைச்சர் நஜீப் ஏ.மஜீத் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து கோரிக்கை விடுத்தார் என்றும்

அக்கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி திருகோணமலை மாவட்டப் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து திருகோணமலை மாவட்டத்தில் மாதிரி வீடமைப்புத் திட்டங்களை ஏற்படுத்துமாறு மகாவலி

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

### வடமராட்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில்

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 8 ஆயிரம் வீடுகள், 15 முன்பள்ளிகள்

## 'கியூடெக்' நிறுவனம் அமைத்துக்கொடுக்கும்

வலி.தெற்கு,ஜன.29

வடமராட்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 8ஆயிரம் வீடுகளையும் 15 முன்பள்ளிகளையும் அமைத்துக்கொடுக்க 'கியூடெக்' நிறுவனம் முன்வந்துள்ளது. அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீன்பிடிப்படகுகள், வலைகள், மீன்பிடி இயந்திரங்கள் என்பவற்றை வழங்கவும் அந்த நிறுவனம் தீர்மானித்துள்ளது. மேற்படி நிறுவன இயக்குநர் அருட்தந்தை சி.ஜெயக்குமார் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்திற்கமைய 8 ஆயிரம் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன. அத்துடன் இரண்டாயிரம் மீன்பிடிப் படகுகள் மற்றும் வலைகள், மீன்பிடி உபகரணங்கள், இயந்திரங்கள் வழங்கவும் 15 புதிய பாலர் பாடசாலைகள் அமைத்துக்கொடுக்கவும் திட்டமிடப்பட்டிருக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட கிராமங்களில் 2ஆயிரம் நிரந்தர வீடுகள், 2ஆயிரம் தற்காலிக வீடுகள் 5 முன்பள்ளிகள் என்பன அமைத்துக்கொடுக்கவுள்ளதுடன், ஆயிரம் மீன்பிடிப் படகுகள், இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

மருதங்கேணிப் பகுதியில் ஆயிரம் நிரந்தர வீடுகள், 5 முன்பள்ளிகள் போன்றவற்றை அமைத்துக்கொடுக்கவுள்ளதுடன், 500 படகுகள், மீன்பிடி உபகரணங்கள் போன்றனவும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், பருத்தித்துறைப் பிரதேசத்தில் ஆயிரம் நிரந்த வீடுகள், ஆயிரம் தற்காலிக வீடுகள், 5 முன்பள்ளிகள் என்பனவற்றை அமைத்துக்கொடுப்பதுடன், 500 மீன்பிடிப்படகுகள், மீன்பிடி உபகரணங்கள் போன்றவற்றையும் அவர்களுக்குத் தேவையான முன்பள்ளி உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. இவ்வாறு 'கியூடெக்' இயக்குநர் மேலும் தெரிவித்தார்.

(த-203-152)

## நலன்புரி நிலைய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

தென்மராட்சி,ஜன.29

வடமராட்சியில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்று வழங்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் மாணவர்களுக்கு உபகரணங்களை வழங்கினார்.

இதேவேளை -

சாவகச்சேரி, கச்சாய் வீதி புனித லிகோரியார் தேவாலய சுற்றாடலில் தங்கியுள்ள முல்லைத்தீவுப் பிரதேச மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் புத்தகப் பைகளும் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜினால் வழங்கப்பட்டன.

வெளிநாட்டில் உள்ள ஒருவர் அனுப்பிய நிதியில் இப்பொருள்கள் கொள்வனவு செய்து வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)

# வடமராட்சி கிழக்குக்கு உடனடியாக சமூக சேவை அலுவலரை நியமிக்குக

## பணிப்பாளரிடம் உதவி அரச அதிபர் கோரிக்கை

கொக்குவில்,ஜன.29

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிற்கு உடனடியாக சமூக சேவை உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு மருதங்கேணி உதவி அரச அதிபர் ரி. ஜெயசீலன் வடக்கு - கிழக்கு மாகாண சமூக நலத்துறைப் பணிப்பாளரிடம் கோரியுள்ளார்.

இதுவிடயமாக அவர் சமூக நலத்துறைத் திணைக்களப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த மாதம் இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தினால் மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள பல பிரதேசங்கள் முற்றுமுழுதாக நிர்மூலமாக்கப்பட்டதுடன் அப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்து பல்வேறு நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நலன்புரி நிலையத்தின் மேற்பார்வை, நிவாரணக் கொடுப்பனவு சம்பந்தமான பல்வேறு சேவைகள் சமூக சேவை உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படவேண்டியவை. ஆனால், இதுவரை காலமும் மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் சமூக சேவை அலுவலராகக் கடமையாற்றிய த.கிருபாகரன் கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு 01.01.2005 இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். - இவரது இடத்துக்கு ந.திருலிங்கநாதன் நியமிக்கப்படுவார் எனத் தாங்கள் அறிவித்திருந்தீர்கள். ஆனால் இதுவரை குறித்த அலுவலர் எனது பணிமனையில் கடமையேற்கவில்லை. இதனால் பணிகளை முன்னெடுப்பதில் சிரமம் எதிர்பார்க்கப்படுகின்றது. புதிய சமூக சேவை அலுவலரை எனது பணிமனைக்கு விடுவித்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்று அதில் உள்ளது.

(எ-76)

## யூனியன் கல்லூரியில் கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜன.29

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவில் எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் கணனிப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக்கற்கைநெறிக்கு பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் உள்வாங்கப்படுவர் என்று கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவுதிகதி எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகும். (எ-12)

# தையல், மனையியல் பயில்வோருக்கு இனிமேல் வங்கி மூலம் கொடுப்பனவு

## மாகாணப் பணிப்பாளர் அறிவிப்பு

கொக்குவில்,ஜன.29

பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கிவரும் வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள தையல் மற்றும் மனையியல் பயிற்சி நிலைய மாணவிகளின் மாதாந்தக் கொடுப்பனவுகள் இனிமேல் மாணவிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக அனுப்பிவைக்கப்படும்.

- இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் இ.இளங்கோவன் சகல பிரதேச செயலர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்தச் சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

இதுவரைகாலமும் பிரதேச செயலகங்கள் மூலம் மேற்படி கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்தது. 01.01.2005 முதல் இதில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த வருடம் முதல் தையல், மனையியல் பயிற்சி நிலைய மாணவிகள் அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பிக்க வேண்டும்.

மேலும் பயிற்சி வகுப்பு ஒன்றில் 25 பயிற்சியாளர்கள் மட்டும் பயிற்சிக்காகத் தெரிவுசெய்யப்படுவதுடன் அவர்களுக்கு நாள் ஒன்றிக்கு 50 ரூபா ஊக்குவிப்புப் படியாக வழங்கப்படும். எனினும் மாதர் அபிவிருத்தி நிலையப் பயிற்சியாளர்கள் கிராம அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளரின் அனுமதி பெற்று 30 மாணவிகளைச் சேர்த்துக் கொள்ளலாம். ஆனாலும் 2ஆவது தொகுதியிலுள்ள 5 மாணவிகளுக்கு மாதாந்த ஊக்குவிப்புப்படி வழங்கப்படமாட்டாது.

ஊக்குவிப்புக் கொடுப்பனவு மாணவிகளின் தினவரவின் அடிப்படையிலேயே வழங்கப்படும். இக்கொடுப்பனவை வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் நேரடியாக வழங்குவதற்கு தினவரவு, கொடுப்பனவு விவர அறிக்கை கிராம அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ஒவ்வொரு மாதமும் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டும். - என்று அதில் உள்ளது.

(எ-76)

## சொற்பொழிவு

குடத்தனை,ஜன.29

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக் கிழமைதோறும் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வில் நாளை 30ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ். பல்கலைக்கழக கல்வியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி 'மால்வண்ணன்' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார்.

(த-78)

# உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு மாணவர் பேரவையால் கொட்டகை

யாழ்ப்பாணம்,ஜன.29

திருநெல்வேலி உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் 3 லட்சம் ரூபா செலவில் கல்விக் கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இதுதொடர்பாக மாணவர் பேரவை விடுத்த செய்திக் குறிப்பில் -

இந்த ஆண்டு 200இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வித் தகைமை இருந்தும் இடவசதி இன்மை காரணமாக உயர் தொழில்நுட்பக் கல்வியினைப் பெறும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

இதனைக் கருத்திற்கொண்டே சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் இப்பணியினை மேற்கொண்டு வருகின்றனர். கொட்டகை அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இப்பணி நிறைவடைந்தவுடன் தகைமையுடைய அனைத்து மாணவர்களும் உயர்தொழில்நுட்பக் கல்வியினைத் தொடரலாம் என எதிர்பார்க்கின்றோம் - என்று உள்ளது. (எ-12)

# மத்திய மாகாண அமைச்சராகின்றார் இ.தொ.காவின் இராதாகிருஷ்ணன்

கண்டி, ஜன.29

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவர்களுள் ஒருவரும், மத்திய மாகாணசபை உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் இம்மாதம் 31ஆம் திகதி மத்திய மாகாண சபையின் அமைச்சர்களுள் ஒருவராக நுவரெலியா ஹோட்டல் ஒன்றில் மத்திய மாகாண ஆளுநர் மொண்டி கோபல்லாவை முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொள்ள இருக்கிறார் என மாகாணசபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே முன்னர் ஒருதடவை மாகாண சபையில் அமைச்சராகப் பதவிவகித்த அவருக்கு தமிழ்க் கல்வி அமைச்சுப் பதவியும், ஏனைய வர்த்தக, வாணிப, கைத்தொழில், உல்லாசப் பயணத்துறை அமைச்சுப் பதவியும் வழங்கப்படலாம் என்றும் நம்பகரமாகத் தெரிய வருகின்றது. முழுமையாக மத்திய மாகாணக் கல்வி அமைச்சுப் பதவியை அவர் கோரிய போதிலும் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளுக்கான அமைச்சுப் பதவியையே வழங்க ஆளும் தரப்பு இணங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(எ-க)

# சுனாமியில் உயிரிழந்த அரச ஊழியரின் குடும்பத்தினருக்கு விசேட சலுகைகள்

கொழும்பு,ஜன.29

சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்த அரச ஊழியர்களது குடும்பத்தினருக்கு சலுகை அடிப்படையில் பல்வேறு உதவிகளை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் கடந்த 26ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதன்படி அனர்த்தத்தில் உயிரிழந்த அரச ஊழியரொருவர் சேவையிலிருந்து இளைப்பாற வேண்டிய திகதிவரை அவரது சம்பளத்தை மாதாந்தம் அவரது குடும்பத்துக்கு வழங்குவதெனவும் அவர் ஓய்வுபெறவெண்டிய தினம் முதல் அவரது ஓய்வூதியத்தை அவரது குடும்பத்தினருக்கு வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களான பெற்றோரை அனர்த்தத்தில் பறிகொடுத்த பிள்ளைகள் 21 வயதைப் பூர்த்திசெய்த பின்னரும் திருமணம் செய்யாதிருப்பின் பெற்றோரின் ஓய்வூதியத்தைப் பெற உரித்துடையவர்களெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(த)

# கட்சி தாவுவதைத் தடுக்கவே இப்போது அமைச்சர் பதவி!

## மலையக மக்கள் முன்னணி விமர்சனம்

கண்டி,ஜன.29

மத்திய மாகாணசபை உறுப்பினர் வி.இராதாகிருஷ்ணன் மலையக மக்கள் முன்னணியுடன் இணைவதைத் தடுப்பதற்காகவே அவருக்கு அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொடுக்க இ.தொ.கா. பெரும் பிரயத்தனம் மேற்கொண்டது. இராதாகிருஷ்ணன் மனவிருப்பத்துடன் அமைச்சர் பதவியை ஏற்கப்போவதில்லை. பலவந்தமாக அவர்மீது அது திணிக்கப்படுகிறது என்கிறார் மலையக மக்கள் முன்னணியின் நிர்வாகச் செயலாளரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான எஸ்.அருள்சாமி.

இப்பொழுது மத்திய மாகாண சபையில் எமது மலையக மக்கள் முன்னணியின் அங்கத்துவம் நான்காக அதிகரித்துள்ளது. கூடிய விரைவில் அது ஆறாக அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

மத்திய மாகாண சபையில் அங்கம் வகிக்கும் இ.தொ.கா. உறுப்பினர் ஆர்.கோவிந்தராஜ் மலையக மக்கள் முன்னணியுடன் கடந்தவாரம் இணைந்துகொண்டார்.

அவரது கட்சித்தாவல் பற்றி சட்டத்தரணி அருள்சாமியிடம் நேற்று மத்திய மாகாண சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்த வேளையில் செய்தியாளர் ஒருவர் பிரஸ்தாபித்தார். அப்போதே அருள்சாமி மேற்கண்டவாறு கூறினார்.

நேற்று மத்திய மாகாண சபையின் கொள்கை விளக்க உரை மத்திய மாகாண ஆளுநர் மொண்டி கோபல்லாவினால் நிகழ்த்தப்பட்டது. அவ்வேளையில் மாகாண சபை உறுப்பினர் கோவிந்தராஜ் சபைக்குச் சமுகம் கொடுத்திருக்கவில்லை.

அருள்சாமி மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் மாகாண அமைச்சரும் இ.தொ.கா. உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணனும் மலையக மக்கள் முன்னணியோடு இணைவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கும்போதே கொட்டகலையில் இடம்பெற்ற இ.தொ.காவின் முக்கிய கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு ஏற்ப, அவருக்கு அமைச்சர் பதவியை வழங்க இ.தொ.கா. முன்வந்தது. மிகுந்த கட்டாயத்தின் பேரிலேயே அவருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படுகிறது.

இதன்மூலம் மலையக மக்கள் முன்னணியின் செல்வாக்கு எவ்வாறு அதிகரித்து வருகிறதென்பது புலனாகும் என்றார் அவர். (எ-க)

# ஊழல், மோசடி வழக்கில் எஸ்.பிக்கு பிணை அனுமதி

கொழும்பு,ஜன.29

வருமானத்திற்கு அதிகமான சொத்துச் சேர்த்தார் எனக் குற்றஞ் சுமத்தி முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கில் அவருக்குப் பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் இரண்டு வருடச் சிறைத் தண்டனையை அனுபவித்து வரும் எஸ்.பி.திஸாநாயக்க, நேற்று இந்த வழக்குக்காக வெலிக்கடைச் சிறையிலிருந்து. கொழும்பு மேல் நீதிமன்றத்திற்குக் கூட்டிவரப்பட்டார்.

வருமானத்திற்கு அதிகமாக 2கோடி 90 லட்சம் ரூபா சொத்துச் சேர்த்தார் என்று குறிப்பிடும் குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பத்திரம் அவருக்குக் கையளிக்கப்பட்டது. அவர் தாம் குற்றமற்றவர் என நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த வழக்கில் 25ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், ஒரு கோடி ரூபா சரீரப் பிணையிலும் செல்ல அவரை நீதிமன்றம் அனுமதித்தது. வழக்கு ஜூன் மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(எ-க)

# ஈராக்கில் நாளை பொதுத் தேர்தல்

## ஆஸ்திரேலியாவில் வாழும் ஈராக்கியர் நேற்று வாக்களிப்பு !



சிட்னி,ஜன.29

ஈராக்கில் நாளை நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் ஆஸ்திரேலியாவில் வாழும் அந்நாட்டு மக்கள் வாக்களிப்பை ஆரம்பித்துள்ளனர்.

ஆஸ்திரேலியா வாழ் ஈராக்கியர்கள் முதல் தடவையாக நேற்று வாக்களித்தனர். இந்தச் சநதோஷ வெளிப்பாட்டை அவர்கள் வீதிகளில் பாடல்களைப் பாடியும் நடனமாடியும் வெளிப்படுத்தினார்கள் என்றும் -

குதூகலமாகக் காணப்பட்டார்கள் என்றும் - ரொய்ட்டர் செய்தி நிறுவனம் அறிவித்தது.

நேற்று ஆஸ்திரேலியாவில் வாக்களித்த ஈராக் பிரஜை ஒருவர் கருத்து வெளியிடுகையில் தெரிவித்ததாவது:-

எனது விரல் நுனியில் வாக்களித்ததற்கான அடையாளமாக 'மை' பூசப்பட்டதும், ஈராக்கிய சுதந்திரத்தின் அடையாளமாக அதனைக் கருதினேன் - என்றார்.

14 நாடுகளில் தங்கியுள்ள 2 லட்சத்து 80 ஆயிரம் ஈராக்கிய மக்கள் நேற்றுத் தொடக்கம் நாளைவரை வாக்களிக்க இருக்கின்றனர்.

இதேவேளை -

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஈராக்கிய தேர்தலைச் சீர்குலைப்பதற்குக் கிளர்ச்சியாளர்கள் திடசங்கட்பம் பூண்டுள்ளனர். இதன் காணரமாக அதிக எண்ணிக்கையான வேட்பாளர்கள் தமது பெயர்களை வெளியிடாமல் உள்ளனர். அதேசமயம், வாக்குச்சாவடி அமைய இருக்கும் இடங்களையும் ரகசியமாக வைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் -

ஈராக்கில் நேற்றுமுன்தினம் நடந்த தாக்குதலில் 19 அமெரிக்கக் கடற்படையினரும் ஈராக் தேசியப் பாதுகாப்புப் படையினரும் உயிரிழந்தனர்.

ரமாடி நகரில் உள்ள அமெரிக்க இராணுவத்தளத்திற்கு வெளியே கார்க்குண்டுத்தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இதன் போதே மேற்படி இரு நாட்டுப் படையினரும் கொல்லப்பட்டனர்.

தேர்தல் நடவடிக்கைகளில் பங்குபற்றவென மேலும் 220 படையினர் அடங்கிய குழுவினரைப் பிரிட்டன் அனுப்புகின்றது.

இதற்கிடையில் -

ஈராக்கியத் தேர்தல் ஜனநாயகத்திற்கு விரோதமானது என்று துருக்கிப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் தேர்தல் மூலம் ஈராக்கிய நாடாளுமன்றத்துக்கு 275 அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட இருக்கின்றனர். பின்னர் இவர்கள் அமைச்சரவை ஒன்றைத் தெரிவுசெய்வார்கள். அத்தோடு, ஈராக்கிய அரசமைப்புத் தயாரிக்கப்படும்வரையும் அவர்கள் மேற்பார்வை செய்யவுள்ளனர். (க-8)

உலக அரங்கில்

# அவுஸ்விச் மரணமுகாம் விடுவிக்கப்பட்டு 60 ஆண்டுகள்

அவுஸ்விச்,ஜன.29

போலந்தின் தென்பகுதியில் இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற காலத்தில் ஹிட்லரின் நாஜிப் படைகள நடத்திய மரணமுகாம் சோவியத் படைகளால் விடுவிக்கப்பட்ட அறுபது ஆண்டுகள் நிறைவுவிழா நிகழ்ச்சியில், அங்கிருந்து உயிர்தப்பிய சுமார் இரண்டாயிரம் பேர் பங்கேற்றனர்.

அவுஸ்விச் முகாமில் ஹிட்லரின் நாஜிப் படைகளால் திட்டமிட்டுக்கொலை செய்யப்பட்ட - பெரும்பாலும் யூத இன மக்கள் உட்பட - பத்து லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு அஞ்சலி செய்யும் வகையில் அங்கு 38 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

அவுஸ்விச்சில் நடைபெற்ற இந்த நிகழ்வில - வைபவத்தில் - போலந்து, ரஷ்யா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளின் ஜனாதிபதிகளும், பிரதமர்களும் உரையாற்றினர்.

ஜேர்மனியில் நாஜிக்கள் பதவிக்கு வந்த காலகட்டத்தில் நிலவிய யூத எதிர்ப்புச் சூழல் எப்படிப்பட்டது என்று இஸ்ரேலிய பிரதமர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு நினைவுபடுத்தினார்.

யூதர்கள் அனுபவித்த பெரும் துயரத்தை மற்ற நாடுகள் கண்டுகொள்ளாமல் இருந்ததையும் அவர் விமர்சித்தார். சாம்பலிலிருந்து உயிர்த்தெழுந்த யூத மக்கள் மீண்டும் ஒரு தாய் நாட்டை ஏற்படுத்தினர் என்றும் இஸ்ரேல் பிரதமர் கூறினார்.

அவுஸ்விச் மரணமுகாமைச் சென்றடைந்த ரஷ்யப் படைப்பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான மன்றத்தின் கூட்டம் நிகழ்வின் முன்னதாக நடைபெற்றது. அப்போது உரையாற்றிய ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், "யூத எதிர்ப்புவாதத்தைக் கண்டும் காணமல்விடும் உரிமை எவருக்கும் இல்லை" - என்று தெரிவித்தார்.

பாசிஸத்தை ஒழிக்கவேண்டும் என்பதற்காக வேறெந்த நாட்டை விடவும் கூடுதலாகப் போராடியிருக்கும் ரஷ்யாவில் யூத எதிர்ப்பு உணர்வுகள் மறுபடியும் தலைதூக்குவது கண்டு வெட்கப்படுகிறார் என்றும் புடின் கூறினார்.

பிரான்ஸை ஜேர்மனி ஆக்கிரமித்திருந்த போது அவுஸ்விச்சுக்கு நாடு கடத்தப்பட்டிருந்த 80 ஆயிரம் பிரஞ்சுப் பிரஜைகளை நினைவு கூரும் விதமாக பிரான்ஸ் ஜனாதிபதி ஜெக்ஷிராக் கொடியேற்றினார்.

"நாடு கடத்தப்பட்டவர்களில் கிட்டத்தட்ட அனைவருமே யூதர்கள்தான் இவர்களை நாடு கடத்தியதற்கான பொறுப்பை பிரான்ஸ் ஏற்கத் தான் வேண்டும்" - என்று ஷிராக் தெரிவித்தார். (க-8)

# பயங்கரவாதச் சந்தேக நபர்களை வீட்டுக்காவலில் வைக்க அதிகாரம்

## பிரிட்டிஷ் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது

லண்டன்,ஜன.29

பிரிட்டனில் அந்நாட்டுப் பிரஜைகள் மற்றும் அந்நிய நாட்டவர்கள் எவருக்காவது பயங்கரவாதத்தில் ஈடுபாடு உள்ளதா என்ற சந்தேகத்தின் பேரில் அவர்களை வீட்டுக்காவலில் வைக்க ஆணையிடுவது-

அவர்களைத் தீவிரமாகக் கண்காணிப்பது-

அவர்களின் கணனிகளைக் கண்காணிப்பது - போன்ற செயற்பாடுகளுக்கு பிரிட்டன் அமைச்சர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இதையடுத்து, மனித உரிமை அமைப்புக்கள் பிரிட்டன் அரசுமீது கூறிவரும் விமர்சனங்களுக்கு அரசு பதில்கூறி வருகிறது.

பிரிட்டனில் எண்ணற்ற கொலைகள் மற்றும் அழிவுகளைத் தோற்றுவிக்க முயல்வோரிடமிருந்து அந்நாட்டு சமுதாயத்தைப் பாதுகாக்கவே இந்தத் திட்டங்கள் அவசியமாகின்றன.

-இவ்வாறு பிரிட்டன் பிரதமர் டொனி பிளேயர் தெரிவித்தார்.

இந்தப் புதிய அதிகாரங்கள் மிகச்சிலர் மீது மட்டுமே பிரயோகிக்கப்படும் என்று வலியுறுத்துகிறார் பிரிட்டன் உள்துறை அமைச்சர் சார்ல்ஸ் கிளார்க்.

அந்நிய நாட்டு பயங்கரவாத சந்தேக நபர்கள் பன்னிரண்டு பேரை பிரிட்டன் அரசு கால வரையறையற்ற முறையில் தடுத்து வைத்தது தவறு என்று அதியுயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததை அடுத்தே இந்தப் புதிய அதிகாரங்கள் நடைமுறைக்கு வந்துள்ளன. (க-8)

# உறவுகள் பாதிக்கப்படாத வகையில் இந்தியாவும் சீனாவும் நடந்து கொள்ளும்

## வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் தெரிவிப்பு



புதுடில்லி,ஜன.29

இந்தியா - சீனா இடையேயான உறவு கருத்து வேறுபாடுகளால் பாதிக்கப்படாத வண்ணம் இரு நாடுகளும் நடந்துக்கொள்ளும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் நம்பிக்கை தெரிவித்தார்.

'பாதுகாப்பு கல்வி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் கிழக்காசியாவில் மாறிவரும் பாதுகாப்பு' என்ற தொனிப் பொருளில் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நடந்த கருத்தரங்கு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:-

நம்பிக்கையும் ஒத்துழைப்புமே இரு நாடுகளின வளர்ச்சிக்கும் வலுவானது வாய்ப்பு என்பதனை இரு நாடுகளும் உணர்ந்துள்ளன.

எல்லைப் பிரச்சினை உட்பட அனைத்தையும் இரு நாடுகளும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையல் பேசித்தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது சாதாரண சாதனை அல்ல இந்திய - சீன இடையிலான உறவுகளை எதிர்மறையாகப் பார்ப்போருக்கும் இது நன்றாக தெரியும்.

இந்திய - சீன உறவு விரிவடையவும் பெருகவும் போதிய வாய்ப்புகள் உள்ளன. இது இரு நாடுகளுக்கும் பெருத்த நன்மையைத் தரும்.

சீனப்பிரதமர் இவ்வாண்டு இறுதியில் இந்தியாவிற்கு பயணம் செய்யத் திட்டமிட்டிருக்கிறார். அப்போது இருதரப்பு உறவுகள் இன்னும் வலுப்பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

'கிழக்கே பார்' என்ற இந்தியக் கொள்கை வெறும் கோஷம் மட்டுமல்ல. வலுவான பொருளாதார வளர்ச்சி ஜனநாயகத்தை காக்கும் உறுதி, நிலையான வளர்ச்சி இப்பகுதியில் பாதுகாப்பு உட்பட பல அம்சங்கள் இதில் அடங்கியுள்ளன.

கிழக்காசிய வளர்ச்சி இந்தியப் பாதுகாப்பிலும் வளர்ச்சியிலும் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் திறன் கொணடது. அந்த நாடுகளுடன் நட்புறவையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்தவே இந்தியா விரும்புகிறது.

பேரழிவு ஆயுதங்களின் பரவல், தீவிரவாதம் அதிகரித்தல், எரிபொருள் பற்றாக்குறை, கடத்தல், வருமானத்தில் ஏற்றத் தாழ்வு ஆகிய அபாயங்கள் கிழக்காசிய நாடுகளை மட்டுமல்ல இந்தியாவையும் அச்சுறுத்துகின்றன.

எனவே, பொருளாதார ஒத்துழைப்பு மட்டுமல்லாது பிறவகையிலும், ஒத்துழைப்பை வலுப்படுத்தவேண்டும். அது அமைதிக்கும், வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

கடந்த சில ஆண்டுகளாக ஜப்பானுடனும் இந்தியாவுக்கு நல்லுறவு அதிகரித்து வருகிறது. ஐ.நா. பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர் பதவிக்கு இரு நாடுகளும் தகுதி படைத்தவை.

ஜப்பானியப் பிரதமர் கொய்சுமியின் இந்திய விஜயதத்திற்குப் பிறகு இரு நாட்டு உறவுகளும் மேலும் வலுவடைய அடித்தளம் அமையும்.

உலக பொருளாதாரத்தின் புவியீர்ப்பு விசையாக ஆசிய நாடுகள் உருவெடுக்க வேண்டும் - என்று அவர் கூறினார். (க-8)




# அந்தமான், நிக்கோபாரில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கங்கள்

போர்ட்பிளேயர்,ஜன.29

அந்தமான் நிக்கோபார், கார்நிக்கோபாரின் கிழக்கு கடற்கரைப் பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டதென இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

அந்தமான் நிக்கோபார் தீவுகளின் தலைநகரான போர்ட் பிளேரில் இருந்து சுமார் 400 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள க்மோர்டா பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை 1.49, 2.07 மணியளவில் இந்த நில நடுக்கங்கள் ஏற்பட்டன.

ரிச்டர் அளவு கோலில் 5.5 புள்ளியாகவும் 5.1 புள்ளியாவும் இவை பதிவாகின என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பாதிப்புகள் ஏதும் ஏற்படவில்லை.

இதேவேளை, இந்தோனேஷியாவில் உள்ள சுமத்திராத்தீவின் கடற்கரையோரப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் 3.30 மணியளவில் சுமார் 5.4 ரிச்டர் புள்ளி அளவு நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.(க-8)

# ஆசிரியர்கள், மாணவர்கள் 1,000 பேர் நேபாளத்தில் தீவிரவாதிகளால் கடத்தல்?

கர்த்மண்டு,ஜன.29

நேபாளத்தின் இரண்டு வெவ்வேறு மாவட்டங்களிலிருந்து மாணவர்கள், ஆசிரியர்கள் என ஆயிரத்துக்கும் அதிகமானவர்களை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர் என உள்ளூர் வானொலியொன்று தெரிவித்தது.

நேபாளத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள சங்குவாசபா மற்றும் தாடிங் ஆகிய மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களே கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

சங்குவாசபா மாவட்டத்தின் 5 பாடசாலைகளைச் சேர்ந்த 650 மாணவர்களையும், 4 ஆசிரியர்களையும் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

தாடிங் மாவட்டத்திலுள்ள பாடசாலை ஒன்றைச் சேர்ந்த 400இற்கும் மேற்பட்ட மாணவர்களையும், ஆசிரியர்கள் சிலரையும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர். - என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

- இவ்வாறு கடத்திச் செல்லப்பட்ட மாணவர்கள் அனைவரும் ஆரம்பப் படசாலைகள் மற்றும் உயர்நிலைப் பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாணவர்களையும் ஆசிரியர்களையும் தீவிரவாதிகள் என்ன காரணத்திற்காகக் கடத்தினார்கள் என்பது தெரியவரவில்லை. (க-8)

# பாராட்டி வாழ்த்துகிறோம்

உலோகத் தொழில் விற்பன்னர்
திரு. லெட்சுமணன் கெங்காதரன் ஆச்சாரி அவர்கள்




இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 2004ஆம் ஆண்டிற்கான "கலாபூசணம்" விருதினைப் பெற்றமையைப் பாராட்டி எமதுஇதய பூர்வமான வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு மேன்மேலும் பல விருதுகள், பாராட்டுக்களைப் பெற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

*209/1, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (41421)(42-19-18)

அன்புடன்
**சந்திரன், கலா குடும்பத்தினர்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 | 30 |
| - | - |
| 12 | 12 |
| - | - |
| 1950 | 2004 |



## அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை

*(பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க ஊழியர்)*

அன்பு மனைவியும் பெற்ற பிள்ளைகளும்
ஏங்கி நிற்க எம்மைப் பிரிந்த தெய்வமே!
காலம் பல கடந்தாலும் உமை மறவோம்
என்றும் உம் நினைவோடு வாழ்வோம்.

இன்று (29-01-2005) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஐந்து வீட்டுத் திட்ட வீதி,*
*நாவற்குழி சந்தி.* (41422)(41-18-19

நினைவுகளைச் சுமந்து நிற்கும்:
**அன்பு மனைவி, பிள்ளைகள்,**
**உற்றார், உறவினர்,**

# நீங்காத நினைவில் ஈராண்டு

| அன்னையின் அணைப்பில் | ஆண்டவன் அரவணைப்பில் |
|---|---|
| 27 | 21 |
| - | - |
| 07 | 01 |
| - | - |
| 1937 | 2003 |



## அமரர் துரையப்பா துரைரத்தினம்

**திதி: 29-01-2005**

ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அப்பா
உங்கள் உறவுக்கு ஈடாகுமா?
ஈராண்டு ஒரு மாதம் போல் போனதப்பா
நீராண்ட வீடு களையிழந்து போனதப்பா
சடுதியில் மறைந்ததோ உங்கள் வாழ்வு
ஆறுமோ எங்கள் மனம்
அப்பா உங்கள் புன்னகையையும் குரலையும் கேட்க
எங்கள் முன்னிலையில் வருவீரா அப்பா?

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

*'கஜமுக வாசா'*
*சங்கானை மேற்கு,*
*பண்டத்தரிப்பு.*

*அன்பு மனைவி,*
*பிள்ளைகள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*

# மாரீசன்கூடலில் 253 குடும்பங்களுக்கு 'கியூடெக்' நிவாரணம்

மாதகல்,ஜன.29

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து மாரீசன்கூடல் பகுதியில் வசித்து வருவோருக்கு கியூடெக் நிறுவனத்தினால் அணமையில் நிவாரணம் வழங்கப்பட்டது.

இருநூற்றி ஐம்பத்து மூன்று குடும்பங்களைச் சேர்ந்த தொளாயிரத்துப்பதினெட்டுப் போ இந்த நிவாரணத்தைப் பெற்றனர்.

முல்லைததீவு, தாளையடி, செம்பியன்பற்று, ஆழியவளை போன்ற பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து மாரீசன்கூடல் பகுதியில் வசிப்போரும் இந்த உதவிகளைப்பெற்றனர்.

அருட்பணியாளர் யெ.பி.அன்ரனிதாஸ் தலைமையில் பங்குப்பணிமனையில் வைத்து உணவுப்பொருள்கள், பாத்திரங்கள் வழங்கப்பட்டதுடன் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு சிறுதொகை பணமும் அருட்திரு. எஸ்.ஜெயக்குமார் அடிகளாரால் வழங்கப்பட்டது.

(எ-95)

# சித்திரத்தேருக்கு கால்கோள் விழா

யாழ்ப்பாணம்,ஜன.29

ஈழத்துச் சிதம்பரம் என்றழைக்கப்படும் காரைநகர் சிவன் கோயிலுக்கு 39அடி உயரமுடைய சித்திரத் தேர் அமைக்கப்படவுள்ளது.

இந்தத் தேரை அமைப்பதற்கான 'கால்கோள் விழா' கடந்த செவ்வாய்க்கிழமை தைப்பூசத் தினத்தன்று இடம்பெற்றது.

இச் சித்திரத் தேர் அமைக்கும் பணியில், புகழ்பெற்ற சிற்பக் கலைஞர் ச.ஜெயகாந்தன் தலைமையில் தமிழகத்தைச் சேர்ந்த சிற்பக் கலைஞர்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

(10-204)

# வீதி பலத்த சேதம்

நவாலி,ஜன.29

ஆனைக்கோட்டை - நவாலி பிரதான வீதி அண்மையில் தொடர்ந்து பெய்த பெருமழையினால் மீண்டும் குண்டும் குழியுமாகப் பாரிய சேதமடைந்துள்ளது.

இதனால், வாகனங்கள் செல்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

(10-100)

# புதிதாக மதகு அமைப்பு

அரியாலை,ஜன.29

யாழ். முனீஸ்வரன் வீதியில் புல்லுக்குளத்திற்கும் - திறந்தவெளி அரங்கிற்கும் இடையில் செல்லும் வீதியில் புதிய மதகு அமைக்கும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

குளத்திற்கு வெள்ளம் வழிந்தோட வசதியாகப் புதிய மதகு அமைக்கப்பட்டுள்ளது.

(எ-17)

# கட்டாக்காலி நாய்களால் நீர்வேலியில் தொல்லை

அரியாலை,ஜன.29

நீர்வேலி தெற்கில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

பெரும்பாலும் வளர்ப்பு நாய்கள் கட்டி வளர்கப்படாமையால் அவை கட்டாக்காலியாக அலைந்து திரிந்து விசர்நோய்க்கு உள்ளாகின்றன என்று கூறப்படுகின்றது.

கட்டாக்காலிகளாக அலைந்துதிரியும் நாய்களைப் பிடித்து அழிப்பதற்கு வலி.கிழக்குப் பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ-17)

# விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு மரக்கறி வகைகள்

அரியாலை,ஜன.29

சுனாமியால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் உணவுத் தேவைகளுக்கென கொழும்பில் இருந்து விமானம் மூலம் கடந்தவாரம் மரக்கறி வகைகள் எடுத்து வரப்பட்டன.

இந்த மரக்கறி வகைகளில் அதிகமாகப் பூசனிக்காய்கள் அடங்கியிருந்தன.

பலாலிக்கு எடுத்துவரப்பட்ட இந்த மரக்கறி வகைகளை யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் பொறுப்பேற்றுப் பின்னர் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் உணவுத் தேவைக்கு அவற்றை வழங்கிவருகின்றனர்.

(எ-17)

# யோகாசன வகுப்பு

தென்மராட்சி,ஜன.29

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு சர்வ சாதனா சனசமூக நிலையத்தினரின் ஏற்பாட்டில் யோகாசனப் பயிற்சி வகுப்பு அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் பங்குபற்ற விரும்பும் இருபாலாரும் நாளைமறுதினம் திங்கட்கிழமைக்கு முன்னர் நிலையத்தில் தமது பெயர்களைப் பதிவுசெய்யுமாறு தலைவர் க.மோகனராஜலிங்கம் தெரிவித்துள்ளார்.

(10-202-117)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இராமநாதன் நுண்கலைக் கழக (இசை/ நடனம்/சித்திரமும் வடிவமைப்பும்)

## மாணவர்களுக்கான அறிவித்தல்

இராமநாதன் நுண்கலைக் கழக மாணவர்களுக்கான மூன்றாம் வருட இரண்டாம்அரையாண்டுப் பரீட்சைகள் 08-02-2005 இலும் இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் 10-02-2005 இலும் ஆரம்பமாகவுள்ளன.

மாணவர்கள் பரீட்சை நேர அட்டவணையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையிலும், இராமநாதன் நுண்கலைக் கழக விளம்பரப் பலகையிலும் பார்வையிடலாம்.

**துணைவேந்தர்**
28-01-2005 (சி40693)(46-18-19-42)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**

# கண்ணீர் அஞ்சலி

மாவைக் கந்தன் சிக்கன கடன் உதவுக் கூட்டுறவுச் சங்க
அங்கத்தவர் திரு.சண்முகநாதன் குலசேகரம்
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி கனகம்மா சண்முகநாதன்

அவர்கள் 27.01.2005 அன்று வியாழக்கிழமை காலமானதையிட்டு அன்னாரன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, துன்புற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*மாவைக்கந்தன் சிக்கன கடன்*
*உதவுக் கூட்டுறவுச் சங்கம், மாவிட்டபுரம்.*

**நிர்வாகத்தினர்,**
**அங்கத்தவர்கள்.**
(41427)(33-18-19-42)

# மரண அறிவித்தல்கள்

## சிதம்பரப்பிள்ளை வல்லிபுரம்

(Retired Admistrative assistant. Ceylon Electricity Board)



அல்வாய் மேற்கு திக்கத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை வல்லிபுரம் அவர்கள் 27.01.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - தெய்வானை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - குஞ்சுப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் நேசமலர், சிவகுமாரன் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), ஜெயக்குமாரன் (பிராந்திய மருந்து விநியோகப்பிரிவு, பி.சு.சே.ப.பணிமனை - கிளிநொச்சி), வசந்தரூபா (யா/நெல்லியடி மெ.மி.த.க), திருக்குமாரன் (யா/வல்வை சிவகுரு வித்தி.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குணச்சந்திரன், சிவரூபினி (ஆஸ்திரேலியா), ஞானவசந்தி (கிளி.கனகபுரம் ம.வி.) ஆகியோரின் மாமனாரும் தர்சினி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), சத்தியதர்சன் (யா/ஹாட்லிக் கல்லூரி), கௌரிதரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2005) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியை திக்கம் பொது மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

*அல்வாய் மேற்கு,*
*திக்கம்.*
*(41429)(42-18-19)*

தகவல்:
**வ. திருக்குமாரன்**
**(சதீஸ் - மகன்).**



## கார்த்திகேசு செல்வரட்ணம்

*(இளைப்பாறிய நில அளவையாளர்)*

## திருமதி செல்வரட்ணம் நாகராணி

பிள்ளையார் வீதி, ஆனைக்கோட்டை வடக்கு, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்களான செல்வரட்ணம், நாகராணி ஆகியோர் முறையே 28.01.2005 வெள்ளிக்கிழமை, 27.01.2005 வியாழக்கிழமை அன்று காலமானார்கள்.

இவர்களின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

*ஆனைக்கோட்டை.*
*(41430)(33-42-18-19)*

தகவல்:
**கார்த்திகேசு, விக்கினேஸ்வரன்**
**(சகோதரர்கள்)**

## திருமதி சிவபாதம் தேவகுமாரி

(தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்-விவசாயபீடம்)

அச்சுவேலி, பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாதம் தேவகுமாரி 27.01.2005 வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் விஜயரத்தினம்-காலஞ்சென்ற யோகம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற சுப்பையா மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும் சிவபாதத்தின் அன்பு மனைவியும் விஜயகுமாரி (கனடா), சாந்தகுமாரி (சுவிஸ்), உருத்திரலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாஸ்கரன், பாமா, கணேசமூர்த்தி, பரஞ்சோதி (ஜேர்மனி), சுசிலாதேவி, யோகநாதன் (ஆசிரியர்), பத்மலோஜினி (ஜேர்மனி) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஈஸ்வரபாதம் (ஜேர்மனி), சிவனொளிபாதம் (அதிபர்-கிளிநொச்சி), மங்கையற்கரசி, மல்லிகாதேவி (வவுனியா), காலஞ்சென்றவர்களான உதயபாதம், விக்கினேஸ்வரன் மற்றும் பரமேஸ்வரி (ஆசிரியர்-கிளிநொச்சி), ஜெயமோகன் (கனடா), ரஞ்சித்குமார் (சுவிஸ்), பிரியா (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் சாம்பவி (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), சாரங்கன் (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.01.2005 வியாழக்கிழமை பத்தமேனியில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்நிதி வீதி,*
*பத்தமேனி, அச்சுவேலி.*

தகவல்:
**சிவபாதம்**
**(இன்பன்-கணவர்).**

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837.

# இணக்கம் வருவதில் சுணக்கம் ஏன்?

இருப்புக்காகவும், உரிமைகளுக்காகவும் போராடி வந்த ஈழத்தமிழர்கள் புதியதோர் பிரச்சினைக்கு இப்போது முகம்கொடுக்க நேரிட்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்த அழிவுதான் அது.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அழிவுகள் புதியனவல்ல. காலங்காலமாக அவர்கள் சந்தித்த இனவாதப் பேரழிவுகள் கணக்கிட முடியாதவை.

ஆனால், இது வித்தியாசமான அழிவு.

திடீர் இராணுவ ஆக்கிரமிப்புகளிலிருந்து தப்புவதற்காகத் தமது உடைமைகள், சொத்துக்களைக் கைவிட்டு - போட்டது போட்டபடி இருக்க - தமது கிராமங்களில் இருந்தும், நகரங்களில் இருந்தும் ஓடித்தப்பிய சம்பவங்கள் தமிழரின் அனுபவப் பாடங்கள்தான். அப்படி ஓடித்தப்பும்போது உற்றார், உறவுகளைப் பல நூற்றுக்கணக்கில் இராணுவத் தாக்குதல்களுக்குப் பறிகொடுத்த - பலிகொடுத்த - அனுபவங்களும் புதியனவல்ல.

அவை பேரினவாதச் சீற்றத்தால் எதிர்கொண்ட அழிவுகள். இப்போது எதிர்நோக்கப்படுவது, இயற்கைச் சீற்றத்தால் அனுபவிக்க நேர்ந்த அவலங்கள்.

இந்த இரண்டிலுமே பாதிப்புகளுக்கு எதிராக நிமிர்ந்து நிற்பதாகப் போராடவேண்டியவர்களாக இருக்கின்றார்கள் தமிழ் மக்கள்.

இப்போது ஆழிப்பேரலை அனர்த்தத்தில் இருந்து மீளுவதற்கான போராட்டம் முன்னெடுக்கப்படும் கட்டம்.

இதையே புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் வேறுபடுத்திக் காட்டுகின்றார்.

"போராட்டம் என்ற வகையில் அரசியல் உரிமைக்காகப் போராடுவது வேறு. ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நமது மக்களின் மீள் கட்டமைப்புக்கான பொருளாதார வளத்துக்காகப் போராடுவது வேறு.

"ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென உலகின் அனுதாபத்தால் கிடைத்த நிதி, அந்த அனர்த்தத்தில் அதிகம் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேசத்திற்கும் உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். அதற்காகத்தான் நாம் அரசுடன் பேச்சுக்களை நடத்திவருகின்றோம்." - என்று மதியுரைஞர் பாலசிங்கம் கூறியிருக்கின்றார். முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் அகதிகள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறியிருக்கின்றார்.

உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டம் வேறு, பொருளாதார வளத்தைப் பெறுவதற்கான போராட்டம் வேறு என்று அவர் சுட்டிக்காட்டினாலும், இரண்டு விவகாரங்களையுமே இலங்கை அரசு சேர்த்துப் பார்ப்பதையும், இவ்விடயத்தில் இலங்கை அரசின் போக்கில் தங்களுக்குள்ள சந்தேகங்களையும் புட்டுக்காட்ட அவர் தவறவில்லை.

"உலக நாடுகள் பெருமளவு நிதியை உதவியாக வழங்க வாக்களித்துள்ளன. ஆனால், இந்த உதவிகள் இலங்கை அரசு ஊடாகத்தான் வரவேண்டியுள்ளன. ஆனால், அரசு இந்த உதவி நிதியைச் சரிவரப் பங்கிட்டு எமது மக்களுக்கு அளிக்குமா என்பதில் எமக்குச் சந்தேகம் உள்ளது.

"சிங்கள அரசு இந்த ஆழிப்பேரலை அனர்த்தத்தைத் தனது அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்துகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு என வழங்கப்பட்ட உதவியை வேறு வழிகளில் தனது அரசைப் பலப்படுத்தவும், தனது இராணுவ இயந்திரத்தைப் பலப்படுத்தவும், தனது அரசியல் அதிகாரத்தை நிலைப்படுத்தவும் பயன்படுத்தலாம் என்ற நோக்கில் அரசு செயற்படுகின்றது." - என்று விடயங்களை அம்பலப்படுத்தியிருக்கின்றார் பாலசிங்கம்.

ஆழிப்பேரலை அனர்த்தப் பாதிப்புகளுக்கு உதவுவது குறித்து ஆராய்வதற்காக உதவும் நாடுகள் எதிர்வரும் 6 ஆம் திகதி பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் கூடுகின்றன. அங்குதான் உதவுதொகைகள் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்படவிருக்கின்றன.

அதற்கு முன்னர் -

சர்வதேச சமூகம் வழங்கப்போகும் உதவியை எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்து இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் தமக்குள் ஓர் இணக்கமான ஏற்பாட்டைச் செய்துகொள்ள வேண்டும் என சர்வதேச சமூகம் வற்புறுத்தியுள்ளது. 'முதலில் இணக்கமான ஏற்பாடு; பின்னரே உதவி' என்பதுதான் இலங்கையைப் பொறுத்த வரை சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு.

ஆனால், சர்வதேச உதவுதொகையில் தமிழர் தரப்புக்கு நியாயமான பங்கைப் பகிர்ந்தளிக்கும் ஓர் ஏற்பாட்டுக்கு வராமல் - அதற்கான விட்டுக்கொடுப்புக்களுக்கு இணங்காமல் - இழுத்தடிக்கின்றது அரசு.

என்றாலும், இணக்கமான ஒரு நிலை ஏற்பட்டுவிடும் என்பது போல பாசாங்கு பண்ணவும் அரசுத் தரப்புத் தவறவில்லை.

இணக்கநிலை ஏற்படுவதுபோல காட்டிக்கொண்டே காலத்தை இழுத்தடித்து, சர்வதேச உதவிகளைத் தாராளமாகப் பெற்றுவிடலாம் என்று அரசுத் தரப்பு திட்டம் தீட்டுகிறது போலும்.

சர்வதேச சமூகம் அந்தத் திட்டத்துக்கு எடுபடுமா, அதனூடாக ஏமாளியாகுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.



சுவீடன் நாட்டுப்பத்திரிகையாளர் திருமதி அனிற்றி வெஸ்ரர் லன்ட் தலைமையிலான குழு நேற்று வடமராட்சிக்கு விஜயம் செய்தது. இக்குழுவினர் நெல்லியடியில் உள்ள அனர்த்தகால நிவாரணச் செயலகத்தில் நிலைமைகளைக் கேட்டறிவதையும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களைஅங்கு கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: - கரவெட்டிச்செய்தியாளர்)

## சுவீடன் பத்திரிகையாளர் குழுவினால் அத்தியாவசியப் பொருள்கள் கையளிப்பு

கரவெட்டி.ஜன.29

வடமராட்சிப் பிரதேசத்தில் சுவீடன் நாட்டுப் பத்திரிகையாளர் குழு, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள், உலர் உணவுப் பொருள்கள் என்பனவற்றை வழங்கினர்.

நேற்று வெள்ளிக்கிழமை வருகை தந்த இக்குழுவினர், மருந்துப் பொருள்கள், உலர் உணவுவகைகள், குழந்தைகளுக்கான பாவனைப் பொருள்கள் என்பனவற்றை வடமராட்சி சுனாமி அனர்த்த நிவாரணப் பணிமனையில், பணிமனையின் இணைப்பாளர் பாலையா, சீ.வி.கே. சிவஞானம் ஆகியோரிடம் கையளித்தனர்.

இவர்கள் மேலதிகமாகத் தேவைப்படும் அத்தியாவசியப் பொருள்களின் பட்டியலையும் பெற்றுச் சென்றனர்.

இதேவேளை - மேற்படிக் குழுவுக்குத் தலைமை வகித்த பத்திரிகையாளர் திருமதி அனற்றி வெஸ்ரக் லண்ட் உதயனுக்குத் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது:-

வடபகுதி மக்கள் சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்குள்ள மக்களின் நிலைமையைச் சுவீடன் நாட்டுப் பத்திரிகைகளினூடாக அங்குள்ள மக்களுக்குத் தெரிவித்தோம்.

அந்நாட்டு மக்களினால் பெருந்தொகையான பொருள்கள் வடபகுதி மக்களுக்கு வழங்கப்பட்டன. அவை யாவற்றையும் [illegible]க்கு கொண்டு வந்து கையளித்ததில் ம[illegible]டைகிறோம்.

[illegible]பாதிப்புற்ற மக்களுக்குத் தேவையான [illegible] உதவிகள் வழங்க நாம் தயாராக இருக்கிறோம். தேவையான உதவிகளைத் தெரியப்படுத்துவதன் மூலம் அவற்றை உடனடியாகப் பெற்றுத் தருவோம் - என்றார். (8-70-204)

## பாதிப்புற்றோரை மீளக்குடியமர்த்தும் போது ஐ.நா.விதிகளைக் கடைப்பிடிக்கக் கோரிக்கை

கொழும்பு.ஜன.29

சுனாமி அனர்த்தத்தால் தமது சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்தோரை மீளக் குடியர்த்தும்போது ஐ.நா.சபையின் விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென உதவி வழங்கும் நாடுகள் அரசுக்குத் தெரிவிப்பதாகச் சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ.நா.சபையின் கொள்கைப் பிரகடனத்தின் 9 (1) இன் விதிகளின்படி இடம்பெயர்ந்துள்ள மக்கள் தமது விருப்பத்திற்கேற்பத் தாம் குடியிருக்கும் இடங்களைத் தெரிவுசெய்து கொள்வதற்கு அனுமதிக்கப்படல் வேண்டுமெனவும் நாட்டில் அவசியம் ஏற்படாத விடத்து இடம்பெயர்ந்தோர் தமது முன்னைய வதிவிடங்களில் மீளக்குடியமர விரும்புபவர்களாயின் அவர்களுக்கு அவ்வாய்ப்பு வழங்கப்படல் வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் குறிப்பிட்ட பிரதேசமொன்றில் குடியமர விரும்பினால், அதற்கு அனுமதியளிக்கப்படல் வேண்டுமெனவும் இவ்வாறான தேசிய அழிவில் சிக்கி குடிபெயர்ந்தோருக்கு பிற நாடொன்றில் புகலிடம் கோரவும் உரித்து உண்டு எனவும், இவ்விதம் குடிபெயர்ந்தோர் எவரும் ஒதுக்கப்படும் இடத்தில் குடியமருமாறு வற்புறுத்தப்படலாகாது எனவும் ஐ.நா. பிரகடனத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விதிமுறைகளுக்கு அமையவே இடம்பெயர்ந்துள்ள மக்கள் மீளக்குடியமர்த்தப்படல் வேண்டுமென்றே உத்தியோகபூர்வ அறிக்கையினை உலக வங்கி உள்ளிட்ட உதவி வழங்கும் நாடுகள் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

## கொடிகாமம் உப.அலுவலகம் முழுமையாக இயங்குவதற்கு நடவடிக்கை வேண்டும்

### பிரதேச செயலரிடம் மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்.ஜன.29

கொடிகாமத்தில் இயங்கிவரும் சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் உப அலுவலகம் முழுமையாக இயங்க உரிய நடவடிக்கையெடுக்கப்படவேண்டுமென அப்பகுதி மக்களும் வர்த்தகர்களும் சாவகச்சேரி பிரதேச செயலரைக் கோரியுள்ளனர்.

பரந்த பரப்பளவையும், கூடுதலான கிராம சேவகர் பிரிவுகளையும் கொண்டுள்ள தென்மராட்சி கிழக்குப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையின் பேரிலும், [illegible]லுவலக நடைமுறைகளைப் பரவலாக்கும் அரசின் திட்டத்திற்கமையவும் இவ் உப அலுவலகம் சில மாதங்களுக்கு முன்னர் திறந்துவைக்கப்பட்டிருந்தது.

இந்த அலுவலகத்திற்கென உப.பிரதேச செயலர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் ஆளணியினர், தளபாட வசதிகள் என்பன அரச அதிபரினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதோடு, விடுமுறை நாள்கள் தவிர்ந்த ஏனைய தினங்களில் தினமும் முழுமையாக இச்செயலகம் பொதுமக்களுக்குச் சேவையாற்றுமெனவும் அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், இந்த அலுவலகத்தின் மூலம் விடயங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியாதிருப்பதாகவும் சாவகச்சேரியிலுள்ள தலைமை அலுவலகத்திற்குச் சென்று அவற்றை நிறைவேற்றிக்கொள்ளுமாறும் பொதுமக்கள் திருப்பியனுப்பப்படுவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது சகல பிரதேச செயலகங்களிலும், புதிய ஆண்டுக்கான வரிப்பத்திரம் விநியோகிக்கப்படுகின்ற போதிலும் கொடிகாமம் அலுவலகத்தில் அது இல்லாமையினால் அப்பகுதியைச் சேர்ந்த வாகன உரிமையாளர்கள் பலத்த சிரமத்தின் மத்தியில் சாவகச்சேரிக்குச் சென்று காலதாமதமாகவே அவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (10-15)

## அம்பாறை மாவட்டத்தில் வீடிழந்த குடும்பங்களுக்கு 300 வீடுகள்

காரைதீவு.ஜன.29

சம்மாந்துறை றி-டிரக் இன்ரர்நஷனல் (Re-direct International) நிறுவனம் அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகளை அமைத்து வழங்கவுள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக செந்நெல் கிராமம், அன்வர் இஸ்மாயில் புரத்தில் 300 வீடுகளை அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா அண்மையில் இடம்பெற்றது.

'ரெடி' நிறுவனத் தலைவர் ரமீஸ் அப்துல்லா தலைமையில் இடம்பெற்ற இவ் விழாவில் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில், நம்பிக்கையாளர் சபைத் தலைவர் புகாரி மௌலவி உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இத்திட்டத்தின் முதலிரு வீடுகளை அமைப்பதற்குப் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் நிதி வழங்கியுள்ளார். சம்மாந்துறை மெஸ்டா அமைப்பு இத்திட்டத்துக்கு 75 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. (10-202)

## நாளை

தை 17
30.01.2005
ஞாயிற்றுக்கிழமை
திதி : பஞ்சமி
முன் இரவு 10.21 வரை
நட்சத்திரம் : உத்தரம்
காலை 9.32 வரை
கரிநாள்
சுபநேரம் : 9.36 - 11.06
ராகுகாலம் : 5.06 - 6.36
(யாவும் பழைய நேரப்படி)

## வீதி விளக்குகள் பொருத்தும் வேலைகள் யாழ்.நகரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்.ஜன.29

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வீதிகளுக்கு மின் விளக்கு பொருத்தும் நடவடிக்கைகளை மின்சார சபை ஆரம்பித்துள்ளதாக யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்தார்.

மின் விளக்குப் பொருத்துவதற்காக நிக்கொட் நிறுவனம் 68 லட்சத்து 54 ஆயிரம் ரூபாவை யாழ்.மாநகரசபையூடாக இலங்கை மின்சாரசபைக்கு வழங்கியுள்ளது.

கடந்த 15 ஆம் திகதியில் இருந்து மின் விளக்குகள் இதுவரை பொருத்தப்படாத யாழ்.நகர வீதிகளுக்கு மின்விளக்குகளைப் பொருத்தும் நடவடிக்கைகளை மின்சாரசபை ஆரம்பித்துள்ளது.

அடுத்த மாதம் முதல் நகர வீதிகளில் புதிய மின்விளக்குகள் ஒளிர விடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (8-7)

## உதயவாக்கு

நாள்கள் ஒன்றையொன்று தொடர்கின்றன. என்றாலும் ஒரு நாள் போல மற்றொருநாள் இருப்பதில்லை. - செனெகா.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

கலர்மீன்கள், மீன்தொட்டிகள், லவ்பேட்ஸ், யாவா, பிஞ்சஸ், ஆபிரிக்கன் லவ்பேட்ஸ், கொக்கொடைல் குருவிகளும், கூடுகளும் மற்றும் அடுக்குச் செவ்வரத்தை, றோசாக் கன்றுகள், குறோட்டன், பூச்சாடிகள் அனைத்தும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11, சீனியர் லேன், தட்டாதெருச் சந்தி, வண்ணார்பண்ணை, யாழ்பபாணம். (41246)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம. (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (41411)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

Pure Bred Dobbermann Pincher (Issabella, Blue ஆகிய நிறங்களில்) மற்றும் Great Dane நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (41412)

### வீடு வளவு விற்பனைக்கு

உடுவில், சத்தியபுரம் தேவாலயத்திற்கு அருகில் 7½ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: து.செல்லையா, சோதி வேம்படி ஒழுங்கை, மானிப்பாய். தொலைபேசி இல. 222 2413. (41405)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், இராசேந்திரா வீதியில் இல.10 இல் அமைந்துள்ள வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பத்மநாதன் மாலா, 91, டேவிற வீதி, யாழ்பபாணம். 0776 969467. (41353)

### மாடி வீடு விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் 4000 சதுரஅடி கொண்டதும் நிலத்தின்கீழ் அறைகளுடன் சுற்றுமதில்களுடன் கூடியதுமான 6பரப்புக் காணியில் மாடி வீடு உடனடியாக (மேலதிக கட்டடத்துடனும்) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: க.சிவராஜா, "ராஜவாசா", இல.151, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2873 (சிவராஜா), 0776203974 (மகா). (41383)

### மாடி வீடு வாடகைக்கு

"சிவனடி", இல.141, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் சகல வசதிகளுடனும் கூடிய மாடி வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 0776016257. (41342)

### மோ.சைக்கிள் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலருக்கும் மோட்டார் சைக்கிள் வாடகைக்கு வழங்கப்படும். தொடர்பு: 360/5, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். - T.P.: 0776544544, 077 6660177. (40436)

### தவறிவிட்டது

உடுவிலைச் சேர்ந்த முத்துச்சாமி றஜீஸ் என்பவரின் G.C.E. O/L பரீட்சைச்சான்றிதழ் யாழ்.பஸ்நிலையப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மு.றாஜீஸ், உடுவில் வீதி, மானிப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (41404)

செபிரதிட்குமார் என்பவரது பேர்ஸ், அஅட்டை (773633142V), மோ.சா. அனுமதிப்பத்திரம், HNB Commercial Bank ATM Cart என்பன 26.01-2005 இல் சுன்னாகத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பங்களா லேன், மல்லாகம என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P 0773086962 தகுந்த சன்மானம் வழங்கப்படும். (41410)

### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 31.01.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சூட்டி பாம் - வட்டுக்கோட்டை, R.S.K. பாம் - உடுவில், சுனணாகம், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (40990)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தவரும் ஆஸ்திரேலியா பிரஜாவுரிமையுடைய கடமையுடன் கணக்காளர் பிரிவில் கல்வியை மேற்கொண்டுள்ள திருவோணம், 28 வயது, உயரம 5'7" அழகிய மணமகனுக்கு அழகான படித்த மணமகள் தேவை. புகைப்படம், ஜாதகத்துடன தொடர்பு கொள்ளவும். விண்ணப்பங்கள் மீண்டும் திருப்பி அனுப்பப்படும். விளம்பர இல.2486 C/o உதயன், யாழ்ப்பாணம். (41397)

### மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்து 26 வயதுடைய பட்டதாரி மணமகளுக்கும் 26 வயது பட்டப்படிப்பு படிக்கும் மணமகனுக்கும் லண்டன், கனடா, அமெரிக்கா நிரந்தர பிரஜாவுரிமை உடைய பொறியியலாளர் மணமகனும், படித்த அழகான மணமகளும் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2485. மே/பா உதயன், யாழ்ப்பாணம். (41387)

### திருமண சேவை

எம்மிடம் உள்நாடு, வெளிநாடு (பிரஜா உரிமை உள்ள) மணமகன், மணமகளின் ஜாதகங்கள் உண்டு. போட்டோ, ஜாதகத்துடன தொடர்பு கொள்ளவும். M.ரவீந்திரன், துர்கை அம்மன் வீதி, சாவகச்சேரி. (41287)

### பணிப்பெண் தேவை

நோயாளியைப் பராமிப்பதுடன் வீட்டு வேலைகளையும் செய்யக்கூடிய நடுத்தர வயதுடைய பணிப்பெண் தேவை. உணவு, தங்குமிட வசதியுடன் வேதனமாக ரூபா 4000/- வழங்கப்படும். தொடர்பு: நா.கனகம்மா, 43/1, யமுனா வீதி, நல்லூர். (41393)

### கடற்றொழிலாளர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.29

பருத்தித்துறை, முனைகடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க வருடாந்த கூட்டம் இன்று சனிக கிழமை முற்பகல் 10 மணிக்கு சென்.தோமஸ் சனசமூக நிலைய மண்டபத்தில் தலைவர் வ.இ.அருள்தாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (8-202)

### தொலைபேசி தேவை

*மோட்டோறோலா அல்லது RL தொலைபேசி விற்க விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

**எரிக்கணேஸ் மூக்குக் கண்ணாடி அகம்,**
566.ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
T.P.: **222 2486**

### வீடு, காணி விற்பனைக்கு

**பருத்தித்துறை, 2ஆம் குறுக்குத் தெருவில் கல்வீட்டுடன் சேர்ந்த காணியும், குடத்தனையில் பெரிய வயல் காணியும், உடனடி விற்பனைக்குண்டு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல: 0777118693 அல்லது சபா ரவீந்திரன், சட்டத்தரணி, பருத்தித்துறை.**

(சி-40685)

## VACANCIES
## HUMEDICA LANKA

SANGARAPILLAI RD. MANIPAY

**OFFICE MANAGER/CO-ORDINATOR**
**Family Sponsorship Programme/at Manipay**

Qualifications:

**1. Administrative skill**
**2. Computer Specialist**
**3. Fluent in English**

***Attractive Remuneration (Phone: 0777-238300)***

**Project Assistant**
**(உதவித் திட்டப் பணிப்பாளர்)**

தகைமை:

1. உயர்தர பரீட்சை (க.பொ.த.உ)
   மோட்டார் சைக்கள் சாரதி அனுமதிப்பத்திரம்
2. Field Work/ Experience வெளிக்கள/அனுபவம்
   ஊதியம் / நேரில்

நிர்வாகம்,
**கியுமெடிகா இலங்கை,**
**மானிப்பாய்.**

(41407)(42-21-18)

### திரைப்பட வழங்குநர் சங்கக் கலந்துரையாடல

யாழ்ப்பாணம்,ஜன.29

திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச்சங்கத்தின் மாதாந்தக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

சங்கத் தலைவர் செல்வம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு உதவிகள் வழங்கியமை தொடர்பாகவும் சங்க வளர்ச்சிக்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

திரைப்பட வழங்குநர் சங்கத்தின் அனுமதி அட்டையின்றி, இன்னமும் பிரதிகள் வழங்குபவர்கள் மீது எவ்வாறான நடவடிக்கைகள் மேற கொள்ளலாம் எனவும் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் திரைப்பட வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் செழியன் மற்றும் உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர். (8-204)

### வீதி திருத்தம்

நவாலி,ஜன.29

நீண்டகாலமாக திருத்தப்படாமலிருந்த நவாலி கலையரசு வீதி சமுர்த்தி திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் செப்பனிடப்பட்டு வருகின்றது. (8-100)

### கண்காட்சி

தென்மராட்சி,ஜன.29

வரணி மகா வித்தியாலயத்தில் கடந்த வருடம் நடத்தப்பட்ட உடை அமைத்தல், சிகை அலங்கரிப்பு ஆகிய பயிற்சி நெறிகளில் பங்குபற்றியோரால் தயாரிக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சி பெப்ரவரி ஏழாம் திகதி வித்தியாலய மண்டபத்தில் அதிபர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி கல்வி வலய முறைசாராப் பிரிவினரால் மேற்படி வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்தவர்களால் தயாரிக்கப்பட்ட பொருள்களே கண்காட்சியில் வைக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும், சிறப்பு விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) க.உதயகுமாரும் கௌரவ விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் (முறைசாரப் பிரிவு) கபாலசுந்தரமும் கலந்துகொள்வர். (8-117)

### தொழில் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

வரணி மகாவித்தியாலயத்தில் சிகை அலங்கரிப்பு, ஐசிங் ஆகிய பயிற்சி நெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு வரணிப் பிரதேசத்தைச் சேர்ந்த யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தென்மராட்சி கல்வி வலயத்தின் முறைசாரக் கல்விப் பிரிவின் கீழ நடத்தப்படவுள்ள இப்பயிற்சி நெறிகளில் கலந்துகொள்ளவிரும்பும் யுவதிகள் வித்தியாலயத்தில் உரிய படிவத்தினை பெற்று விண்ணப்பிக்குமாறு அதிபர் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். இதேவேளை இப்பாட நெறியினைக் கற்பிக்கும் போதனாசிரியரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (8-117)

### திருமண கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



★ திருமண வைபவங்கள் [அலங்காரத்துடன்]
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P 077-3086939,
0777-246117,
077-6018467. (41169)(12-4-46)

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை
22,சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

### புதிய வீடு விற்பனைக்கு

**யாழ்.நகரில் நல்லூர் ஆலயச் சூழலில் (செட்டித் தெரு) 1¾ பரப்புக் காணியில் அமைந்த சுற்றுமதில், நன்னீர்க்கிணறு ஆகியவற்றுடன் நிர்மாணிப்பு வேலைகள பூர்த்தியடைந்த புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு.**

**தொடர்பு: இல.9, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.**
T.P.: 0776354237

பார்வையிடும் நேரம் காலை 7மணி முதல் மாலை 6மணி வரை.
(41352) (21-18)

### ஞானவைரவர் ஆலயம் - திருநெல்வேலி

துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூசணி அம்மன் ஆலயம், பெர்ணாந்து வீதி, கொழும்பு-6 ஞானகணேஸ்வரி அம்மா யாழ் மக்களின் துன்பங்களைத் தீர்ப்பதற்காக இன்று (29-01-2005) சனிக்கிழமை முதல் 02-02-2005 புதன்கிழமை வரை அருள்வாக்கு கூறவுள்ளார்.

குழந்தை இல்லாதவர்கள், திருமணத்தடை தோசம் உள்ளவர்கள், குடும்பப்பிரச்சினை, வெளிநாட்டுத்தடை, தொழில் தடை, நோயாளர்கள், கல்வி முன்னேற்றம் அனைத்திற்கும் திருநீற்றினால் துன்பம் தீர்க்கும் அம்மாவின் அருளையும் ஆசியையும் பெறவிரும்பும் அடியார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

ஞானவைரவர் ஆலயம். கலாசாலை வீதி.
2ஆவது ஒழுங்கை. திருநெல்வேலி வடக்கு. யாழ்ப்பாணம்.

பூசை இடம்பெறும் நேரம்:- காலை 10.00 மணிக்கும் மாலை 5.00 மணிக்கும் (41406)

## கண்ணீர் அஞ்சலி

வலி தெற்குப் பிரதேச செயலக கிராம அலுவலர்
(ஜே/211, குப்பிளான் வடக்கு)
**திரு.செ.ஞானசபேசன்**
அவர்களின் அன்புத் தந்தை
**கனகசபை செல்லத்துரை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
வலி.தெற்கு உடுவில்

பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

(21-) (சி-40687)

ஓம் ஸ்ரீ சாயிராம்

**வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையங்களின் இணைப்புக்குழு**

## சாந்திப் பிரார்த்தனை

**சுனாமி அலைகளினால் உயிரிழந்த அனைவரினதும் சாந்திக்காக 30.01.2005 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்குப் பருத்தித்துறை, பிரதான வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலைய மண்டபத்தில் (சாயி மந்திர்) சாந்திப பிரார்த்தனை நடைபெறும்.**

**அனைவரையும்கலந்து கொள்ளுமாறு அழைக்கிறோம்.**

**இ.வசந்தசேனன்**
தலைவர்,
வடபிராந்திய ஸ்ரீ சத்தியசாயி
சேவா நிலையங்களின் இணைப்புக்குழு.

(41415)(33-16-19-42)

# உழவர் விழாவையொட்டி நடந்த காட்சிப் போட்டிகள்

அராலி, மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் விழாவை முன்னிட்டு நடத்திய காட்சி உதைபந்தாட்டப் போட்டிகளில் நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியும் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியும் வெற்றிபெற்றுள்ளன.

முதலாவது ஆட்டத்தில் நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அராலி, மாவத்தை விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (10-190)

## கராத்தே சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ். மாவட்டக் கராத்தே சங்கத்தின் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் பொறுப்பான ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-190)



கடந்த ஆண்டில் யாழ். மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற 13 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட தேவரையாளி இந்துக் கல்லூரி அணியினரைப் படத்தில் காணலாம். *(படம்: கரவெட்டிச் செய்தியாளர்)*

## பட்மின்ரன் போட்டி

வலி.தெற்கு,ஜன.29

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே இம்முறை நடத்தப்படவுள்ள பட்மின்ரன் போட்டியில் பங்குபற்றவுள்ள தமது பாடசாலை அணிகள் தமது விண்ணப்பங்களைக் கல்விக்கோட்டத்தில் ஒப்படைக்குமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கைலாயநாதன் கேட்டுள்ளார். (10-152)

## நிதி சேகரிப்பு உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.29

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி திரட்டுவதற்காக யாழ். மாவட்டத்தில் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை யாழ். லீக், பருத்தித்துறை லீக், வலிகாமம் லீக் என்பன மேற்கொண்டுள்ளன. (10-190)

## தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களின் வீராங்கனைகள் சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்தால் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தின் தலைவியுடனோ அல்லது வலைப்பந்தாட்டப் பயிற்றுநருடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (10-190)

## இளவாலை சென்.லூட்ஸ் சம்பியனானது

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி இவ்வருட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இறுதிப்போட்டியில் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மல்லாகம் சன்மார்க்க சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணி மோதியது.

இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி எதிர்த்து விளையாடிய மல்லாகம் சன்மார்க்க சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (10-190)

## விளையாட்டு விழா பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜன.29

தமிழீழ விளையாட்டுத் துறையினரினால் நடத்தப்படும் 2005ஆம் ஆண்டிற்கான தமிழீழ தேசிய விளையாட்டு விழா கடந்த மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி கடல் அனர்த்தத்தின் காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளதாகத் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா தெரிவித்துள்ளார்.

தமிழீழ தேசிய விளையாட்டு விழாப் போட்டிகள் யாவும் ஜுலை மாத நடுப்பகுதியில் நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10-190)

## மத்தியஸ்தர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் சகல மத்தியஸ்தர்களுக்குமான அவசர கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ஈச்சமோட்டையில் அமைந்துள்ள சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. அனைத்து மத்தியஸ்தர்களையும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கௌரவ செயலாளர் இ.ஆனல்ட் கேட்டுள்ளார். (10-190)

## இறுதியாட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்ட 11 பேர் பங்குகொண்ட லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதிச் சுற்றுப்போட்டியில் நாவாந்துறை சென்.நக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துப் பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (10-190)




# ஜனாதிபதி சந்திரிகா ஆற்றிய உரைக்கு சில ஊடகங்கள் தவறாக வியாக்கியானமாம்

## தெளிவுபடுத்தி ஜனாதிபதி செயலகம் அறிக்கை

இனிவரும் ஆறு அல்லது ஐந்து வருடங்களுக்குத் தேர்தலே நடக்காது என ஜனாதிபதி தெரிவித்ததைத் தவறுதலாக வியாக்கியானப்படுத்தி வருவதாக அவரது செயலகம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகம் விடுத்த விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சகல அரசியல் கட்சிகளையும் ஜனாதிபதி ஐக்கியப்படுமாறு கோரியிருந்தார். இதனைக் குறிப்பிட்ட சில ஊடகங்கள் தவறுதலாக விளக்கமளித்து வருகின்றன. சில அரசியல் வாதிகளும் தப்பாக வியாக்கியானம் செய்து வருகின்றனர்.

இந்த வேண்டுகோளை ஜனாதிபதி அம்பாந்தோட்டையில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் இடம்பெயர்ந்தோருக்குப் புதிய வீட்டுத் திட்ட நிர்மாணத்தைத் தொடக்கி வைத்த நிகழ்வில் விடுத்திருந்தார். இந்த மாதம் 19ஆம் திகதி குறித்த நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

அவரின் உரையில், இன்று நாம் வரலாற்று ரீதியாக அனைத்து அரசியல் பிரிவுகளின் பிரதிநிதித்துவத்தின் ஒன்றிணைவைக் காண்கிறோம்.

எம்மிடையே அமைச்சர்கள் இருக்கிறார்கள்; நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமர்ந்துள்ளார்கள். பிரதேச சபை உறுப்பினர்களும், நாட்டில் சகல அரசியல் கட்சிகளையும் சேர்ந்த உள்ளூராட்சிப் பிரதிநிதிகளும் சேர்ந்தே உள்ளோம்.

எனக்கு முன்னர் உரையாற்றியோரின் கருத்துகளை முழுமையாக நான் ஏற்றுக்கொள்கிறேன்.

இங்கு கூடியுள்ள சகல தலைவர்களும், தத்தமது அரசியல் வேறுபாடுகளைக் களைந்து நாட்டைக் கட்டியெழுப்புவதில் இணைந்து செயற்படவே ஒன்றுகூடியுள்ளனர்.

அடுத்துவரும் ஆறு ஆண்டுகளுக்கு அல்லது ஐந்தாண்டுகளுக்குத் தேர்தலை நடத்தும் அவசியமே இல்லை. ஒரு வருடம் கடந்து சென்றுள்ளது.

எப்படி வாக்குகளை வேட்டையாடலாம் என்று சிந்திப்பதை நாம் விட்டுவிட்டு எமது சொந்த நலனை, எமது கட்சியைப் பற்றி யோசிப்பதை விட்டுவிட்டு நாம் எல்லோரும் ஒன்றிணைந்து நாட்டை முன்நோக்கி நகர்த்துவது எவ்வாறு என்று சிந்திப்போமாக என உங்களை நான் வேண்டுகிறேன் என்றே கூறப்பட்டது.

ஜனாதிபதியின் உரை பிழையாக வியாக்கியானப்படுத்தப்பட்டு வருகிறது என்பதை அழுத்திச் சொல்லிக்கொள்ள ஜனாதிபதி செயலகம் விரும்புகிறது.

இப்போதிலிருந்து 5 வருடத்திற்குள் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறும் என்பதை மிகவும் துலாம்பரமாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்களை ஜனாதிபதி ஒத்திப்போட்டார் என்பதற்குப் பதிவுகள் இல்லை.

அவர் ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் உரிய நேரத்தில் தேர்தலுக்கு அழைப்பு விடுத்திருந்தார் என்பதை நாட்டுமக்கள் நன்கறிவார்கள்.

ஜனாதிபதியின் முதலாவது ஆட்சிக் காலம் கலாவதியாவதற்கு 15 மாதங்களுக்கு முன்னரே அவர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியிருந்தார்.

அவர் அப்படிச் செய்ததன் நோக்கம் சமாதானத்தற்காக மக்கள் ஆணையைப் புதிதாகப பெற்றுக்கொள்வதற்காகும்.

அரசியல் வன்முறை, தேல்தல் குளறுபடிகள், வாக்களிப்பு நிலையங்களில் வைத்தே கொலை செய்யப்பட்டமை, வாக்களிப்பதைத் தடை செய்தமை என்பன 1982, 1988, 1989 களிலேயே நடைபெற்றன.

இந்த 13 வருடங்களுக்கு ஜனநாயகமற்ற முறையில் தேர்தல்களை ஒத்திப்போடுதல் என்பது ஜனாதியின் ஆட்சியில் இடம்பெறாது என்பதை ஜனாதிபதி செயலகம் வலியுறுத்திக் கொள்ளவிரும்புகிறது.

குறிப்பிட்ட சிலரால் அவரது உரை தப்பாகப் பிரசாரப்படுத்தப்படுவது, ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் அரசியல் ஒற்றுமையைப் குலைப்பதற்கான பிரயத்தனமாகும்.

உண்மைக்குப் புறம்பான பிரசாரங்களால் மக்கள் வழிதவறிவிடக்கூடாது என அனைத்து இலங்கையரையும் ஜனாதிபதி வேண்டிக்கொள்கிறார்.

சகல பேதங்களையும் புறந்தள்ளிவிட்டு நாட்டைக்கட்டியெழுப்புவதில் ஐக்கியப்படுமாறு அவர் அழைப்பு விடுக்கிறார் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

# சாரதிக்கு தூக்கமருந்து கொடுத்து வாகனம் கடத்த முயன்ற ஐவர் கைது!

கண்டி,ஜன.29

கண்டி - கடுகண்ணாவ நெடுஞ்சாலையில் சாரதிக்குத் தூக்கமருந்தைக் கொடுத்து வான் ஒன்றைக் கடத்த முயன்றனர் எனக் கூறப்படும் ஐவரைக் கடுகண்ணாவைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 23ஆம் திகதி அதிகாலை 3.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைதுசெய்யப்பட்ட ஐவரும் கண்டி மாஜிஸ்திரேட் எச்.எஸ்பி.சேதுங்க முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

தூரப்பயணம் ஒன்றைத் தாம் மேற்கொள்ளவுள்ளனர் எனவும், அதனால் கடுகண்ணாவை கற்குகை நெடுஞ்சாலைக்கு அருகில் அதிகாலை வேளையில் வந்து நிற்கவேண்டும் எனவும் சாரதியிடம் ஐவரும் கேட்டுள்ளனர். ,சாரதியும் அதற்கு உடன்பட்டுள்ளார்.

அன்று நள்ளிரவு குறிப்பிட்ட ஐவர் தொடர்பில் சந்தேகம் கொண்ட சாரதி, கடுகண்ணாவப் பொலீஸாருக்கு அறிவித்தார்.

குறிப்பிட்ட இடத்துக்கு சாரதி வானை ஓட்டிச் சென்றுள்ளார். பொலீஸார் இருவரும் சிவில் உடையுடன் கற்குகைக்கு அருகே நோட்டம் விட்டுக் கொண்டிருந்துள்ளனர்.

அங்கு குழுமியிருந்த ஐந்து இளைஞர்கள் கொண்ட குழுவைப் பொலீஸார் கைதுசெய்தனர்.

ஐவரையும் சோதனையிட்டபோது தூக்கமாத்திரைத் தூளும் கயிற்றுச் சுருள்களும் கைப்பற்றப்பட்டன.

வானைக் கடத்தவே இவர்கள் வந்திருக்கிறார்கள் எனச் சந்தேகித்த பொலீஸார் அவர்களை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபர்கள் ஐவரும் தலா 5 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் செல்லஅனுமதிக்கப்பட்டனர். மேல் விசாரணைகள் இடம்பெறுகின்றன.(க-3)

## தாதிகள் பயிற்சிக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.29

தாதிகள் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 6ஆம், 7ஆம் திகதிகளில் யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சை இம்மாதம் 6ஆம், 7ஆம் திகதிகளில் இடம்பெறவிருந்து, பிற்போடப்பட்டிருந்தது. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு ஏற்கனவே அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன எனத் தெரிவிக்கப்பட்டது. (3)

## லெபனான் அரசு சலுகை வழங்குகிறது

லெபனான் நாட்டில் நிர்க்கதிக்குள்ளாகியிருக்கும் இலங்கையர்கள் தாயகம் திரும்புவதற்கு எதிர்வரும் பெப்ரவரி 15 ஆம் திகதி வரை சலுகைக் காலம் வழங்குவது என்று லெபனான் அரசு தீர்மானித்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தைக் கவனத்திற்கொண்டு லெபனான் இந்த சலுகையை வழங்குகின்றது.

பிரதி அமைச்சர் விஸ்வ வர்ணபால இது பற்றித் தெரிவிக்கையில், சட்ட விரோதமாக லெபனான் சென்ற இலங்கையர்கள் இலங்கை திரும்புவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

அவர்கள் தமது கடவுச் சீட்டுக்கள் மற்றும் பிரயாண ஆவணங்கள் என்பவற்றைச் சமர்ப்பித்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்யமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

லெபனானில் சட்டவிரோதமாக சுமார் 80 ஆயிரம் வெளிநாட்டவர்கள் உள்ளனர். இவர்கள் இவ்வாறு தங்கியிருப்பதற்கு அபராதமாக வருடாந்தம் தலா 500 டொலரைச் செலுத்தவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (3-12)



சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக வலிகாமம் கல்வி வலய மாணவர்கள் கல்வி உபகரணங்களைச் சேகரித்தனர். அவற்றை சுன்னாகம் றோட்டறிக் கழகப் பிரதிநிதியிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி
### வேதநாயகம் விஜிதா

பிறந்தது 09.09.1993 இறந்தது 30.12.2004

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த எங்கள் விஜிதாவே!

ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புடன் அப்பா, அம்மா, சகோதரர்கள், அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமா, அத்தை.

2 ஆம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி. (41386)(42-17-14)

## மாணவரை வரவேற்கும் கால்கோள் விழா

தென்மராட்சி,ஜன.29

பாடசாலைகளில் முதலாம் தர வகுப்பு மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா நேற்று முன்தினம் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இடம்பெற்றது. புதிய மாணவர்கள் ஏனைய மாணவர்களால் மலர்தூவி வரவேற்கப் பட்டனர். பாடசாலைகளில் இடம்பெற்ற இந்தநிகழ்வுகளுக்கு வலயக் கல்வி அலுவலர்கள் முதன்மை விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில இடம்பெற்ற நிகழ்வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் இ.கயிலைநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். (3-117)

## மதுரா அழகுச்சோலை - திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் தாரண வருஷம் தை மாதம் 18ஆம் நாள் (31.01.2005) திங்கட்கிழமை முற்பகல் 10.18 மணிமுதல் 11.06மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நீர்வேலி வடக்கு குறுக்கு வீதியில் அமைந்துள்ள

### மதுரா அழகுச்சோலை

என்னும் வர்த்தக நிலையத்தைத் திறந்து வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளோம்.
அவ்வமயம் நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறுக்குறோட்,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (41390)(41-14-17)

க.சபேஸ்வரன் (ரஞ்சன்).

## தூக்குக்கயிறு வந்தது

இலங்கையில் தூக்குத்தண்டனை மீள அமுல்படுத்தப்பட்டதையடுத்து பாகிஸ்தானிலிருந்து தூக்குக்கயிறு ஒனறு இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு இநதத் தூக்குக்கயிறு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. வெலக் கடைச்சிறைச்சாலையில் கடந்த பல வருடங்களாகப் பயன்படுத்தப்படாததால் தூக்குக் கயிறு உக்கிப் போயவிட்டது. அந்தப் பழைய கயிற்றுககுப் பதிலாகப் பயன்படுத்துவதற்காகவே புதிய தூக்குக்கயிறு வந்திருக்கிறது.(க-3)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும்
### ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் சிவபாக்கியம் சரவணமுத்து

(ஓய்வு பெற்ற தாதி)

மலர்வு 14-10-1931 உதிர்வு 30-12-2004

"இல்லறமாம் நல்லறத்தில் நாற்பத்தி ஏழு ஆண்டுகள்
எல்லோரும் போற்ற வாழ்ந்து உலகு துறந்த உத்தமி"
"அன்னைமுன் அறிந்ததெய்வம்" அவள்தனி உலகமென்றே
உன்நிழல் தன்னைநம்பி உலகினில் வாழ்ந்தோமின்று
நின்னது பிரிவுகண்டு நெஞ்சினில் ஏக்கமுற்றோம்
என்னதான் செய்வோமிங்கு எமக்கினி யாரேயம்மா?

எங்கள் குடும்ப விளக்கு அணைந்ததும் ஓடோடி வந்து ஆறுதல் கூறி சகல விதத்திலும் உதவிகள் செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (29-01-2005) சனிக்கிழமை நண்பகல் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

கச்சாய் வீதி,
கொடிகாமம். (41373)(41-17-14)

குடும்பத்தினர்.

## இலங்கை இதழியல் கல்லூரி

இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் (SLPI) ஓர் இணைப்பு அமைப்பு

# பணிப்பாளர்
## - இதழியல் கல்லூரி

இலங்கை இதழியல் கல்லூரி உயர்ந்த தரத்திலான பத்திரிகையாளர்களை உருவாக்கும் முக்கிய நோக்குடன் நிறுவப்பட்டது. இக்கல்லூரி முழுநேர டிப்ளோமா பாடநெறியொன்றை நடத்துவதுடன் குறுகிய தவணையுடனான மத்திய தொழில்சார் பத்திரிகைத்துறை கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை உயர்ந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வள ஆய்வுத்திறம் வாய்ந்த வல்லுநர்களைப் பயன்படுத்தி ஒழுங்குமுறையாக நடத்தி வருகிறது. இக்கல்லூரியின் மாணவர்கள் நவீன வசதிகள், கலை உபகரணங்கள் சகிதம் வள ஆய்வு நிலையம் ஒன்றில் கற்கவும் பயிற்சி பெறவும் வாய்ப்பு அளிக்கப்படுகின்றனர். அத்துடன் இலங்கை இதழியல் கல்லூரி சுவீடனின் பத்திரிகையாளர்களுக்கான மேற்கல்வி நிறுவனமான "போஜோ"வுடன் பங்குதாரராக விளங்குவதால் அது ஒப்பற்ற மேன்மை வாய்ந்த நிலையமாக பலம் பெற்றுத் திகழ்கிறது.

இதழியல் கல்லூரியில் "இதழியல்துறை கல்லூரி - பணிப்பாளர்" பதவிக்கான வெற்றிடம் உள்ளது. இதழியல்துறை பணிப்பாளர் பதவியானது இக்கல்லூரிக்குள்ளான அதிசிரேஷ்ட நிலைவாய்ந்த பதவியாகும். இப்பதவியானது இப்பிராந்தியத்தில் இக்கல்லூரியை பத்திரிகையாளர் பயிற்சிக்கான அதிமேன்மை வாய்ந்த நிலையம் என்ற அந்தஸ்துக்கு வழிநடத்திச் செல்லும் முழுமையான பொறுப்பைக் கொண்டுள்ளது. இப்பதவியை வகிப்பவர் இலங்கை பத்திரிகைத்துறை நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபைக்கும் இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் செயலாளர் நாயகத்துக்கும் அறிக்கையிடுபவராக இருக்கும் அதேவேளை உயர்ந்த அனுபவம் வாய்ந்த ஊடகத்துறைப் பயிற்சி வல்லுனர் குழு ஒன்றுடன் சுதந்திரமாக பணிபுரிபவராகவும் இருப்பார். இப்பதவிக்கு நிறைவான

இப்பதவிக்கான விண்ணப்பதாரர் கொண்டிருக்க வேண்டிய ஏனைய தகைமைகளாவன:-

- இளமாணி பட்டம் மற்றும் ஊடகக் கல்வி அல்லது அது தொடர்பான கல்வித்துறையில் பட்டப் பின் படிப்பு தகுதிகள் விரும்பத்தக்கது.
- ஆங்கில மொழியில் சிறந்த தேர்ச்சி மற்றும் மிகச்சிறந்த தொடர்பாடல் மற்றும் பொது மக்கள் தொடர்புகளில் திறன்கள்.
- ஊடக நிறுவனங்கள், பயிற்சி'.கல்வி ஸ்தாபனங்கள், சிவில் சமூக நிறுவனங்கள் அல்லது கூட்டு அமைப்பு ஆகியவற்றில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 5 வருட அனுபவம் பெற்றதற்கான நிரூபிக்கப்பட்ட அத்தாட்சி.
- ஊடக நிறுவனங்களுடனும் அவை தொடர்பான தொழில்சார் நிறுவனங்களுடனும் மிகச்சிறந்த தொடர்பு கொண்டிருத்தல்.
- சர்வதேச ரீதியில் இது போன்ற பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனங்களுடன் இணைப்பை ஏற்படுத்தக் கூடிய திறமை.

இதழியல் கல்லூரிப் பணிப்பாளர் ஒழுக்கத்திலும் நடத்தையிலும் உயர்ந்த தரங்களை நிறுவுபவராகவும் அவற்றைப் பேணுபவராகவும், சிறந்த நடைமுறைகளைக் கடைப்பிடித்து மிகச் சிறந்த முன்மாதிரியாக விளங்குபவராகவும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரருக்கு கணிசமான ஊதியக் கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் நிறுவனத்தினால் பராமரிக்கப்படும் வாகனம் ஒன்றும் பாவனைக்கு வழங்கப்படும்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் உறவு அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் தொடர்பு விவரங்களுடன் விவரமான சுயவிபரக்கோவையை (CV) கீழ்க்காணும் முகவரிக்கு 2005 பெப்ரவரி 15ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை பத்திரிகை நிறுவனம்
65.'.5, வார்ட் பிளேஸ்,
கொழும்பு - 7

இலங்கை பத்திரிகை நிறுவனம் சமத்துவமான வாய்ப்பு வழங்கும் நிறுவனமாகும்.

## ஓராண்டு நினைவலைகள்



செல்வி
### யோசவ் பொஸ்லீன் டயாளினி

தாயின் மடியில் 07-02-1977 ஆண்டவன் அடியில் 29-01-2004

உனைப்பிரிந்து ஆண்டொன்று ஆயிற்றோ
எம் ஆருயிர்ச் செல்வமே! டயாளி
எண்ணிக் கலங்குகின்றோம்- உன்
திருமுகத்தைக் காணாது!
உன் நினைவலைகளை மீட்கையிலே
எம் கண்ணீரெல்லாம் வற்றிப் போனதம்மா
எம்மை விட்டுச் சென்றாலும் - எம்
உயிர்மூச்சு உள்ளவரை மறவோம்!

அன்னாரின் ஆத்மசாந்திக்காக மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் இன்று (29-01-2005) சனிக்கிழமை காலை 7 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். மாலை 3மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வழிபாட்டிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:

புகையிரத வீதி,
மிருசுவில். (41271)(46-14-17-42)

குடும்பத்தினர்.

# தலித் மக்களின் உயர்வுக்காக உழைத்த முருகேசு உபாத்தியாயர்



அல்வாய் முருகேசு உபாத தியாயர் கடந்த 02.01.2005 அன்று காலமானர். இவர் யாழ்ப்ப ாணத்து தலித் மக்களுக்கும் சைவத்துக்கும் ஆற்றிய பணி அளப்பரியது.

யாழ்ப்பாணத்தில் சாதி ஒடுக்கு முறைக்கு எதிராகச் சாத்வீக ரீதியில் போராடியவர்களில் ஒரு வர் முருகேசு உபாத்தி யாயர்.

சாதி ஒடுக்குமுறை காரணமாகவே பல தலித் துக்கள் மதம் மாறியுள்ளனர்; மாறிக்கொண்டிருக் கின்றனர் என்பது கசப்பான உண்மை.

சாதி ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடிய அதேவேளை, தீவிர சைவ மக்களாகவும் காணப் பட்டவர்கள் சூரரும் முருகேசு உபாத்தியாயரும தான் என்று கூறினால் மிகையாகாது.

முருகேசு உபாத்தியாயர் சாதி ஒடுக்குமுறைக் கெதிராகப் போராடுவதற்காக இடதுசாரிகளு டன் இணைந்து கொள்ளவுமில்லை. நாஸ்தி கம் பேசவுமில்லை. 'என் வழி தனி வழி' என பது போல் செயற்பட்டார். தீவிர தமிழரசுக்கட்சி ஆதரவாளரான முருகேசு உபாத்தியாயர் இடது சாரிகளின் போராட்ட வடிவங்களைக் கண்டனம செய்ததுடன், உயர் சாதியினருடன் சமரசப் பேச்சி லீடுபட்டு வெற்றியும் கண்டார்.

புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம், அல்வாய ஸ்ரீலங்கா வித்தியாலயம் போன்றவற்றின் ஸ்தாப கரான முருகேசு உபாத்தியாயர், தலித் மக்களின் கல்வி வளர்ச்சிக்காகவே இந்த இரு பாடசாலை களையும் கட்டுவித்தார்.

புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி மற்றும் வடமராட்சியிலும் பல பாடசாலைகள் அந்தககாலத தல் இருந்தன. ஆனால், அங்கு தலித் மாணவர் கள் அனுமதிக்கப்படுவதில்லை. இதனால் முரு கேசு உபாத்தியாயர் தலித் மக்களுக்காகவே இந்த இரு பாடசாலைகளையும் அமைத்தார்.

"நீறில்லா நெற்றி பாழ்" என்ற ஔவையாரின் கூற றுக்கிணங்க எப்போதும் விபூதியுடனேயே காணப் படும் முருகேசு உபாத்தியாயர்தான் இலங்கை ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு அனுமதிக் கப்பட்ட முதலாவது தலித் மாணவர்.

முருகேசு உபாத்தியாயர் ஆசிரிய கலா சாலை அனுமதி பெற்று கோப்பாய் ஆசிரிய கலா சாலைக்குச் செல்வதற்காக வடமராட்சியிலிருந்து இருபாலைச் சந்தியில் வந்து இறங்கியபோது இருபாலைச்சந்தியில் நின்ற உயர்சாதியினர் சிலர் "டே எங்கையடா போறாய்?" என வினவி அவரைத் திருப்பியனுப்ப முயற்சித்தனர். எனினும், முரு கேசு உபாத்தியாயர் மனம் தளரவில்லை. ஆசிரிய பயிற்சியை முடித்து ஆசிரியரானார்.

இதேபோல் நல்லூர்க் கந்தசுவாமி கோயி லுக்குள் காலடி எடுத்து வைத்த முதலாவது தலித முருக பக்தரும் முருகேசு உபாத்தியாயரே. 1959ஆம் ஆண்டு நல்லூர் கந்தசுவாமி கோயில நிர்வாகியுடன் பேச்சிலீடுபட்ட முருகேசு உபாத் தியாயர், தலித் மக்களும் ஆலயத்தினுள் சென்று வழிபட அனுமதிக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். உபாத்தியாயரின் கோரிக்கையை முழு மனதுடன் ஏற்றுக்கொண்ட நல்லைக்கந்தன்

## நீத்தார் நயப்புரை

ஆலய நிர்வாகி, மறுநாள் ஆலயத்தின் இரு கதவு களையும் தலித் மக்களின் வழிபாட்டிற்காகத் திறந்துவிட்டார். உபாத்தியாயரும் தனது சகபாடி கள் சகிதம் தேவார பாராயணத்துடன் முருகனின் உள்வீதியைச் சுற்றிக் கும்பிட்டார்.

**ந.பரமேஸ்வரன்**

தேநீர்க் கடைப் பிரவேசத்திலும் கணிசமான பங்காற்றிய முருகேசு உபாத்தியாயரின் பணி களை விவரிக்க பக்கங்கள் போதாது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல எம்பெருமான் அருள் புரிவாராக.

# தமிழரசுக்கட்சியின் தலையாய தொண்டன்

ஈழத்து நாதனின் வாழ்வு திருமலையின் வாழ்வோடும், திருமலை மக்களின் வாழ்வோடும் ஏறக்குறைய கால் நூற்றாண்டுக்கு மேல் பின் னிப்பிணைந்த வாழ்வாகும். இவரின் வாழ்வு 55 ஆண்டுகளை உள்ளடக்கியது.

அவரைப்பீடித்த பல நோய்களும் இந்நாட் டில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான மாற்றங்களும் அவர் அரசியலில் தீவிரமாக ஈடுபடுவதை அவரின் இறுதிக்காலம் தடுத்தது. ஆனால் ஒரு காலத்தில் தமிழரசுக் கட்சியின் தலையாய தொண்டராக விளங்கி திருமலையை எண்ணு கின்ற போது ஈழத்துநாதனையும் இணைத்து எண்ணுகின்ற அளவிற்கு தமிழரசுக்கட்சி தலை வர்கள் நெஞ்சிலும், தமிழரசுக் கட்சி தொண் டர்கள் உள்ளத்திலும் நிலைத்து இடம் பெற்ற வர் அவர் என்பதை வரலாறு சாற்றி தீரும்.

திருமலையில் ஏதாவது ஒரு முக்கிய கூட்டத்தை ஒழுங்கு செய்ய வேண்டும் என்றால், ஓர் ஆர்ப்பாட்டத்தை, ஓர் பேரணியை நடத்த வேண்டும் என்றால் தலைவர்கள் அனைவரும் எதிர்பார்த்ததற்கமைய பேரணியும், ஆர்ப்பாட்டமும், கூட்டமும் சிறப்பாக ஈழத்துநாதனின் தலைமை யில் நடைபெறும். அவருடைய பேச்சும் பேச்சின தன்மையும் போக்கும் மற்றவர்களிடமிருந்து மாறுபட்டு இருக்கும். அத்தோடு அவரின் பேச்சு, ஆணித்தரமாக எம் நெஞ்சில் பதிகின்ற முறை யில் தனி முத்திரை பதிந்ததாக அமையும்.

**தொழிற்சங்க வாதியாகத் துலங்கியவர்**

திருமலை துறைமுகத்தில் பணியாற்றிய இவர் தலைசிறந்த தொழிற்சங்க வாதியாகவும் விளங்கினார். 1960களின் நடுப்பகுதிகளில் திருமலை துறைமுகத்தை தேசிய மயமாக்க சிங்கள அரசுகள் முயற்சித்த போது அதைக் கடுமையாக எதிர்த்தவர். நம் ஈழத்து நாதன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

திருமலையில், 10ஆம் வட்டாரம் என்ற ஒரு முக்கிய பகுதி இருந்தது. இங்குதான் நிறை யத் தமிழர்கள் வாழ்ந்தார்கள், அவர்கள் துறை முகத் தொழிலாளிகளாகவும், மீனவர்களாகவும வாழ்ந்தனர். அவர்களே, திருமலையை சிங்கள மயமாக்கும் சிங்கள அரசுகளின் திட்டமிட்ட சதி முயற்சியை எதிர்த்த பெருமைக்கு உரிய வர்கள். திருமலைத்துறைமுகம் தேசிய மயமாக கப்பட்டதை அடுத்து இவர்கள் திருமலையை விட்டு வெளியேறியதைக் கண்டு ஈழத்து நாதனும், நாமும், கண் கலங்கி கண்ணீர் விட்ட நிகழ்ச்சிகள் எம் நினைவுக்கு வருகிறது.

திருமலையில் குளக்கோட்டன் மன்றம் ஒன்று இயங்கியது. அதை இயக்கிய பெருமை எம் ஈழத்து நாதனுக்கே உரியது. 1968 இல் கோணேசர் கோவிலையும் அதன் சுற்றாடலை யும் புனித நகரமாக்க வேண்டுமென, தமிழ் மக்களின் ஒருமித்த குரல் எழுந்தது. அப் பொழுது அமைச்சரவையில் அங்கம் வகித்த அரச வழக்குரைஞர் திருச்செல்வம் (QC) உள்ளூராட்சி அமைச்சராக விளங்கினார். அவர் மக்களின் உணர்வுகளுக்கு வடிவம் கொடுக் கின்ற முறையில் கோணேசர்கோவிலையும் அதன் சுற்றாடலையும் புனித நகரமாக்க வேண்டுமென ஓங்கிக் குரல் எழுப்பினார். வெறி கொண்ட டட்லி அரசு இவரின் கோரிக்கையை முற்றாகப் புறக்கணித்ததன் விளைவாக இவர் அப்பதவியைத் துறந்தார். அப்பதவியைத் துறந்த நிலையில் திருமலை மைதானத்தில் எம் குரல ஓங்கி ஒலிக்கும் முறையில், ஈழத்து நாதன் ஒழுங்கு செய்த மாபெரும் கூட்டம் வரலாற்றில் பதியத்தக்க முறையில் ஒரு திருப்பு முனையாக விளங்கியது. இக் கூட்டத்தில் திருகோணமலை யின் வரலாற்றினை - திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை புள்ளி விவரங்களுடன் புட்டுக் காட்டி நான் நிகழ்த்தினேன் .

**வரலாறு இவர் பணியை வரைந்தே தீரும்**

1983இல் இனப்படுகொலையை அடுத்து தமிழகத்தில் அவர் தஞ்சம் புகுந்து வாழ்ந்த துண்டு. அப்பொழுதும் என்னோடு மிக நெருங் கிப் பழகி 'எப்பொழுதும் திருமலையைக் காப் பாற்ற வேண்டும்' என்று உணர்ச்சியோடு அவர் கூறிய சொற்கள் இன்னும் என் செவிகளில் ஒலிக்கின்றன.

**மா.க.ஈழவேந்தன்**

சுருங்கக் கூறின், திருமலையோடு, திருமலை மக்கள் வாழ்வோடு ஒன்றிய வாழ்வு வாழ்ந்த ஈழத்து நாதனின் மறைவு எமக்குப் பேரிழப்பே என்பதை நாம் ஏற்றேயாக வேண்டும். ஈழத்துத் தமிழர் விடுதலை வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் சிலர் குறிப்பிடத்தக்க பணி யாற்றியுள்ளனர் என்பதை நாம் மறப்பதற்கில்லை. வரலாற்றில் ஈழத்துநாதனின் பங்களிப்பும் பதியப்படும் என்பது உறுதி.



முல்லைத்தீவுக் கரை யோரத்தில் சுனாமி அனர்த்தப் பாதிப்புக் களை நேரடியாகப் பார்வையிட்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத் மினி சிதம்பரநாதன் அங்கு ஜப்பான் நாட் டின் 'கியூமெடிக்கா' மருத்துவக் குழுவின ருடன் உரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# நூல் வரிசை



**நூல்: சிவத்தமிழ் (காலாண்டிதழ்)**
**பிரதம ஆசிரியர்: கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்**
**வெளியீடு: ஜேர்மனி**

சமயப் பணியோடு அறப்பணியையும் இணைத்து சைவத்தையும் தமிழை யும் வாழவைக்கின்ற ஓர் அன்னையாகத் தெல்லிநகர்ப் பதிதனில் வீற்றிருந்து துர்க்காதேவியின் அருளாசியுடன் செயற்கரிய பெரும் சேவையைச் செய்து வருகின்றார் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி.

"எம்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அப்பர் சுவாமிகளது திருவாக்கை சிரமேற்கொண்டு, தான் வாழுகின்றபோது தமிழ்கூறும் நல்லுலகிற்குத் தன்னால் எவ்வளவுசெய்ய இயலுமோ அவ்வளவுபணிகளை ஆற்றிவருகின்றார் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி.

சேவையில் இன்பம் காணும் அன்னையின் முத்துவிழா இம்மாதம் 7 ஆம் திகதி மிகவும் அமைதியாக இடம்பெற்றது. அன்னையின் முத்துவிழாவை முன்னிட்டு புலம்பெயர்ந்த ஈழத் தமிழர் களால் ஜேர்மனியில் வெளியிடப்படுகின்ற தை - மாசி - பங்குனி ஆகிய மாதங்களுக்கான 'சிவத் தமிழ்' எனப்படும் இதழ் அன்னையின் முத்துவிழாச் சிறப்பம்சங்களைத் தன்னகத்தே கொண்டு வெளியிடப்பட்டுள்ளது. 'சிவத்தமிழ்' என்ற இதழின் முன் அட்டைப் படத்தில் அன்னையின் அழகிய நீறுகொண்ட நுதலுடன் கூடிய அழகிய படம் காணப்படுகின்றது. படத்தின் பின்புறம் ஒளிவட்டம் காணப்படுகின்றது. இந்த ஒளிவட்டத்திலே அன்னையின் அறிவு, அன்பு, ஆன்மீகப் பணி என் பன வெளிப்படுகின்றன.

ஆசிரியர் தலையங்கத்தில் நூலாசிரியர் நாவலர் பெருமானின் வாசகத்தைக் குறிப்பிட்டு, தமது 'சிவத்தமிழ்' என்ற நூலின் நோக்கம் வாழும்போதே நல்லவர்களை வாழ்த்தும்பொருட்டேயாகும் என்று குறிப்பிட்டுள்ளார். அன்னையின் முத்துவிழாவின்போது அன்னையை வாழ்த்தி இந்த அழகுறு நூலை வெளியிட்டமையால் 'சிவத்தமிழ்' என்னும் நூல் சிறப்புப்பெறுகின்றது என்றும் குறிப் பிட்டுள்ளார். அடுத்து, உலகம் வியந்துபோற்றுகின்ற இராமசரிதத்தை தேவபாஷையில் யாத்த வான் மீகி, முன்பு வேடனாக - வழிப்பறிக்காரனாக - இருந்து நாரதரின் சாந்தத்திற்கும் அன்புக்கும் கட்டுப் பட்டு இன்று உலகம் போற்றும் ஓர் ஒப்பற்ற மாபெரும் கவிஞனாக - முனிவனாக - திகழ்ந்த கதை இங்கு சிறுவர் பகுதியில் இடம்பெற்றிருப்பது சிறுவர்களை ஆற்றுப்படுத்தும் ஒரு செயற்பாடாக அமைந்துள்ளது. 'அருள் ஓவியம்' என்ற பகுதியில் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சமுதாயத்தை - வழிமாறும் இளைஞர்களை - திசைதிருப்பும் வண்ணம் பத்து மகா தத்துவ வாக்கியங்கள் இடம் பெற்றுள்ளன.

'தெய்வத்தின் நிழல்' என்ற பகுதியினூடு கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், துன்பம் தீர, இடர்களைய, இன்னல் போக்க இறை வழிபாடே சிறந்தது என்பதைத் தன் வாழ்வியலினூடாக நிறுவிக் காட்டியவர் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி என்றும், நேரிய - சீரிய - ஆன்மீகப் பணிக்கு இல்லறம் தடையாக அமைவதால் இல்லறத்தைத் துறந்து, பசிநிறார்களைத் தன்பிள்ளைகளாக அரவணைத்து, அவர்களின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி வருகின்றார் என்றும் மற்றும் அவரது சேவைகள், பணிகள் பற்றி நீட்ட விவரிக்கின்றார்.

லண்டனில் வாழும் பொன்.பாலசுந்தரத்தின் 'உலக வரலாறுகாணும் இந்து ஆலய மறுமலர்ச்சி' என்னும் கட்டுரை இந்து மதத்தின் வரலாற்றைப் பறைசாற்றுகின்றது. கோகிலா மகேந்திரனின் 'ஈர நெஞ்சம்' என்ற கட்டுரையும் ஜோகதாஸனின் 'சிவதரிசனம்' என்ற கட்டுரையும் நூலுக்கு மேலும் சுந்தரம் சேர்ப்பனவாய் அமைந்துள்ளன. கனடாவில் இருந்து கனெக்ஸ் என்பவரின் 'நெற்றிக்கண் என்பதில் அர்த்தமுள்ளது' என்ற கட்டுரையும் இடம்பெற்றுள்ளது. இசை, தோத்திரம், திருமுறை என்பன பற்றித் தோத்திரப் பிரியனின் ஆக்கமும் சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரனின் 'நற்றமிழ் வளர்த் திடும் சிவத்தமிழ்ச் செல்வியே!' என்ற கவிதையும் சிவாக்கியரின் சொர்க்கவாசல் என்ற கட்டுரை யும் அன்னையை வாழ்த்தி, அவரின் சொல்வன்மையைப் போற்றி, பணியை ஏத்தி வியந்தெழுதியுள் ளார் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களின் ஆக்கமும் இவற்றோடு நூலை மேலும் அழகுற வைக்கின்றது.

ஈழத் தமிழரின் முதலாவது தமிழ் தினசரித் தேசிய நாளிதழாக குடாநாட்டில் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்த ஈழநாடு பத்திரிகைக்கு அன்னையின் 62 ஆவது பிறந்த தினத்துக்கு அ.சிவவாகீசர், க.தணிகாசலம் ஆகியோர் வழங்கிய 'தேவிபணிபுரியும் சிவத்தமிழ்ச்செல்வி' என்ற ஆக்கம் 07-01-1987 ஆம் ஆண்டு பிரசுரமாகியது. பழைமையைப் பேணும் பொருட்டு அந்த ஆக்கம் இந் நூலில் மீள்பிரசுரம் செய்யப்பட்டிருப்பது 18 வருடங்களுக்கு முன்பு அன்னையின் பணி எவ்வா றானது என்பதைக்கோடுகாட்டுகின்றது. அன்னையின் பணிக்காலத்தில் இடம்பெற்ற சிலநிகழ்வுகளைச் சித்திரிக்கும் அழகுறு படங்கள் வர்ணப் போட்டோக்களாகப் போடப்பட்டுள்ளமை பழைய நினைவு களை எமக்கு மீட்டுகின்றன.

ஆகவே, அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முத்துவிழா நன்னாளில் அன்னையின் பெயரையே தனதாக்கிக்கொண்டு ஜேர்மனியில் வெளியிடப்படும் 'சிவத்தமிழ்' என்றநூல் உரியகாலத்தில் நன்கருப்பொருளாக - பாடற்பொருளாக - அன்னையைத் தேர்ந்தெடுத்தமை சிவத்தமிழின் ஆசிரியபீடம் பெற்ற பெரும்பேறு. இந்தநூல் வாசகர் உள்ளத்தில் தெய்வீக ஒளியை ஏற்படுத்தி, பக்திப் பரவசத்தை ஏற்படுத்தும் என்று கூறின் அது மிகையாகாது.

- [illegible]



**நூல்: கல்வியியலில் செயல்நிலை ஆய்வு**
**நூலாசிரியர்: க.பாஸ்கரன்**
**வெளியீடு: கிறிப்ஸ் வெளியீடு**

நவீன கல்விச் செல்நெறிகளில் இன்று ஆய்வுத்துறை மிகுந்த முக்கியத்துவம் பெற்று வருகின்றது. அதுவும் ஆசிரிய வாண்மைக் கல்வியில் புதிய பல பரி மாணங்களில் ஆய்வுகள் பிரயோகிக்கப்படுகின்றன. நடைமுறைகளில் இருந்து பெறுபேறுகளை இனங்காணுதல், நடைமுறைகளில் இருந்து செயலாற்றுகை களை மேம்படுத்துதல், நடைமுறைகளின் பயன்கருதி மீள் ஒழுங்குபடுத்துதல் என்றவாறு கல்வியியலில் நடைமுறைப் பயனுள்ள செயல்நிலை ஆய்வுகள் இன்று உலகளாவிய ரீதியில முக்கியத்துவத்தைப் பெற்றுவருகின்றன. அவ்வகையில், ஆசிரிய வாண்மையை மேற்கொள்வோருக்கு உதவும் நோக்கில் க.பாஸ்கரன் 'கல்வியியலில் செயல் நிலை ஆய்வு' என்ற நூலை வெளியிட்டுள்ளார்.

செயல்நிலை ஆய்வில் செயலும் ஆய்வும் ஒன்றிணைக்கப்படுகின்றன. கல்விச் செயல்முறை களில் விளங்கவும் சீர்திருத்தங்களை உருவாக்கவும் கல்வி உள்ளீட்டுக்குரிய வெளியீடுகளை முன் னேற்றம் பெறச் செய்யவும் செயல்நிலை ஆய்வுகள் துணைசெய்கின்றன. அவ்வகையில், நூலின் செயல்நிலை ஆய்வு அணுகுமுறைகள், செயல்நிலை ஆய்வு விடயப் பரப்புக்கள், ஆய்வுச்செயல் முறை தரவு சேகரித்தல், பகுப்பாய்வு, அறிக்கையிடல், மாதிரிச் செயல்நிலை ஆய்வுச் சுருக்கங்கள் என்றவகையில் விடயங்கள் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

ஆய்வுகளுக்கும்செயன்முறைகளுக்கும் இடையே இதுவரைகாலமும்பெரும் இடைவெளி காணப் பட்டது. இதை நீக்கி, ஆய்வுப் பிரச்சினைத் தீர்வுகளை நடைமுறைப்படுத்தி விளைவுகளைப் பெற செயல்நிலை ஆய்வுகள் துணை செய்கின்றன. பாடசாலை வகுப்பறையில் நிலவும் கற்றல் பின்னடை வுகள், பிரச்சினைகள், முரண்பாடுகள் என்பவை ஆராயப்பட்டு நேரடியாக ஆசிரியர்களால் பொறுப் பேற்கப்பட்டு செயல்நிலை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்தும்போது இந்த ஆய்வு தொடர்பான வளங்கள், நூல்கள், வழிகாட்டல்கள் எமது ஆசிரியர்களுக்குப் போதுமானதாக இல்லை. இதை நீக்க இந்நூல் நல்ல வளமாகவுள்ளது: ஆசிரிய கல்வியைப் பெறும் மாணவர்களுக்குச் சிறந்த பயனுள்ளதாக விளங்குகின்றது.

மேலும், பாடசாலை ஆசிரியரையே ஆய்வாளராகக் கொண்டு கல்விப் பிரச்சினைகள் செயல் நிலை ஆய்வில் ஆராயப்படுகின்றன. பிரச்சினைகள் அவராலேயே இனங்காணப்பட்டுத் தீர்வுகள் முன் மொழியப்படுவதுடன், தீர்வுகள் அவராலேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவ்வகையில், இந்த ஆய்வுகளால் மிகுந்த பயன்கள் கிடைக்கும். இதற்குச் சிறந்த முறையில் க.பாஸ்கரன் அவர்கள் எழு திய கல்வியியலில் செயலநிலை ஆய்வுஎன்ற நூல் வழிகாட்டுகின்றது. ஆசிரியர்கள் அனைவரும்படித்துப் பயன்பெறவேண்டிய நூல் இதுவாகும்.

[illegible]




**நூல்: தமிழ் நிறைந்த சொக்கன் தெளிவுரையில் திருக்குறள்**
**வெளியீடு: யாழ்ப்பாணம் ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**

தமிழறிஞர் சொக்கன் நினைவாக யாழ்ப்பாணம் ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை 'தமிழ் நிறைந்த சொக்கன் தெளிவுரையில் திருக்குறள்' நூலை வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் கலைமாக விளங்கும் நல்லூரான் ஆலயத்தின் முகப்புத் தோற்றத் தையும் அருள்புரிய தேரில் எழுந்தருளும் அழகுமயில் வாகனனின் திருவடி தொழ அலைமோதும் சனக்கூட்டத்தையும் தாங்கிய முன்பின் அட்டைப் படங்கள் பொலி வுடன் விளங்குகின்றன. உள்ளே சொக்கன் ஐயாவின் ஏனைய புத்தகங்களின் முகப்புத் தோற்றம் தாங்கிய நிழற்படங்கள் அலங்கரிக்கின்றன. ஆவனுடன் உள்ளே நுழைகையில்தான் நூல் வெளியிடப்பட்ட நோக்கம் அணிந்துரை, எதுவும் கண்ணிற்படவில்லை. இவையாவும் அடங்கி யிருந்தால் எதிர்காலத்தில் பயனுள்ள குறிப்பு ஒன்று கிடைப்பதாய் அமைந்திருக்கும்.

முப்பால் அடங்கிய இந்தத் திருக்குறள் புத்தகம் எளிமையான மொழிநடையோடு இருப்பதால் கற்பவர் மனங்களை கொள்ளைகொள்ளும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மேலும் சொக்கன் அவர்கள் வாழ்ந்திருந்த காலத்தில் அவரது பல்வேறு நூல்களை வெளியிட்டுள்ள ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலையினர் திருக்குறளை சொக்கனின் நினைவாக வெளியிட்டு, அதனை அவருக்குக் காணிக்கையாக்கியது பாராட்டி வரவேற்கத்தக்கது.

- [illegible]



சுனாமி அனர்த்தத்தில் முல்லைத்தீவில் வீரச்சாவடைந்த கடற்புலி கப்டன் இராசப்பர் மகாலிங்கத்தின் (பெற்றோல் ஐயா) 31 ஆவது நினைவு தினம் வியாழன்று வல்வெட்டித்துறை, தீருவில் ஆலடியில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. நினைவுதின நிகழ்வில் வடமராட்சிப் பிரதேச கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகன் பொதுச்சுடர் ஏற்றுவதை முதலாவது படத்திலும், கடற்புலிகளின் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சுதர்சன், வல்வை சிதம்பராக் கல்லூரி அதிபர் எஸ்.அரியரட்ணம் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள இரு படங்களிலும், வீரச்சாவடைந்த மாவீரரின் திருவுருவப்படம் ஊர்வலமாக அவரது இல்லத்திலிருந்து எடுத்து வரப்படுவதை நான்காவது படத்திலும் காணலாம்.

*(படங்கள்: சி.சுந்தரலிங்கம், கரவெட்டிச் செய்தியாளர்)*

# ஜனாதிபதி தேர்தல் 2006 ஆம் ஆண்டில் நடத்தப்படுவது கட்டாயம் என்கிறது 'பவ்ரல்'

கொழும்பு,ஜன.29

ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் 2006ஆம் ஆண்டு கட்டாயம் நடத்தப்பட வேண்டும். அப்போது தான் ஜனநாயகத்தில் மக்களுக்கு முழுமையான நம்பிக்கை ஏற்படும். அதை விட்டு அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆட்சியை நீடிக்க முயற்சிக்கும் தந்திரோபாயங்களுக்கு ஒரு போதும் இந்நாட்டு மக்கள் இடமளிக்கமாட்டார்கள்.

- இவ்வாறு தெரிவித்தார் சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டு நிலையத்தின் (பவ்ரல்) தலைவர் கிங்ஸ்லி ரொட்றிக்கோ.

கொழும்பிலுள்ள மார்கா நிறுவன கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட தென் மாகாணப் பகுதியில் உள்ள மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு புதிய வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டத்துக்கு அம்பாந்தோட்டையில் அடிக்கல் நட்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அங்கு உரையாற்றும்போது, "இந்த நாட்டில் 6வருடங்களின் பின்புதான் தேர்தல் ஒன்று நடைபெறும்'' என்று கூறினார்.

ஆனால், அவர் என்ன தேர்தல், அது எப்போது நடக்கும் என்று கூறவில்லை.

எனவேதான் நாங்கள் கூறுகிறோம். பொதுத் தேர்தல் ஒன்று இடம்பெறுமாக இருந்தால் அது ஆறு வருடங்களின் பின்பு இடம்பெறலாம். ஆனால், ஜனாதிபதித் தேர்தல் அப்படி நடக்க முடியாது.

இந்த நாட்டின் அரசமைப்பின் பிரகாரம் 'ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் ஜனாதிபதியாக இருக்கமுடியாது. அப்படி மீண்டும் ஒரு தடவை அவர் ஜனாதிபதியாக வரவேண்டும் என நினைத்தால் அதனை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் சட்டமாக்க வேண்டும். அது நாடாளுமன்றத்தில் நிறைவேறியதன் பின்னர், அதனை பொதுமக்கள் அபிப்பிராயத்திற்கு விட்டு மக்களின் விருப்பு வெறுப்பைக் கேட்க வேண்டும். பதில் சாதகமாக இருநதால் சந்திரிகா தொடர்ந்து ஜனாதிபதியாக இருகலாம் அல்லது பதவியில் இருந்து விலகிச் செல்லலாம்.

ஆனால், அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலை அவர் நடத்தியே ஆகவேண்டும்.

எமது நாட்டில் கடந்த மாதம் ஏற்பட்ட ஆழிப பேரலை அனர்த்தத்தின்போது வடக்கு-கிழக்கு மற்றும் தென்மாகாண கடற்கரைப் பகுதியில் வாழ்ந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் இறந்தனர். பலர் வீடு, உறவுகளை மற்றும் உடைமைகளை இழந்து பரிதவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய முறையில் நிவாரணப் பொருள்கள், ஏனைய அடிப்படை வசதிகள் என்பவற்றை அரசு முற்றுமுழுதாக இதுவரையும் செய்து கொடுக்கவில்லை. இதனை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். எனவேதான், எங்களது பவ்ரல் அமைப்பு உதவிகள் உரிய முறையில் வழங்கப்படுகின்றதா என பதை கண்காணிப்பதற்கு அரசு பிரகடனப்படுத்திய பாதிக்கப்பட்ட 13 மாவட்டங்களிலும் கண்காணிப்பு குழுக்களை அமைத்து எல்லாவற்றையும் கண்காணிப்பதற்கென முழு அளவிலான திட்டங்களை வகுத்து வருகின்றோம்.

- இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

பவ்ரல் அமைப்பின் பிரதிநிதிகள், கொழும்பு, களனி பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் தேசிய சமாதான செயலக உறுப்பினர் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர். (க-3)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம்,ஜன.29

கொக்குவில் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர், வீதிக்குக் குறுக்கே நாய் பாய்ந்ததினால் விபத்துக்குள்ளாகிப் படுகாயமடைந்தார்.

கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் பாண்டியன்தாழ்வைச் சேர்ந்த கென்றிக் (வயது 53) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு காயமுற்றவர் சிகிச்சை பெற்று வருகின்றார். (3-203-190-07)

## வீதிப் புனரமைப்பு அரைகுறை நிலையில்

தென்மராட்சி,ஜன.29

மந்துவில் கிழக்கு டச்சுவீதியின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்படாததால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மூன்றரைக் கிலோமீற்றர் நீளமான இந்த வீதியில் இரண்டு கிலோமீற்றர் வரையான வீதியே செப்பனிடப்பட்டுள்ளது எனவும் -

மிகுதி வேலைகள் இதுவரை மேற்கொள்ளப்படாத நிலையில் உள்ளதாகவும் -

இதனால் பெரும் சிரமங்களை மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-203-117)

## சாவகச்சேரிப் பகுதியில் வீதி விபத்துக்களில் ஒரே நாளில் எழுவர் காயம்

தென்மராட்சி,ஜன.29

தென்மராட்சிப் பிரதேசத்தில் வெவ்வேறு இடங்களில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற வீதி விபத்துக்களில் ஏழு பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் இடம்பெற்ற இரு சக்கர உழவு இயந்திரம் - மோட்டார் சைக்கிள் விபத்தில் கெற்பேலியைச் சேர்ந்த உதயகுமார் (வயது 20) என்பவரும், மோட்டார் சைக்கிள் - மிதிவண்டி விபத்தில் சங்கத்தானையைச் சேர்ந்த எஸ்.நிஸாந்தி (வயது 20) என்பவரும், வீதியருகே குவிக்கப்பட்டிருந்த கற்குவியல் மீது மோட்டார் சைக்கிள் ஏறிச்சறுக்கி வீழ்ந்ததில் சாவகச்சேரியைச் சேர்ந்த என்.திலீபன் (வயது 18) என்பவரும் -

சாவகச்சேரியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - மிதிவண்டி விபத்தில் ஏ.தங்கவேலு (வயது 51), வி.சாந்தகுமாரி (வயது 41) ஆகியோரும் -

கெற்பேலிப் பகுதியில் வீதியோரத்தில் கதைத்துக் கொண்டிருந்த இருவர் மீது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் கெற்பேலியைச் சேர்ந்த என்.சசிகுமார் (வயது 20), வி.சுதாகரன் (வயது 16) ஆகியோரும் காயமடைந்தனர். (3-117)

# அம்பாறை மாவட்ட அகதிகளுக்கு அரச நிவாரணம் கிட்டவில்லை

## ஐ.தே.கவின் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு,ஜன.29

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து ஒருமாதம் கடந்துவிட்ட நிலையிலும் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட மக்களுக்கு அரசின் நிவாரண உதவிகள் இன்னும் பூரணமாகச் சென்றடையவில்லை.

உணவின்றியும், சுகாதார வசதிகள் இன்றியும் மற்றும் தங்குவதற்குச் சீரான இடவசதியின்றியும் மக்கள் பெரும் சிரமப்படுகின்றனர்.

இவ்வாறு கூறினார் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபா.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாடில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

சுனாமி அனர்த்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்டது அம்பாறை மாவட்டமே! அதிகளவு உயிர்சேதமும், பொருள்சேதமும் அம்பாறையில்தான ஏற்பட்டன.

ஆனால், இவர்களுக்கு அரசின் நிவாரண உதவிகள் உரியமுறையில் சென்றடையவில்லை. இவர்களின் தங்குமிடவசதிகளும் சீராக இல்லை. சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுகின்றன.

அரசு இம்மக்களுக்கு உரிய முறையில் நிவாரணப் பொருள்களை வழங்குவதாகவும் இவர்களை ஆரோக்கியமான இடங்களில் தங்க வைத்துள்ளதாகவும் கூறுகின்றது. அப்படி ஏதும் நடக்கவில்லை.

அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கு சோறுடன் சுரக்காயும் பருப்பும்தான் கறியாகச் சமைத்துக்கொடுக்கப்படுகின்றன. இதனால், மக்கள் மிகவும் வெறுப்படைந்துள்ளனர்.

அரசுடன் இணைந்திருக்கும் முஸ்லிம் அரசியல்வாதிகள் கூட இவற்றிற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கத்தவறிவிடுகின்றனர். இவர்கள் அரசுக்கு விலைபோயுள்ளனர்.

அரசியல்வாதிகள், உல்லாசப் பயணிகள் போல் அங்கு வந்து பார்த்துவிட்டுச் செல்கின்றனர். ஆக்கபூர்வமான முடிவுகள் எதையும் எடுபபதாக இல்லை. இனி அங்கு செல்லும் அரசியல்வாதிகளை மக்கள் விரட்டியடிக்கும் நிலையில் உள்ளனர். (க-3)

## மானிப்பாய் வடக்குப் பகுதிக்கு வலுக்கூடிய மின்வழங்க நடவடிக்கை

வலி.தெற்கு.ஜன.29

மானிப்பாய் வடக்குப் பகுதி மக்களுக்கு வலுக்கூடிய மின்சாரத்தை வழங்குவதற்கு இலங்கை மின்சாரசபையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மானிப்பாய் வடக்குப் பகுதி மக்களுக்கு மானிப்பாய் மெமோறியல் வீதியூடாக வழங்கப்பட்டு வந்த மின்சாரம் வலுக்குறைந்ததாகக் காணப்படுவதால் அப்பகுதி மக்கள் இரவு நேரஙகளில் வீதியூடாகப் பயணம் செய்வதில் பெருமசிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன் பாடசாலை மாணவர்கள் கல்வி கற்பதற்கும் இரவு நேரங்களின் ஏனைய வீட்டு வேலைகளைச் செய்வதற்கும் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

இது தொடர்பாக இலங்கை மின்சார சபையினரிடம் பலதடவைகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதனையடுத்தே தற்போது மானிப்பாயில் அமைந்துள்ளது இராணுவச் சாவடியூடாக இராசகாரியர் வீதி மூலம் மானிப்பாய் வடக்குப் பகுதியில் உள்ள மக்களுக்கு வலுக்கூடிய மின்சாரத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (3-203-152)

# புலிகளை இணைத்து செயற்பட முன்வந்தமைக்கு அரசைப் பாராட்டுகின்றது ஐ.தே.கட்சி

கொழும்பு.ஜன.29

நாட்டை மீளக்கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தில் விடுதலைப் புலிகளையும் இணைத்துக்கொண்டு செயலாற்ற அரசு முன்வந்திருப்பதை ஐ.தே.க. வரவேற்றுள்ளது.

புலிகளை ஒதுக்கிவைத்துவிட்டு எதுவும் செய்யமுடியாது என்பதை அரசு உணர்ந்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த ஐ.தே.கவின் பிரதிச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

நாம் நாட்டை மீளக் கட்டியெழுப்பும் செயலணியில் புலிகளை இணைத்துக் கொள்ளுமாறு ஆரம்பம் தொட்டே சொல்லிவருகின்றோம். அரச கட்டுப்பாடற்ற பகுதிகளில் புனர்நிர்மாணப் பணிகளை புலிகளிடம் விட்டுவிடுமாறு தெரிவித்தோம்.

நடைமுறைக்கு சாத்தியமான வகையிலேயே திட்டம் வகுக்கப்படல் வேண்டும்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஏற்பட்ட அழிவுகள் பற்றிய விவரங்கள் எமக்குத் தெரியாது. அதைப் புலிகளிடமே அறிந்து கொள்ளமுடியும். அரசு அமைத்திருக்கும் செயலணியில் புலிகளையும் இணைத்துக்கொண்டு காரியமாற்றுவதை வரவேற்கின்றோம் - என்று அவர்மேலும் தெரிவித்தார். (க-3)

# இந்தியக் கடற்படை வைத்தியக் குழுவின் திருமலைக்கான மாவட்ட சேவைகள் பூர்த்தி

திருகோணமலை,ஜன.29

திருகோணமலை வடக்கே குச்சவெளி பொது வைத்தியசாலையில், சுனாமி கடற்கோளுக்கு இரண்டு நாள்களுக்குப் பின்னர் டிசெ.28 இல் இருந்து சேவையாற்றிய இந்தியக் கடற்படையின் வைத்திய குழுவினர் தமது சேவையை முடித்துக்கொண்டு திரும்பியுள்ளனர். அவர்களுக்கு பிரியாவிடை வழங்கும் வைபவம் ஒன்று கடந்த திங்கட்கிழமை அந்த வைத்தியசாலையில் நடைபெற்றது. இந்தியக் கடற்படையின் ஐ.என்.எஸ். ஜமுனா கப்பலின் கட்டளை அதிகாரி கப்டன் முரளிதரன் நாயர், ஸ்ரீலங்கா கடற்படையின் கிழக்கு கடற்பிராந்திய தளபதி ரியர் அட்மிரல் உபாலி ரணவீர ஆகியோர் பிரதம விருந்தினர்களாக அதில் கலந்துகொண்டனர்.

வைத்தியசாலை மைதானத்தில் ஸ்ரீலங்கா கடற்படையினரும், இந்தியக் கடற்படையினரும் கூட்டாகப் பிரியாவிடை பெறும் அணிவகுப்பு ஒன்றை நடத்தினர்.

இந்தியக் கடற்படையின் வைத்திய குழுவின் சார்பில் சத்திரசிகிச்சை நிபுணர்களான கோசி, தர்மபீர் ஆகியோரும் மயக்க மருத்துவ நிபுணருமான மிஸ்ராவும், இலங்கை சுகாதார திணைக்களத்தின் சார்பில் டாக்டர் ஞானகுணாலன், டாக்டர் அருள்குமரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கடற்கோளின் பின்னர் இரு தினங்களில் அங்குவந்து, உள்ளூர் வைத்திய பணியாளர்கள் நிலைமையை சமாளிப்பதற்கு தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் கைகொடுத்து உதவியதற்காக இந்தியக் கடற்படையினருக்கு பெரும் நன்றி தெரிவிப்பதாக அங்கு உரையாற்றிய டாக்டர் ஞானகுணாலன் தெரிவித்தார். (எ-க)

# மன்னார் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் கட்டடத்திலிருந்து படையினரை வெளியேற்றுக!

## செல்வம் எம்.பி. பாதுகாப்பு அமைச்சின் செயலருக்குக் கடிதம்

மன்னார்,டிசெ.29

மன்னார் மாவட்டக் கூட்டுறவுச் சபைக்குச் சொந்தமான கட்டடத்திலிருந்து இராணுவத்தினரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த பல வருடங்களாக மன்னார் மாவட்டக் கூட்டுறவுச் சபைக்குச் சொந்தமான மன்னார் நுழைவாயிலில் இருக்கும் கூட்டுறவுச் சபைக் கட்டடம் இலங்கை பாதுகாப்புப் படையினரின் பாவனைக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதிச் சூழலில், மேற்படி கட்டடத்தைப் புனர்நிர்மாணம் செய்வதன் மூலம் சங்கத்திற்கும் மாவட்டத்திற்கும் நன்மை பயக்கும் வகையில் பயன்படுத்தலாம் என்ற சிந்தனை உருவாகியதன் காரணத்தினால் இக்கட்டடத்தைத் திரும்பவும் தங்களுக்குக் கையளிக்குமாறு சங்க நிர்வாகம் கோரிக்கை விடுத்தது.

கடந்த 15 வருடங்களாகப் பாதுகாப்புப் படையினரின் கைவசம் இக்கட்டடம் இருப்பதினால் பல்வேறு அசௌகரியங்களைச் சங்கம் எதிர்நோக்கவேண்டியுள்ளது.

மேற்படி கட்டடத்தைப் புனரமைப்பதற்கென மன்னார் பிரதேச செயலாளருக்கு ரூபா ஏழு லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. புனர்நிர்மாண வேலைகளைத் தொடங்குவதற்காகக் கட்டடத்தின் சேதத்தை மதிப்பீடு செய்வதற்கு மன்னார் பிரதேச செயலகத் தொழில்நுட்ப உத்தியோகத்தரும், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி உத்தியோகத்தரும் கட்டடத்திற்குள் நுழைய முடியாமல் அங்கு தங்கியிருந்த பாதுகாப்புப் படையினர் தடுத்ததன் காரணத்தினால இதற்கென ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்த முடியாமல் கட்டடத்தைப் பழுதடைந்த நிலையிலேயே விட்டுவிடநேர்ந்தது மக்கள் மத்தியில் பெரும் கவலையையும், மனக் கொதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

மேற்குறிப்பிட்ட காரணிகளை அவதானத்திலெடுத்து மன்னார் மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்குச் சொந்தமான மேற்படி கட்டடம் மன்னார் மாவட்ட மக்களது நன்மைகளுக்குப் பயன்படும் வண்ணம் 2003 ஆனி 10 இல் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் அடங்கிய குழுவில் பாதுகாப்புப் படையினரை வேறு இடத்திற்கு இடமாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்று தள்ளாடி இராணுவ அதிகாரி ஏற்றுக்கொண்டதற்கமைய மேலும் காலந்தாழ்த்தாது, மேற்படி கட்டடத்தைக் கூட்டுறவுச் சங்கச் சபைக்குப் பாரங்கொடுக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். - என்றுள்ளது. (8)



வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவும் 17 ஆவது சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அண்மையில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சத்திய சீலன் மங்கள விளக்கேற்றிவைப்பதைப் படத்தில் காணலாம். (8-190)

## சுதுமலையில் மீளாய்வுப்பணி

வலி.தென்மேற்கு,ஜன.29

சுதுமலை வடக்கு (ஜே/129) கிராம அலுவலர் பிரிவில் சமூகசேவை திணைக்களத்தின் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவர்களுக்கான மீளாய்வு எதிர்வரும் வியாழக்கிழமை மேற்கொள்ளப்படவுள்ளது.

அன்றைய தினம் பொதுசன உதவிப் பணக கொடுப்பனவு அட்டை மற்றும் ஆவணங்களுடன் சுதுமலை வடக்கு கிராம அலுவலர் பணிமனைக்குச் சமுகமளிக்குமாறு வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் வே.அருந்தவராசா கேட்டுள்ளார். (3-135)

## கூட்டங்கள்

வரணி,ஜன.29

எழுதுமட்டுவாள் கூட்டுறவுச் சங்கக் கிளையின் உறுப்பினர்கள் தெரிவுக்கூட்டம் இன்று சனிக்கிழமை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (8-170-202)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ்.கிறீன்கிங்ஸ் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் தலைவர் லீ.நிமலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (8-202-51)

★ ★ ★

வரணி,ஜன.29

தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (8-202-170)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.29

நீர்வேலி சேவி கண்ணாடித் தொழிற்சாலை பாதிக்கப்பட்டோர் ஊழியர்களின் பொது அமைப்புக்கான பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் நீர்வேலி கந்தசுவாமி கோயில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு மேற்படி அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அமைப்பின் தலைவர் ந.கனகலிங்கம் கேட்டுள்ளார். (8-203)

# இலங்கைத் தமிழரை அடித்துக்கொன்ற இரு பிரிட்டிஷ் இளைஞர்களுக்கு ஆயுள் தண்டனை

லண்டன்,ஜன.29

இலங்கைத் தமிழர் ஒருவரை அடித்துக் கொன்ற குற்றத்திற்காக பிரிட்டனைச் சேர்ந்த இரு இனவாத இளைஞர்களுக்கு நீதிமன்றம் ஒன்று ஆயுள் தண்டனையை விதித்தது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் தென் இங்கிலாந்து கென்ட் அஸ் போாட் என்ற இடத்தில் பவிஷங்கர் கதிர்காமநாதன் என்ற இலங்கைத் தமிழரை இந்த பிரிட்டிஷ் இளைஞர்கள் அடித்துக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

செபஸ்தியான் என்றழைக்கப்படும் கதிர்காமநாதன் ஒரு நடைபாலத்தின் குறுக்கே தன் நண்பருடன் நடந்துபோய்க்கொண்டிருந்தார் என்றும் அவ்வேளை, அங்கு வந்த இரு பிரிட்டிஷ் இளைஞர்களும் குடிவெறியில் இனரீதியான வார்த்தைகளால் அவர்களைத் தூசித்துவிட்டுத் தாக்கினார்கள் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றது.

மிட்ஸ்டோன் அரச நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது. இது ஒரு மனிதத்தன்மையில்லாத கொடூரமான ஆத்திரமூட்டப்படாத தாக்குதல். இன ரீதியில் தூண்டப்பட்ட தாக்குதல் என்பது தெளிவாகத் தெரிகின்றது என்று அரச வழக்கறிஞர் அந்தனி ஹே. குரொப்ட் நீதிமன்றில் தெரிவித்தார்.

ஜேம்ஸ் றொசிட்டர் (வயது - 22), றொனி பைல் (வயது - 19) ஆகிய இரு பிரிட்டிஷ் இளைஞர்களும் குறைந்தது 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும் என நீதிபதி தீர்ப்பளித்தார்.

றொசிட்டரும் பைலும் செபஸ்டியானை முதலில் தலையில் தாக்கி, பின்னர் உதைத்துக் கீழே தள்ளினார்கள். அதில் திருப்தியடையாமல் தொடர்ந்து உடம்பிலும் தலைப் பகுதியிலும் உதைத்தார்கள். அவர் அசைவதை நிறுத்தும் வரை உதைத்தார்கள். பின்னர் அவர் தலைமீது ஏறி அழுத்தினார்கள் என்று வழக்கறிஞர் கூறினார்.

24 வயதான தாக்கப்பட்ட இளைஞர் ஆஸ்பத்திரியில் இருவாரங்களின் பின்னர் காலமானார்.

எதிரிகள் தாக்கியதை ஒப்புக்கொண்டார்கள். ஆனால், பலதடவைகள் தாக்கினார்கள் என்பதை மறுத்தார்கள்.

றொசிட்டர் உடம்பில் பச்சை குத்தியிருந்தார். ஒரு புள்டோக் உருவம் மட்டுமன்றி, இங்கிலாந்தில் செய்யப்பட்டது என்ற சொற்களையும் உடம்பில் குத்தியிருந்தார். கதிர்காமனை உதைத்ததைப் பொலீஸாரிடம் ஒப்புக்கொண்டிருந்த அவர், இங்கிலாந்துக்காக ஒரு கோலை அடிக்கும் அளவுக்குப் பலமாக உதைக்கவில்லை என்று கூறியிருந்தார். (ப)

## மல்லாகம் நீதிமன்றில் இன்று ஏலவிற்பனை

யாழ்ப்பாணம்,ஜன.29

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தால் பல்வேறு வழக்குகளின் மூலம் பறிமுதல் செய்யப்பட்ட பொருள்கள் இன்று பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளன.

மேற்படி நீதிமன்றத்தால் பல்வேறு வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட சைக்கிள், மோட்டார் சைக்கிள் என்பவையே இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஏலத்தில் விடப்படவுள்ளன என நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்தார். (3-202)

# கல்வி நிர்வாக சேவைக்கு விண்ணப்பிக்கும் கால எல்லை இருவாரங்களுக்கு நீடிப்பு

காரைதீவு,ஜன.29

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான கால எல்லை மேலும் இருவார காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளதாகத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

விண்ணப்பங்களை மீள அனுப்புவதற்கான முடிவுதிகதி இம்மாதம் 31 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பிரஸ்தாப கடிதங்கள் கிடைக்காத காரணத்தினால் இத் திகதியை மேலும் நீடிக்க வேண்டுமெனப் பொதுச் செயலாளர் த.மகாசிவம், கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி பண்டாராவிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேலும் இருவாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கிலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்றிய பல அதிபர்கள் தமக்குக் கடிதம் கிடைக்கவில்லையென தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் முறையிட்டனர்.

இதனையடுத்து செயலாளர் மகாசிவம் மேற்கொண்ட முயற்சிகளின் பேரில் விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது. (8)

# பாதிக்கப்பட்ட இந்து அமைப்புகளின் விவரங்கள் திரட்டப்படுகின்றன

யாழ்ப்பாணம்,ஜன.29

சுனாமியால் பாதிக்கப்பட்ட இந்து அமைப்புக்கள் தொடர்பான விவரங்களை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினர் திரட்டி வருகின்றனர்.

இவர்கள் கடற்பேரலையால் பாதிக்கப்பட்ட இந்து ஆலயங்கள், இந்து சமய நிறுவனங்கள், அறநெறிப்பாடசாலைகள், இந்துசமய நூலகங்கள் என்பன தொடர்பான தகவல்களைச் சேகரித்து வருகின்றனர்.

பாதிப்பிற்குட்பட்ட மேற்படி அமைப்புகளுடன் தொடர்புடைய ஆலய நிர்வாகிகள் இந்து சமய நிறுவனப் பொறுப்பாளர்கள் மற்றும் அறநெறிப்பாடசாலைப் பொறுப்பாளர்கள், இந்து சமய நூலகங்களின் நூலகர்கள் ஆகியோர் சேதங்கள் தொடர்பான பூரண விவரங்களை பணிப்பாளர், 'இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், 248,1/1 காலி வீதி, கொழும்பு 04' என்னும் முகவரிக்கு நேரடியாக அனுப்பி வைக்கலாம் எனவும், அல்லது மாவட்ட செயலகங்களிலும் பிரதேச செயலகங்களிலும் கடமை புரியும் திணைக்கள கலாசார உத்தியோகத்தர்கள் ஊடாக அனுப்பி வைக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (8-203)

## கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம்,ஜன.29

கியூடெக் - கரித்தாஸ் உயிர்ப்பூட்டல் குழுவின் ஏற்பாட்டில் மகளிர் தலைமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மாதகல் சென்.தோமஸ் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஊக்குவிப்பாளர் பாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் 'முரண்பாடுகளை இனங்காணுதலும் அதனை எதிர்கொள்ளுதலும்' என்னும் தலைப்பில் வளவியலாளர்கள் டொறினா ஜோண்சன், போதகர் ஈனோ புனிதராஜ் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். (8-202-190)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.29

கனடா வேதாந்த ஞான மன்றத்தின் ஏற்பாட்டில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சிக் கருத்தரங்கு எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (8-202)



இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதயன் நிவாரணப் பணியூடாக உணவுப் பொருள்கள் மற்றும் பாவனைப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன. கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் தங்கியிருந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன. உதயனின் பிரதேச செய்தியாளர்கள், முகவர்கள் மற்றும் அலுவலகப் பிரதிநிதிகள் இணைந்து இவற்றை வழங்குவதைப் படங்களில் காணலாம். (8)

இந்த ஆண்டில் வடக்கு - கிழக்கில் உள்ள

# பாடசாலைகளில் நடைபெறும் போட்டிகள் தொடர்பான திகதிகள் அறிவிப்பு

வலி.தெற்கு,ஜன.29

மாணவர்களுக்கிடையே இந்த ஆண்டில் நடத்தப்படவுள்ள போட்டிகளுக்கான திகதிகளை வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளது.

அதன்படி தமிழ்த்தினப் போட்டிகள் பாடசாலை மட்டத்தில் மார்ச் மாதம் 31ஆம் திகதியும் வலயமட்டத்தில் மே மாதம் 31ஆம் திகதியும் மாகாணமட்டத்தில் ஜூலை மாதம் 8ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

ஆங்கிலதினப் போட்டிகள் பாடசாலை மற்றும் வலய மட்டத்தில் ஜூலை மாதம் 22ஆம், 23ஆம் திகதிகளிலும் மாவட்ட மட்டப் போட்டிகள் ஜூலை மாதம் 30ஆம், 31ஆம் திகதிகளிலும் மாகாண மட்டத்தில் செப்ரெம்பர் மாதம் 24ஆம், 25ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

விளையாட்டுப் போட்டிகள் பாடசாலை மட்டத்தில் அடுத்த மாதம் 26ஆம் திகதியும் வலய மட்டத்தில் மார்ச் மாதம் 13ஆம்,20ஆம் திகதிகளிலும் மாவட்ட மட்டத்தில் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

மாகாண மட்டத்திலான உடற்பயிற்சிப் போட்டிகள் ஜூன் மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளன.

பெண்களுக்கான பெருவிளையாட்டுப் போட்டிகள் ஜூன் மாதம் 8ஆம் திகதிமுதல் 12ஆம் திகதிவரையிலும், ஆண்களுக்கான போட்டிகள் ஜூன் மாதம் 15ஆம் திகதிமுதல் 19ஆம் திகதிவரையிலும் நடைபெறவுள்ளன.

(10-152-202)

## வலி.மேற்கில் நெல் அறுவடை ஆரம்பம்

வலி.மேற்கு,ஜன.29

வலி. மேற்குப் பிரதேசத்தில் நெல் அறுவடை தற்போது ஆரம்பமாகியுள்ளது. குறுகிய கால நெல் இனத்தை அராலி, வட்டுக்கோட்டைப் பகுதிகளில் பயிர்செய்த விவசாயிகளே நெல் அறுவடையை மேற்கொண்டுள்ளனர்.

அறுவடையை மேற்கொண்ட விவசாயிகள் அமோக விளைச்சல் கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

(10-175)

## வீதி அபிவிருத்திக்கு ரூ.50 லட்சம் ஒதுக்கீடு

தென்மராட்சி,ஜன.29

நிவாரண, புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சினால் உள்ளூராட்சி சபைகளின் வீதி அபிவிருத்தி வேலைகளுக்கென 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாநகரசபை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி ஆகிய நகரசபைகள் ஆகியவற்றில் வீதி அபிவிருத்தி வேலைக்கென இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளில் முன்னுரிமை அடிப்படையில் மூன்று வேலைத் திட்டங்களின் மதிப்பீடுகளை ஒவ்வொரு வேலைத் திட்டமும் தலா 5லட்சம் ரூபாவுக்குத் தயாரித்து ஒரு வாரத்தினுள் அனுப்பிவைக்குமாறு யாழ். செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் க.கேதீஸ்வரன் அந்தந்த உள்ளூராட்சி சபைகளுக்கு அறிவித்துள்ளார்.

(3-117)

## தரமுயர்வுப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

தென்மராட்சி,ஜன.29

மாகாணப் பொது எழுதுநர் சேவை, சிறாப்பர் சேவை, கணக்குப் பதியுநர் சேவை, களஞ்சியக் காப்பாளர் சேவை, தட்டெழுத்தாளர் சேவை ஆகியவற்றின் வகுப்பு II 'ஆ' பிரிவில் கடமையாற்றும் அலுவலர்களை வகுப்பு II 'அ' பிரிவிற்குத் தரமுயர்த்தும் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரின் விதப்புரையுடன் அடுத்த மாதம் 11ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு ஆணைக்குழுவின் செயலாளர் பொ.விநாயகலிங்கம் கேட்டுள்ளார்.

முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுவோர் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லையெனவும் ஏனையோர் தத்தமது பகுதிப் பிரதேச செயலகத்தில் 90 ரூபாவை பரீட்சைக் கட்டணமாகச் செலுத்திப் பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் அனுப்பிவைக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

(ழ-202-117)

## சகல அரச சேவைகளும் ஒரே சேவையில் இணைப்பு

### கடந்த வருட ஜனவரி முதல் நடைமுறைக்கு

வலி. மேற்கு.ஜன.29

பொது எழுதுநர் சேவை, சுருக்கெழுத்தாளர் சேவை போன்ற சேவைகள் யாவும் அரச முகாமை உதவியாளர் சேவையின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பான சுற்றறிக்கையொன்றினைப் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.சீ.மான்னப்பெரும சகல அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், அரச நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

பொது எழுதுநர்சேவை, தட்டெழுத்தாளர் சேவை, சுருக்கெழுத்தாளர் சேவை, கணக்குப் பதியுநர் சேவை, சிறாப்பர் சேவை, பண்டகசாலைக் காப்பாளர் சேவை ஆகியன 01.01.2004 ஆம் திகதிமுதல் அரச முகாமை உதவியாளர் சேவையின்கீழ் உள்ளீர்ப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் -

சகல வேலைகளையும் சகலரும் மேற்கொள்ளவேண்டும் என்றும் - அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(3-175)




அழகுக் கலை, தையல், பூ, கேக் போன்ற வகுப்புகள் அனைத்தும் 30.01.2005 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஆரம்பமாகும்.


## சைவசமய அறிவுப்போட்டி அடுத்த மாதம் நடைபெறும்

யாழ்ப்பாணம்.ஜன.29

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவ சமய அபிவருத்திக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் சைவசமய அறிவுப்போட்டி, செயன்முறைப் போட்டி என்பன அடுத்த மாதம் 20 ஆம், 26ஆம், 27 ஆம் திகதிகளில் நடைபெறுவுள்ளன.

சைவசமய அறிவுப் போட்டி, தரம் 3 தொடக் கம் 13 வரையான வகுப்புகளுக்கு அடுத்த மாதம் 20 ஆம் திகதியும் தரம் ஒன்று, இரண்டு வகுப்புகளுக்கு அடுத்த மாதம் 26 ஆம் திகதியும் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

இப்போட்டிப் பரீட்சையில் இந்து நாகரிகம், சைவசமயம், சைவசமய அறிவுப் பரீட்சை, நீதி நூல் மனனப்போட்டி என்பன இடம்பெறவுள்ளன.

செயல்முறைப் போட்டி மத்திய பிரிவு, மேற்பிரிவு என பிரிவுகளாக அடுத்த மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இச் செயன்முறைப்போட்டியில் கோலம் போடுதல், தோரணம் பின்னுதல் மாலை கட்டுதல் என்பன இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் சைவசமய அபிவிருத்திக் கழக அறிவகம், இல.163, நாவலர் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் விண்ணப்பங்களைப் பெற்று எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(10-202)

## மரண அறிவித்தல்

### திருமதி அல்பிறட் அந்தோனிக்கம்மா (நேசமணி)



புனித அந்தோனியார் பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அல்பிறட் அந்தோனிக்கம்மா 24.01.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அல்பிறட்டின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பிரான்சிஸ் மற்றும் சிங்கராசா, தேவசகாயம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தங்கராணி, றொபேட் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் றாணி, றோசம்மா அடைக்கலநாயகி ஆகியோரின் மைத்துனியும் அலெக்சாண்டர், ஜொய்சி (கனடா), அன்ரன், தவச்செல்வம் (கனடா), கேமா (கனடா), விஜி (கனடா), றாதா (கனடா), சுசி (கனடா), ஜெயசீலன், லின்ரன் (கனடா), அமுதா, சித்திரகுமார், வனிதா, றெஜி, சுதா, றஜிதா, சாந்தி, நெல்சன்குமார், ராஜன் (சவுதி), செல்வன், சிமிதா, அமலதாஸ், றோசா, மலர், றசினா, வின்சன்கெனடி, லலிதா, ஜெமிலா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜீவிதா, சபிதா, கவிதா, பியனதாஸ், அனுசியா, ஜெனதாஸ், யூலி, சியோன், அபிசன் (கனடா), றோஜித் (கனடா), ஜென்சிகா, கனிஸ்ரா, அன்றூ (கனடா), விமல், விதுசா, விலக்ஸ்சனா, வினோ ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.01.2005) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நடைபெற்றுப் பின், பருத்தித்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*4ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.*

தகவல்:
சிங்கராசா (குடும்பத்தினர்),
தேவசகாயம் (குடும்பத்தினர்),
அலெக்சாண்டர் (குடும்பத்தினர்).

(41408) (24-18-15)

## வெளிச்சம் 89ஆவது இதழ் வெளிவந்துள்ளது

யாழ்ப்பாணம்,ஜன.29

விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தின் கலை, இலக்கிய, சமூக இதழான வெளிச்சத்தின் 89ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர் தின உரையின் ஒரு பகுதியுடன் மாலிகா, புதுவை இரத்தினதுரை, கை.சரவணன், செல்வா ஆகியோரின் கவிதைகளும் -

முல்லை யேசுதாசன், க.சட்டநாதன், மு. அநாதரட்சகன், செ.யோகநாதன் ஆகியோரின் சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன.

அத்துடன், மயிலங்கூடல் பி.நடராசன், மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரின் கட்டுரைகளும் செங்கை ஆழியான் ஞானரதன் ஆகியோரின் தொடர் கட்டுரைகளும் யோ.சத்யன், ஈ.குமரன் ஆகியோரின் நூல்மதிப்பீட்டுரைகளும் -

மூதறிஞர் சொக்கன், கவிஞர் தில்லைச்சிவன், எழுத்தாளர் கே.வி.நடராஜன் ஆகியோர் பற்றிய அஞ்சலிக் குறிப்புகள் உட்படப் பல ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன.

(10-202)


**உடனே தேவை**

ரைப் செற்றிங் தெரிந்தவர்கள்,
மிசின் மைண்டர் 02. 02. 2005
புதன்கிழமை காலை 10.00 மணிக்கு
நேரில் வரவும்.
**சைவப்பிரகாச அச்சு இயந்திரசாலை**
(யாழ். இந்து. சந்தி),
450, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(41423)


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா அமிர்தலிங்கம்

(இளைப்பாறிய கிராம சேவகர், அச்சுவேலி)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் லண்டனை இறுதிக்கால வதிவிடமாகவும் கொண்ட கந்தையா அமிர்தலிங்கம் 24.01.2005 திங்கட்கிழமை லண்டனில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய திரு.திருமதி கந்தையா ஆகியோரின் அன்பு மகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களாகிய பரநிருபசிங்கம், பரமேஸ்வரன், தனபாலசிங்கம், மனோகரன் ஆகியோரின் சகோதரனும் திருமதி பரமேஸ்வரன், மகேந்திரன், பூபாளபிள்ளை, பதிராஜா, கணேசபிள்ளை, தெய்வேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் சிவசீலன், ஸ்ரீலதா, ஸ்ரீமேவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காந்திமதி, ஸ்ரீகிருஷ்ணதாஸ், வாசுகி ஆகியோரின் மாமனாரும் சஜீவன், ஷாமிலி, சஜிதா, சாய்ராம், ஷகிலா, சாலினி, மாதவன் ஆகியோரின் தாத்தாவும் பரமசிவத்தின் பாசமிகு ஐயாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.01.2005 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

T.P. No.: (லண்டன்) - 0044 208 543 22245

*அச்சுவேலி.*

தகவல்:
குடும்பத்தினர்.

(41419) (24)

### முருகேசு மகேந்திரன்

(ஓய்வுபெற்ற மருந்தாளர்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு மகேந்திரன் 26.12.2004 ஞாயிற்றுக்கிழமை கல்முனையில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - இராஜலக்ஷ்மி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - மோகனாம்பிகை தம்பதிகளின் மருமகனும் இரமணியின் கணவரும் துர்க்கா, மதன், துவாரகா ஆகியோரின் தந்தையாரும் திருமதி விஜயராணி கணநாதன், தெய்வேந்திரன், திருமதி புஷ்பராணி குகதாசன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கல்முனையில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*859, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
சு.விஜயதேவா (மாமன்),
மனைவி, மக்கள்.

(41417) (24-18-15)

## இயற்கை அனர்த்தத்தினால்
# உயிரிழந்த ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம்,ஜன.29

'எடியுகேஷன் இன்ரநஷனல்' என்ற சர்வதேச அமைப்பு வடக்கு - கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த ஆசிரியர்களுடைய குடும்பங்களுக்கு முதற்கட்டமாக 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

'எடியுகேஷன் இன்ரநஷனல்' தலைவர் பிரடவான் லியுவனும் இந்த அமைப்பின் ஆசிய - பசுபிக் பிராந்திய பிரதம இணைப்பாளர் அலோசியஸ் மத்தியூஸும் அண்மையில் கொழும்பு வந்தபோது தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவத்துடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இந்த அமைப்பின் பிரதம இணைப்பாளர் அலோசியஸ் மத்தியூஸ், சுனாமி புனரமைப்புக் குழுவின் தலைவர் வி.அஞ்சலாவிடம் 5 லட்சம் ரூபாவை வழங்கி, இந்தப் பணத்தில் இருந்து சுனாமியில் சிக்கி உயிரிழந்த ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கும்படி கூறினார்.

'எடியுகேஷன் இன்ரநஷனல்' அமைப்பினால் வடக்கு - கிழக்கிற்கு வழங்கப்படும் உதவிகள் யாவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஊடாகவே வழங்கப்படும் என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் கல்விப்புலம் தவிர்ந்த ஏனைய துறைகளைச் சர்வதேச தொழிற்சங்க சம்மேளனத்தில் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய நிலைமை இல்லாதபடியால் அத்துறைகளில் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சமர்ப்பிக்கும் தகவல்களை ஏற்று உதவிகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று 'எடியுகேஷன் இன்ரநஷனல்' தலைவர்கள் உறுதியளித்துள்ளனர்.

'எடியுகேஷன் இன்ரநஷனல்' தலைவர் பிராட்வான் லீயூவன் ஏப்ரல் மாதம் இலங்கைக்கு வந்து வடக்கு - கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடவுள்ளார் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (8-203)

# இந்தியாவிலிருந்து திரும்பியோருக்கு ஐ.ஓ.எம். நிறுவனம் உதவி

வலி.வடக்கு,ஜன.29

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் இந்தியாவில் இருந்து வந்து மீளக்குடியேறியுள்ள ஆறு குடும்பங்களுக்கு ஐ.ஓ.எம். நிறுவனம் தொழில் செய்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது.

ஐந்து குடும்பங்களுக்குக் கோழிவளர்ப்புக்கு வேண்டிய கோழிக்குஞ்சுகள் மருந்துகள், உணவு வகைகள், உபகரணங்கள் என்பவற்றையும், ஒருவருக்குத் தேநீர்க்கடை நடத்துவதற்கான உபகரணங்களையும் இந் நிறுவனம் வழங்கியுள்ளது.

ஏற்கனவே பல குடும்பங்களுக்குப் பயனாளிகள் எந்தத் தொழிலை செய்யவிரும்புகின்றார்களோ அவர்களுடைய விருப்பத்தின் அடிப்படையில் உதவிகளை வழங்கியுள்ளதாகவும் ஐ.ஓ.எம். நிறுவன உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து திரும்பி மீள் குடியேற்றத்தை மேற்கொண்டு வரும் குடும்பங்களுக்குத் தொழில் முயற்சிக்கான உதவிகளை இந்நிறுவனம் விரைவாக வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-86)

# இந்திய வெங்காயத்தின் வருகையால் உள்ளூர் வெங்காய விலை வீழ்ச்சி

வலி.தெற்கு,ஜன.29

இந்தியாவிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதனால உள்ளூர் வெங்காயத்தின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மருதனார்மடம், சுன்னாகம் போன்ற பொதுச் சந்தைகளில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சின்ன வெங்காயம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இந்திய வெங்காயம் கிலோ ஐம்பது ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. இந்நிலையில் அறுபது ரூபா வரையில் விற்பனையாகிக் கொண்டிருந்த உள்ளூர் வெங்காயம் கிலோ முப்பது ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்தியவெங்காயத்தின் இறக்குமதியால் தாம் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாகவும், நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

உள்ளூர் உற்பத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்குகளும் விற்பனைக்காகச் சந்தைக்கு வரத் தொடங்கியுள்ளமையால் உருளைக் கிழங்கின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளது. (8-203-152)

## நெற் பயிர்களில் பூச்சிகளின் தாக்கம்

தொல்புரம்,ஜன.29

மூளாயில் உள்ள நெல் வயல்களில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் கதிர் வநத நிலையில் காணப்படும் இவ்வேளையில், இனம் தெரியாத பூச்சிகளின் தாக்கத்திற்குள்ளாகி அழிவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பூச்சிகளின் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ள நெற்கதிர்கள் கருகி அழிவடைகின்றன. இந்தத் தாக்கத்திற்கு மாறுபட்ட காலநிலையே காரணம் என இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (8-203-ரி)

# படகுக் கட்டுமானப் பயிற்சிக் கல்லூரியை அடேல் பாலசிங்கம் திறந்துவைத்தார்

வடமராட்சி,ஜன.29

வடமராட்சி கிழக்குக கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் எம்.எம்.எஸ் நிறுவனமும் இணைந்து தாளையடியில் புதிதாக அமைத்த படகுக்கட்டுமானப் பயிற்சிக் கல்லூரியை திருமதி அடேல் பாலசிங்கம் திறந்துவைத்தார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் ஆரம்பமான இந்நிகழ்வில் மங்கைப் படகுக் கட்டுமானப் பிரிவுப் பொறுப்பாளர் ஆனதி மங்கள விளக்கினை ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியினை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து திருமதி அடேல் பாலசிங்கம் படகுக்கட்டுமானப் பயிற்சிக் கல்லூரியின் பெயர்ப பலகையைத் திரைநீக்கம் செய்து பயிற்சிக் கல்லூரிக்கான நாடவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர். (8-203)

## அந்தாதிப் பாடல்கள் இலவச விநியோகம்

சுழிபுரம்,ஜன.29

வழக்கம்பரை பஜனை சபையினர், அம்மன் ஆலயங்களில் இம்மாதம் வரும் அமாவாசை தினத்தன்று ஆய்வுரை செய்வதற்கென அபிராமிப்பட்டரின் அபிராமி அந்தாதிப் பாடல்களை இலவசமாக வழங்கிவருகின்றனர்.

இவற்றைப் பெறவிரும்புவோர் பஜனைச் சபைச் செயலாளருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன், அபிராமி அந்தாதிப் பாடல்களைத் தபால் மூலம் பெறவிரும்புவோர் முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (8-203-28)

## தையல்,மனையியல் பரீட்சைகள்

தென்மராட்சி,ஜன.29

தென்மராட்சிப் பிரதேச செயலக கிராமிய அபிவிருத்திப் பிரிவு மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் கடந்த வருடம் கொடிகாமத்தில் நடத்தப்பட்ட தையல், மனையியல் பயிற்சி வகுப்புகளில் பங்கு பற்றிய மாணவர்களுக்கான பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 12ஆம், 13ஆம் திகதிகளில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இந்தப் பரீட்சைகளுக்குப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட மாணவர்கள் அனைவரையும் தோற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(8-203-117)

# பொது நிகழ்வுகளில்...



கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமிய மட்ட அமைப்புகளுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறியினை மாவட்ட முன்னாள் கிராமிய அபிவிருத்தி அலுவலர் செ.செல்வரத்தினம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன், பிரதேச கிராமிய அபிவிருத்தி அலுவலர் இ.பரராஜசேகரம், நிர்வாக அலுவலர் எஸ். சோமசுந்தரம் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

(படம் :தென்மராட்சிச் செய்தியாளர்)



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கடந்த பல வருடங்களாக விரிவுரையாளராகப் பணிபுரிந்து அண்மையில் ஓய்வு பெற்றுள்ள திருமதி வி.இரத்தினவேலுக்கு கலாசாலையில் நடைபெற்ற பிரிவுபசார விழாவின்போது அதிபர், விரிவுரையாளர்கள் சகிதம் ஆசிரிய மாணவர்களினால் அவர் அழைத்து வருவதைப் படத்தில் காணலாம்.

(படம் : கோப்பாய்ச் செய்தியாளர்)



யாழ்ப்பாணம், தெல்லிப்பழை தனியார் சிற்றூர்திச் சங்கத்தின் சுன்னாகம் தரிப்பு நிலையத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

யாழ். மாவட்ட அரசியல்துறையின் ஊடகப் பேச்சாளர் இமையவன், யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர் செ.பத்மநாதன், பிரதேசசபைச் செயலாளர் திருமதி சொக்கலிங்கம், தெல்லிப்பழை சிற்றூர்திச் சங்கத் தலைவர் அ.அமிர்தராசா ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

(படம்: கரவெட்டிச் செய்தியாளர்)



இலங்கை வங்கியின், மானிப்பாய் கிளையின் விரிவாக்க அலுவலகம், அண்மையில் சங்கானையில் திறந்து வைக்கப்பட்டபோது வலி.மேற்கு உதவிப் பிரதேச செயலர் திருமதி சி.பரபு மங்கள விளக்கேற்றி வைப்பதைப் படத்தில் காணலாம்.

மாவட்ட முகாமையாளர் தி.நடராஜலிங்கம் மற்றும் பி.சுந்தரலிங்கம், என்.ஜெயரத்தினம், திருச்செல்வம் பாதுகாப்பு ஊழியர் ர்.சிவராசா ஆகியோர் படத்தில் உள்ளனர்.

(படம் :சங்கானைச் செய்தியாளர்.)

# கொரிய அமைச்சர் தலைமையிலான குழு நேற்று யாழ். குடாநாட்டுக்கு விஜயம்

யாழ்ப்பாணம்,ஜன.29

கொரிய நாட்டின் குடிவரவு - குடியகல்வு அமைச்சர் அன்ஸ் ஹிஸ்வொங் தலைமையிலான குழுவொன்று நேற்று யாழ்ப்பாணம் வந்தது.

இக் குழுவில் கொரிய நாட்டின் 'கொய்கசு' நிறுவனத் தலைவர் கிம் சக்குவைன், இலங்கைக்கான கொரியத் தூதுவர் கிம் பிகைன் வேன் ஆகியோரும் அடங்கியுள்ளனர்.

இக் குழுவினர் நேற்று யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்குச் சென்று அங்கு அதிபர் என். யோகராஜனுடன் கலந்துரையாடினார்கள்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொரிய அரசு மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக ஆராயவும், பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடவுமே இக் குழுவினர் யாழ்ப்பாணம் வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாகக் கொரிய நாட்டின் 'கொய்க்கா' நிறுவனத்தின் தலைவன் கருத்துத் தெரிவிக்கையில், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைக் கட்டியெழுப்புவதற்கு கொரியா சகல வழிகளிலும் உதவிபுரியும்.

சுனாமி பாதித்த பகுதிகளைப் பார்வையிட்டு மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு மதிப்பீட்டுக் குழுவொன்று அடுத்த வாரமுற்பகுதியில் இலங்கை வரவுள்ளது. இக்குழுவினர் சமர்ப்பிக்கும் மதிப்பீட்டறிக்கையின் படி கொரியாவின் உதவிகள் உடனடியாக வழங்கப்படும்.

அத்துடன், யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியை சர்வதேச தரத்துக்கு உயர்த்துவதற்கும் கொரிய அரசு உதவி புரியும் - என்றார்.

(8-13-70)





நேற்று யாழ். வந்த கொரிய குடிவரவு குடியகல்வு, அமைச்சர் அன்ஸ் ஹிஸ்வொங் தலைமையிலான குழு யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. *(படங்கள்: அலுவலகப்படப் பிடிப்பாளர்)*

## மின்வழங்குவதில் தச்சந்தோப்பு புறக்கணிப்பு எனப் புகார்

யாழ்ப்பாணம் ஜன.29

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு மின்சாரம் வழங்கும் திட்டத்தில் தச்சந்தோப்புக் கிராமம் புறக்கணிக்கப்படுவதாகத் தச்சந்தோப்பு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தினர் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

இது தொடர்பாக சனசமூக நிலைய நிர்வாகத்தினர் இலங்கை மின்சார சபையின் யாழ். பிராந்திய பொறியியலாளருக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளனர். இந்தக் கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

2001 ஆம் ஆண்டு மே மாதம் மீளக்குடியமர்ந்த எமது மக்களுக்கு இவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக பலருககு எழுத்துமூலமும், நேரிலும் விண்ணப்பித்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்நிலை தொடருமானால் மின்சாரசபையின் யாழ். அலுவலகத்தின் முன்பாக மறியற் போராட்டம் நடத்துவதைத் தவிர வேறுவழியில்லை - என்று அதில் உள்ளது.

(எ-202)

# தேர்தல் ஒத்திவைக்கும் திட்டத்தை ஜே.வி.பி. கடுமையாக எதிர்க்கும்

## அமைச்சர் லால்காந்த தகவல்

கொழும்பு,ஜன.29

சுனாமி அனர்த்தத்தைக் காரணம்காட்டி இடம்பெற வேண்டிய தேர்தலை ஒத்திவைக்கும் முயற்சியை ஜே.வி.பி.கடுமையாக எதிர்க்கும் என கிராமிய கைத்தொழில் அமைச்சர் கே.டீ.லால்காந்த தெரிவித்துள்ளார்.

அண்மையில் அம்பாந்தோட்டையில் ஐந்து ஆண்டுகளுக்கு தேர்தல் எதனையும் நடத்த வேண்டிய அவசியமில்லையென ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்குறித்து அபிப்பிராயம் வெளியிடும் வகையில் ஜே.வி.பியைச் சேர்ந்த அமைச்சர் கே.டீ.லால்காந்த மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இவ்விடயம் குறித்து கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் அபிப்பிராயத்தைக் கேட்டறியாது ஜனாதிபதி தன்னிச்சையாக வெளியிட்டிருக்கும் இக்கருத்து அவரது தனிப்பட்ட கருத்தாகவே கருதப்பட முடியுமெனவும் தெரிவித்தார்.

உரிய வேளையில், உரிய விதத்தில் தேர்தல் நடத்தப்படவேண்டியது அவசியம் என்பதே எமது நிலைப்பாடு. தேர்தல் பிற்போடப்படவேண்டுமாயின் அரசியல் கட்சிகள் மற்றும் ஜனநாயக அமைப்புக்களது இணக்கம் பெற்றுக் கொள்ளப்படல் அவசியமாகும். தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அது ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும். அத்துடன் பொது ஜன அபிப்பிராய வாக்கெடுப்பொன்றின் மூலம் பொதுமக்களது அனுமதியும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

அனர்த்தப் பாதிப்பிலிருந்து நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் திட்டம் ஓராண்டு என்ற குறுகிய காலத்திட்டமாக உருவாக்கப்படுவதுடன், முதலில் ஆறுமாதங்கள் பின்னர் மூன்று, மூன்று மாதங்கள் என்ற விதத்தில் மூன்று கால இடைவெளிகளில் அவற்றை நிறைவேற்ற நாமனைவரும் ஒன்றிணைந்து முயற்சித்தல் வேண்டும்.

இதனை விடுத்து தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பாகச் சிந்திக்கத் தற்போது எவ்வித அவசியமும் ஏற்படவில்லை "எனவும் அமைச்சர்" லால்காந்த தெரிவித்துள்ளார்.

(10)

## கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறைப் பிரதேச சபை உத்தியோகத்தர் திருமதி ப.லதா அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சோ. நீலவேணி அம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஊர்காவற்றுறைப் பிரதேச சபை. (சி-40694) செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.*

## பொதுமண்டபக் கூரை மீளப்புனரமைப்பு

மண்டைதீவு,ஜன.29

கடந்தவருட இறுதியில் மண்டைதீவில் வீசிய பலத்த காற்றினால் தூக்கிவீசப்பட்ட ஆறாம் வட்டாரத்தில் உள்ள பொது மண்டபத்தின் கூரை மீளப்புனரமைக்கப்பட்டுள்ளது.

'நிக்கொட்' நிறுவனத்தால் அமைக்கப்பட்ட இந்த மண்டபக் கூரையை மீளப் புனரமைப்பதில் சம்பந்தப்பட்டவர்கள் எவரும் கவனம் செலுத்தவில்லை என்றும் -

இதனால் மண்டபத்தின் அயலில் வசிப்பவர்களும் முன்பள்ளியில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோரும் இணைந்து இதனைத் தமது செலவில் புனரமைத்துள்ளனர்.

கூரை தூக்கி வீசப்பட்டதையடுத்துச் சில மாதங்களாக இயங்காமலிருந்த முன்பள்ளி, கூரை மீள அமைக்கப்பட்டதையடுத்து மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

(எ-88)

## மரண அறிவித்தல்கள்



### மாணிக்கம் இராசரத்தினம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியர், இணுவில் இந்துக் கல்லூரி)*

இணுவில் தெற்கைச் சேர்ந்த மாணிக்கம் இராசரத்தினம் அவர்கள் நேற்று (28.01.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினமணியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், தாவடி தகபாடசாலை) அன்புக் கணவரும் விக்கினேஸ்வரன் (சாந்தி அச்சகம்), ஸ்ரீரஞ்சினி, ஸ்ரீரஜனி ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராணி, குணரத்தினம் (விஜயாஸ் ஸ்ரோர்ஸ் உடையார்கட்டு), ஜெயாமூர்த்தி (N.A.R.அன்கோ இணுவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும் இராசரத்தினம் (N.A.R. அன்கோ இணுவில்), காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், துரைராஜா ஆகியோரினதும் மல்லிகாதேவி (கொழும்பு), சந்திரராஜா (ஆசிரியர் பூண்டுலோயா), மனோகரன் (உப அதிபர் தாவடி இ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் இராசையா (இந்தியா), சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), தில்லையம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), பாலசுப்பிரமணியம், திருமதி குணராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), இரகுபதி (படவரைஞர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜனிதா, அபர்ணா, கோகுலபவான், நிசாந்தினி, துவாரகா, கஜகரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 29.01.2005 சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் தெற்கு,*
*இணுவில்* (சி-40698)

தகவல்: (திருமதி இ.இரத்தினமணி) மனைவி.

### கி.மரியாம்பிள்ளை தவராஜா (தவம்)

கரவெட்டியைச்சேர்ந்த கிறகரி மரியாம்பிள்ளை தவராஜா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிறகரி-றோசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் டெய்சி ஸ்ரெலாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்புச் சகோதரனும் டெனிஸ் தேவராசா (கிங்கிலி-London), மேசியன் ஆன்சிலி (Colombo), மேவின் ஸ்ரான்லி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.1.2005) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30மணிக்கு கரவெட்டி வடக்கில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பின்பு கீரிப்பல்லி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தபாற்கந்தோரடி,*
*கரவெட்டி.*
*T.P:021- 2263035* (சி-40697)(17)

தகவல்: டெய்சி ஸ்ரெலா (மனைவி).

## புதிய இடத்தில் ஆயுள்வேத வைத்தியசாலை

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ்.கொய்யாத் தோட்டப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வந்த யாழ். மாநகர சபையின் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை. நேற்று முதல் பாஷையூர் மகப்பேற்று மருத்துவ நிலையத்தில் செயற்பட்டுவருகிறது.

(10-190)


Jayoda ஜயோதா ජයෝද

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7597622 முதல் 7608965 வரை

சீட்டிழுப்பு இல. 104 திகதி 27-1-2005

வெற்றி எண்கள் 1 6 7 0 7 0 சுப்பர் எண் 20

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,72,19,175/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,72,19,175/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 98 | 5,000/- | 4,90,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 996 | 500/- | 4,98,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,906 | 50/- | 4,95,300/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 98,205 | 10/- | 9,82,050/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 08 | 5,000/- | 40,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 100 | 1,000/- | 1,00,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 990 | 100/- | 99,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,830 | 20/- | 1,96,600/- |
| மொத்தம் | 120,153 | | 50,53,550/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 50,53,550/-

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 1,74,94,725/-

தொடர் இல. 6648828 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஜனவரி 31 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

7598906-3-50
7598262-4-02
7602528-4-89
7600994-3-10
7604253-8-02
7602381-1-36
7598671-4-65
7606417-3-16

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# பிரதேச அபிவிருத்தியில் விளையாட்டும் ஒன்று அதற்காகவே எம்.பிக்கள் நிதியை ஒதுக்கினர்

## நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தகவல்

தென்மராட்சி,ஜன.29

யுத்த அனர்த்தங்களால் அழிந்த தென்மராட்சிப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு பல விடயங்கள் இருந்தபோதிலும். பிரதேசத்தில் விளையாட்டுத்துறையையும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கில் யாழ். மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதியினை ஒதுக்கியுள்ளனர்.

இவ்வாறு நேற்று தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தெரிவித்தார்.

பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ச.வீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் உரையாற்றுகையில்:-

தென்மராட்சிப் பிரதேசத்தில் விளையாட்டுக் கழகங்கள் பயிற்சி பெறுவதற்குப் போதிய மைதானங்கள் இல்லாதது பெரும் குறையாக உள்ளது.

கழகங்களுக்கென வசதிகள் கொண்ட மைதானம் இல்லாததால் வீரர்கள் வயல் வெளிகளிலும் பாடசாலை மைதானங்களிலும் ஒரு சில விளையாட்டுக்களில் மட்டும் பயிற்சி பெறுகின்றனர்.

சாவகச்சேரி நகரசபைப் பொது விளையாட்டு மைதானத்தைப் புனரமைக்க நிதி வழங்குமாறு விளையாட்டுத்துறை அமைச்சரிடம் கோரியுள்ளேன். சாவகச்சேரி பொதுமைதானம் சகல வசதிகள் கொண்ட மைதானமாக புனரமைக்கப்பட்டதும் பிரதேசத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் பயற்சிகளையும் போட்டிகளையும் நடத்துவதற்கு ஏதுவாக அமையும்.

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பல வீர, வீராங்கனைகள் மாவட்ட, மாகாண, தேசியமட்ட விருதுகள் பெற்றுள்ளனர்.

தொடர்ந்தும் இப்பிரதேச வீர, வீராங்கனைகள் பல சாதனைகளைப்படைக்க ஒவ்வொரு விளையாட்டுக்கழகங்களும் மீண்டும் புத்துயிர் பெறவேண்டும் - என்றார்.

பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் சி.குணசிங்கம், விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சதீஸ்குமார் ஆகியோரும் இதில் உரையாற்றினர். (எ-117)

# பெண்களுக்கு சுயதொழில் கடன் செலான் வங்கி வழங்கியது

யாழ்ப்பாணம்,ஜன.29

'கியூடெக்' நிறுவனத்தின் பெண்கள் அமைப்புகளில் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக்குச் சுயதொழிலை ஆரம்பிப்பதற்காக செலான் வங்கியினால் கடன் அடிப்படையில் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டன.

இக்கடன் வழங்கும் வைபவம் கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை சி.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது. கியூடெக் நிறுவனப் பெண்கள் அமைப்புக்களிலிருந்து இக்கடன்களைப் பெறுவதற்கு 85பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 11பேருக்கு நேற்று முதற்கட்டமாகக் கடன்கள் வழங்கப்பட்டன.

ஏனையோருக்குப் பின்னர் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. நேற்றைய கடன் வழங்கும் நிகழ்வில் செலான் வங்கியின் பொது முகாமையாளர் அஜித்தா பாஸ் குவல் மற்றும் மனிதவள பிரதி முகாமையாளர் பண்டுக்க ஜயமன்ன, கணனி தொழில்நுட்பப் பிரிவு பிரதி பொதுமுகாமையாளர் கலாநிதி ராமநாயக்க, வியாபார அபிவிருத்திப் பிரிவு முகாமையாளர் வி.குலேந்திரா சேயோன், உதவிப் பொது முகாமையாளர் பத்மநாதன் நிரஞ்சன் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-190)

# இரவு நேரத்தில் குடும்பப்பெண்ணை விசாரணைக்கு அழைத்த படையினர்!

## அம்பாறை அகதி முகாமில் சம்பவம்;மக்கள் திரண்டதால் களேபரம்

அம்பாறை மாவட்டம் திருக்கோயில் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருந்த அகதி முகாம் ஒன்றுக்குள் இரவு நேரத்தில் சென்ற படையினர் அங்கிருந்த குடும்பப் பெண் ஒருவரை விசாரணைக்காக அழைத்திருக்கிறார்கள்.

இரவில் பெண் ஒருவரை விசாரணைக்கு படையினரால் அழைக்கப்படுவதை அனுமதிக்க முடியாது என்று அங்கு திரண்ட மக்கள் கூக்குரலிட்டனர். படையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பெரும் களேபரம் ஏற்பட்டது.

கடந்த 26 ஆம் திகதி இரவு 9.30 மணிக்கு அம்பாறை மாவட்டம் திருக்கோயில் விநாயகபுரம் வித்தியாலயத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அகதி முகாமுக்குள் பிரவேசித்த படையினர் குடும்பப் பெண்ணை விசாரிக்க வெளியே வருமாறு அழைத்தனர்.

இந்த நேரத்தில் வெளியே வரமுடியாது என அந்தப் பெண்ணும் அவரது கணவரும் மறுப்புத் தெரிவிக்க படையினர் சத்தமிட்டனர்.

முகாமில் இருந்து மக்கள் ஒன்று திரண்டு, இரவில் யாரையும் அழைத்துக்கொண்டு போக முடியாது என்று ஒரே குரலில் கோஷமிட்டனர்.

இந்தவேளை விடயமறிந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் த.குயிலின்பன் அவ்விடத்திற்கு வந்து "எதுவானாலும் நாளை பார்க்கலாம் இப்போது பெண்ணை அனுப்ப முடியாது" என்று கூறினார்.

படையினர் அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். வாக்குவாதம் முற்றி கைகலப்பு என்ற கட்டம் வரை சென்றபோது அகதி முகாம் மக்கள் ஒருமித்து கூக்குரலிட்டனர். பின்னர் நிலைமை சற்றுத்தணிந்தது. படையினர் அங்கிருந்து திரும்பினர்.



எச்.என்.பி.அஷ்சூரன்ஸ் (H.N.B.Assurance) காப்புறுதி நிறுவனத்தில் "தேதுனு" ஆயுள் காப்புறுதி செய்துகொண்ட மாதகலைச் சேர்ந்த வாடிக்கையாளர் ஒருவருக்கு, அவரது இறப்பின் பின்னான கொடுப்பனவுக்குரிய காசோலையையும், பிள்ளைக்கான கல்விக் கொடுப்பனவிற்கான உறுதிப்பாட்டினையும் அவரது மனைவியிடம் காப்புறுதி நிறுவனத்தின் யாழ்.கிளை முகாமையாளர் மா.புவிராஜ் ஒப்படைபபதனைப் படத்தில் காணலாம். (எ)

### பெருந்திருவிழா

குடத்தனை,ஜன.29

பருத்தித்துறை புலோலி மத்தி அருள் மிகு அவ்வொல்லைப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவும் சங்காபிஷேகமும் இன்று சனிக்கிழமை காலை 6மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. (த-78-202)

### போராளி வீரச்சாவு

கிளிநொச்சி,ஜன-29

கடந்த 27-06-2004 அன்று சுகயீனம் காரணமாகப் போராளி ஒருவர் சாவடைந்தார் என்று "புலிகளின் குரல்" வானொலி நேற்றிரவு தெரிவித்தது. வீரவேங்கை சமுத்திரன் என அழைகப்படும் ஆறாம் வாய்க்கால் பன்குளம் திருகோணமலையைச் சொந்த முகவரியாகவும், 5ஆம் பகுதி, சம்பூர், திருகோணமலையைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ராசலிங்கம் கந்தையா அல்லது ராஜேந்திரா என்ற போராளியே சாவடைந்தவராவார். (த-12)

### மது விற்பனை நிலையம் மூடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன.29

யாழ்.பாங்ஷால் வீதி மற்றும் டேவிற் வீதி இணையும் பிரதான சந்தியில் கடந்த வருடம் அமைக்கப்பட்ட மதுபானச்சாலை மூடப்பட்டுள்ளது. இது தொடர்பாக குருநகர் கிழக்கு சமுர்த்திச் செயலணிச் செய்திக் குறிப்பு ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஜே.70 கிராம சேவகர் பிரிவில் பாங்ஷால் வீதி மற்றும் டேவிற் வீதிகள் இணையும் பிரதான சந்தியில் கடந்த வருடம் மதுபானச்சாலையொன்று புதிதாகத் திறக்கப்பட்டது.

இந்த மதுபானச்சாலையில் மது அருந்துபவர்களால், இந்தப் பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். இவற்றை நீக்கி மதுபானச்சாலையை அகற்ற நாம் எடுத்த நடவடிக்கையை ஏற்றுக் கொண்டு, மதுபானச்சாலையை அகற்ற நடவடிக்கை எடுத்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம் என்று அதில் உள்ளது. (எ-204)

### அச்சுவேலியில் இருந்து முகமாலைக்கு நேரடி பஸ் சேவை

அச்சுவேலி,ஜன.29

அச்சுவேலியில் இருந்து முகமாலைக்கு கடந்த முதலாம் திகதி முதல் நேரடி பஸ் சேவை நடத்தப்பட்டுவருகின்றது.

தினசரி காலை 6.30 மணிக்கு அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் பஸ் நெல்லியடி வழியாக முகமாலையைச் சென்றடையும்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவினால் நடத்தப்படும் இந்த பஸ் சேவைக்கான ஏற்பாடுகளை பருத்தித்துறை டிப்போ அத்தியட்சகர் த.யோகநாதன் செய்துள்ளர். (எ-11)

### கால்முறிந்தது

தென்மராட்சி,ஜன.29

உழவு இயந்திரத்தின் சாரதி அதிலிருந்து வீழ்ந்து கால் முறிந்து காயமடைந்தார். நேற்று முன்தினம் மாலை கொடிகாமம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது. கொடிகாமத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் ஜீவராஜ் (வயது23) என்பவரே காயமடைந்தவராவார்.

வீதியில் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரத்தினை நிறுத்துவதற்காக எழுந்து நின்று 'பிரேக்கி'னை அழுத்தியபோது கால் சறுக்கி கீழே வீழ்ந்தபோது கால் முறிந்து காயமேற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

### கெற்பேலி கடற்கரையில் மணல் அகழப்படுவதாக பொதுமக்கள் முறைப்பாடு

கெற்பேலி கடற்கரைப் பகுதியில் அண்மைக்காலமாக இரவிரவாக வாகனங்களில் மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டு வருவதால் கடல் நீர் கிராமத்துக்குள் உட்புகும் அபாயம் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கடற்கரைப் பகுதிக் குடியிருப்புக்கள் அற்ற பிரதேசமென்பதால் இரவு வேளைகளில் வாகனங்களில் சுதந்திரமாக மணல் எற்றிச்செல்லப்படுவதாகவும் - மணல் அகழ்ந்தெடுக்கப்படுவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் தொடர்பாக தென்மராட்சிப்பிரதேச செயலருக்கும், விடுதலைப் புலிகளின் தென்மராட்சிப் பிரதேச அரசியல் துறையினருக்கும் முறையிடப்பட்டுள்ளதகாவும் தெரிவித்தனர். (எ-117)


தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு நிர்வாகத்தில்
இலண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன்
இலவச கணனிப் பயிற்சி நிலையம்

எமது கணனிப் பயிற்சி நிலையத்தில் புதிய பிரிவு மாணவர்களுக்கான அனுமதிகள் வழங்கப்படவுள்ளதால் பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளவிரும்பும் மாணவர்கள் இன்று (29.01.2005) முதல் 10.02.2005 வரை அலுவலக நேரத்தில் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

114, டச்சு வீதி,
சாவகச்சேரி. (41433)(43-11-45) - முகாமையாளர்.

வெளிக்கள உத்தியோகத்தர் தேவை

யாழ்ப்பாணத்தில் நாற்பது ஆண்டுகளாக இயங்கி வரும் முதன்மைக் காப்புறுதி நிறுவனத்துக்கு வெளிக்கள உத்தியோகத்தர்கள் (முகவர்) உடன்தேவை.

தகைமை:-O/L கணிதபாடம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
தகைமையுடையவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

T.P.:0777 563781

- அமைப்பாளர்.

(41434)(43-11-45)

நிறைஞ்சனாஸ் சங்கானை



விக்ரம் கிரண் நடித்த
ஜெமினி
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00, (பு.நே.) (C/40667)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந்த், சினேகா, வடிவேல், ஜனகராஜ் இன்னும் பலர் நடித்த
ஆயுதம்



கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30(பு.நே.)

ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), நயனதாரா, லட்சுமி, வடிவேல், பிரகாஸ்ராஜ், நெப்போலியன் நடித்த
கே.பாலச்சந்தரின்
ஐயா இயக்குநர் ஹரி



காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
தனுஸ், ஸ்ரீதேவி, கருணாஸ், கபாலி, குணால், நாசர் நடித்த
தேவதையைக் கண்டேன்
தினசரி 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.) (C/39054)

தனிப்பாட அனுமதி
GEO.-10/11 Mr.பாபு
COM.-10/11 Mr.மோகன்
ENG.Lit Mr.J.குமார்
TAM.Lit Mr.சபேசன்
I.B.S. சுண்டுக்குளி.

நியூட்டன் அக்கடமி கோண்டாவில்.
English Literatur
For Gr. 9,10,11
By.Mathan Dip. in Eng.
பிரிவு II ஆரம்பம்
2005.02.01 பி.ப.5.00 (பு.நே.)
தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.
(41431)


## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னுத்துரை சர்வபாக்கியம்

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் குட்செட் வீதி, வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை சர்வபாக்கியம் நேற்று முன்தினம் (27.01.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற S.V.பொன்னுத்துரை (புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் தயாலகுலசிங்கம் (கணக்காளர்), தர்மகுலசிங்கம் (இயல்மியல் மருத்துவ நிபுணர்), கமலசிங்கம் (ஆசிரியர்), குருகுலசிங்கம், வசந்தமலர், காலஞ்சென்ற யோகசிங்கம் மற்றும் வதனா (முன்னாள் மட்டக்களப்பு பல்கலைக்கழகம்) ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (30.01.2005) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

பிரியமகால்,
முதலாம் ஒழுங்கை,
குட்செட் வீதி,
வவுனியா. (41437)(43-11-45)

தகவல்:
பொ.கமலசிங்கம் (மகன்).





விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தனது பாரியார் சகிதம் முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை நேற்று முன்தினம் பார்வையிட்டார். அங்குள்ள நலன்புரி நிலையம் ஒன்றில் தங்கியிருக்கின்ற மக்களுக்கு அவர் ஆறுதல் கூறுவதையும், முல்லைக் கடற்கரையோரமாக அழிவடைந்துள்ள கட்டடம் ஒன்றில் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசையுடன் கலந்துரையாடிக்கொண்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

# உதவிகளைச் சமமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடைக்கலநாதன், வினோ நோதராதலிங்கம், வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், மாணவர்கள், அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் என ஆயிரக்கணக்கானோர் பேரணியில் கலந்துகொண்டனர்.

வடக்கு - கிழக்கு மக்களுக்குச் சர்வதேச உதவிகள் பாரபட்சமற்ற விதத்தில் வழங்கப்பட வேண்டும். பொது நிகழ்வுகளில் சுதந்திரமாகப் புலிக்கொடி ஏற்ற அனுமதிக்கப்படவேண்டும். அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டு மக்கள் அங்கு மீள்குடியமர அனுமதிக்கப் பட வேண்டும் - என்ற கோரிக்கைகளை வலியுறுத்தும் சுலோக அட்டைகளைப் பேரணியில் சென்றோர் தாங்கியிருந்தனர்.

பேரணி, மன்னார் செயலகத்தைச் சென்றடைந்ததும், அங்கு வைத்து ஜனாதிபதி, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர், நோர்வேத் தூதுவர், அரச மற்றும் புலிகளின் சமாதானச் செயலகங்களின் பணிப்பாளர்கள், புனர்வாழ்வு அமைச்சர் ஆகியோருக்கு முகவரியிடப்பட்ட மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் ரி.பி.சிந்தாத்துரை மற்றும் ஒன்றியத்தின் மகளிர் பிரிவுத் தலைவர் யே.ஜெஸிந்தா ஆகியோர் மகஜர்களை அரச அதிபர் வி.விஸ்வலிங்கத்திடம் ஒப்படைத்தனர்.

மன்னார் மாவட்ட மாணவர் ஒன்றியத் தலைவர் நீகன், மகஜரை மக்கள் முன் வாசித்துக் காட்டினார். ஜனாதிபதிக்கான மகஜரில் தனது இரத்தத்தால் அவர் கையொப்பமிட்டுக் கொடுத்தார்.

பேரணியின் இறுதியில் உரையாற்றிய சிவசக்தி ஆனந்தன் எம்.பி. ஆழிப்பேரலையால் உண்மையில் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கிற்கு உரிய முறையில் சர்வதேச உதவிகள் அரசால் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். இதனை வலியுறுத்தியே இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - என்றார்.

செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.மற்றும் வினோநோதராதலிங்கம் எம்.பி.ஆகியோரும் உரையாற்றினர்.

இந்தப் பேரணியையொட்டி மன்னாரில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. பேரணி இடம்பெற்ற பகுதிகளில் கலகம் அடக்கும் பொலீஸாரும், படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

பேரணிக்கு உயிலங்குளம் பகுதியிலிருந்து செல்ல முற்பட்ட பலநூறு மாணவர்கள் படையினரால் தடுக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-க-12)

# மீண்டும் சுனாமி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிதறி ஓடினர். இதனால் முனை சென்.தோமஸ் பாடசாலை மாணவர்கள் பலர் காயமடைந்தனர். பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் மாணவி ஒருவருக்குக் காலில் முறிவு ஏற்பட்டு மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

தும்பளை, நெல்லண்டை வீதியைச் சேர்ந்த சண்முகராசா கோகுலவேணி (வயது -13) என்ற மாணவியான இவர், டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது அலையினால் அடித்துச் செல்லப்பட்ட வேளை அப்பகுதி இளைஞர்களால் காப்பாற்றப்பட்டிருந்தார். கிழக்கு மாகாணத்தில் அலைகள் ஆர்ப்பரிப்பதாக வடமராட்சிப் பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள படையினருக்கு அறிவித்தல் வந்ததாகவும், அப்படையினர் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவித்ததையடுத்தே தாம் பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடியதாகவும் பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவில்

முல்லைத்தீவு மாவட்டத்திலும் இந்த வதந்தி பரவியதால் மாவட்டச் செயலகம் உட்பட அரச திணைக்களங்கள், வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் யாவும் மூடப்பட்டன. நேற்றுக் காலை பரவிய வதந்தியால் மக்கள் பெரும் அல்லோலகல்லோலப்பட்டனர். போக்குவரத்துச் சேவைகளும் தடைப்பட்டன. போக்குவரத்தில் ஈடுபட்ட வாகனங்கள் யாவும் கடற்கரையில் இருந்து தொலைதூரத்துக்கு அப்பால் கொண்டு சென்று நிறுத்தப்பட்டன. மக்களும் பாதுகாப்பான இடங்களை நாடிச்சென்றனர்.

கிழக்கு மாகாணத்தில்

இதேபோன்று மட்டக்களப்பு, அம்பாறை, பொத்துவில் ஆகிய பிரதேசங்களிலும் நேற்றுக் காலை 9.30மணியளவில் பரவிய இந்த வதந்தியால் பெரும் களேபரம் ஏற்பட்டது. மக்கள் திக்குத்திசை தெரியாதவாறு தலைதெறிக்க ஓடினர். பாடசாலைகள் யாவும் மூடப்பட்டன.

இதனால் மேற்படி பிரதேசங்களில் உள்ள மக்கள் பெரும் அச்சமடைந்தனர். இரண்டு, மூன்று மணித்தியாலங்கள் இந்தப் பதற்றம் நீடித்தது. ஆயினும் இந்தச் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என்று தெரிந்த பின்னரே மக்கள் நிம்மதியடைந்தனர்.

கடந்த டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் இலங்கையில் சுமார் 40 ஆயிரம் மக்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களும் இந்த வதந்தியால் அல்லோலகல்லோலப்பட்டனர். குறிப்பாக, நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்கள் இதனால் பெரும் பதற் றம் அடைந்தனர். எனினும் முகாம்களில் கடமையில் இருந்த போராளிகள் மீண்டும் சுனாமி என்பது வதந்தி என்பதை உறுதிப்படுத்தியதை அடுத்து வழமை நிலைக்குத் திரும்பினர். (10-78-173-117-402-70-182)

# திருகோணமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரஜரட்ட அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுக்கு உத்தரவு விடுத்துள்ளார் என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிண்ணியா, மூதூர், குச்சவெளி, ஈச்சிலம்பற்று மற்றும் பட்டணமும் சூழலும் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் வீடமைப்புத் திட்டங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-க)

# சர்வதேச உதவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு வந்துள்ளன. அரசுக்கு உத்தியோக பூர்வமாக வரும் நிதி, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இயங்கும் பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்படுவது தொடர்பில் ஒரு சீரான வழிமுறை உருவாக்கப்படவேண்டும்.

இத்தகைய திட்டங்களை அரசு அங்கு நேரடியாகச் சென்று நடைமுறைப்படுத்த முடியாது என்ற நிலைமை கடந்த சில வருடங்களாக அங்கு நீடிப்பதே இதற்குக் காரணம்.

இதுதான் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய யதார்த்த நிலை.

எனவே, இரண்டு அடிப்படைகளைச் சமநிலைப்படுத்தும் ஒரு முயற்சியில் அரசும் புலிகள் அமைப்பும் உதவும் நாடுகளும் ஈடுபட்டிருப்பதை நாம் காண்கிறோம்.

ஒன்று - நிதி நேரடியாக - முற்றும் முழுவதாக - புலிகளிடம் ஒப்படைக்கப்பட முடியாது.

அதேசமயம், புலிகளின் பிரதேசத்தில் அரசின் திட்டங்களைச் செயற்படுத்தும் ஒரு குறிப்பிடத்தக்க கட்டமைப்பு அவசியம்.

இதுவே செய்யப்படவேண்டியதாகும்.

கேள்வி:- இது தொடர்பான செயற்றிட்டத்தைத் தெளிவுபடுத்துவீர்களா?

பதில்:- திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கான விடயங்களைக் கையாள்வதற்கு அரசு, புலிகள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்புகளின் பங்களிப்புடன் கூடிய ஏதோ ஒரு வகைக் கட்டமைப்பு மத்தியில் தேவை.

அதேபோன்ற தரப்புகளின் பங்குபற்றலுடன் களத்தில் பணியாற்றுவதற்குப் பிரதேச மற்றும் மாவட்டக் கட்டமைப்புகளும் கட்டாயம் அவசியம்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்று கூறப்படும் பகுதிகளில் கூட புலிகள், அரசு ஆகியவற்றுக்கு அப்பால் ஏனையோரின் பிரதிநிதித்துவமும் அதில் அவசியம். குறிப்பாக, முஸ்லிம்கள் தரப்பு மற்றும் சர்வதேச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவையும் இதில் அடங்கும்.

அதாவது பரந்த - விசாலமான - பலரையும் உள்ளடக்கிய - பிரதிநிதித்துவம் அதில் அவசியம்.

இந்த ஏற்பாடு, வெறுமனே அரசையும் புலிகளையும் மட்டும் கொண்டதாக இருக்க முடியாது. அதைவிட விசாலமாக அது அமைய வேண்டும். திறமையாக அந்தக் கட்டமைப்பு இயங்கக்கூடியதாக அது விரிவுபடுத்தப்பட வேண்டும் - என்றார் கதிர்காமர். (த-க)

# ரூ.40 கோடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு அனுப்பப்பட்ட பொருள்களின் பெறுமதி வருமாறு:-

- ★ அம்பாறை - 11 கோடி ரூபா
- ★ யாழ்ப்பாணம் - 4 கோடி 20 லட்சம்
- ★ கிளிநொச்சி - 4 கோடி 60 லட்சம்
- ★ முல்லைத்தீவு - 4 கோடி 50 லட்சம்
- ★ திருகோணமலை - 6 கோடி 50 லட்சம்
- ★ மட்டக்களப்பு - 9கோடி 50 லட்சம்

இவ்வாறு 40 கோடி 30 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் வடக்கு - கிழக்கு மக்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை ஆழிப்பேரலை அனர்த்தப் பிரதேசங்களில் அகதிமுகாம்களில் இருப்பவர்களுக்குத் தேவையான அரிசி, மா, பால்மா வகைகள், சீனி, பருப்பு மற்றும் அத்தியாவசியப் பொருள்களும் கட்டுப்பாடின்றி அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று தாராடி மெல் மேலும் தெரிவித்துள்ளார். (த-க-12)


பணிநிலை வெற்றிடம்

ஒப்புநோக்குநர்- பெண் (Proof Reader)
தமிழில் நன்கு தேர்ச்சி பெற்ற அறிவு
(ஆங்கில அறிவு உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
முன்னனுபவம் விரும்பத்தக்கது
(ஆனால் கட்டாயமல்ல)
18 வயதிற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும்.
இரவுநேர காவலாளி - ஆண் (Security Guard)
வயதெல்லை 45-60இற்கு இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிபரக் கோவையுடன் 05.02.2005 ஆம் திகதிக்கு முன் காலை 11.00—மாலை 5.00 மணி வரை நேரில் சமுகம் தரவும்

கரிகணன் பிறிண்டேர்ஸ்,
இல:424, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.



LOGIC
A/L 2007
Sun - 11 a.m.
By:P.கமல்
BRIGHTMAN
நாவலர் வீதி.
(41441)



இறுதிப் பரீட்சை
மேற்படி Ms Office, Hardware ஆகிய பயிற்சிநெறிகளுக்கான பரீட்சைகள் நடைபெற இருப்பதால் 31.01.2005 இற்கு முன் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.
SCC
Course Director
T.P No:- 0212225170



நியூ றோயல் அக்கடமி
சங்கத்தானை
A/L 2005 வரலாறு
துரித மீட்டலும் மாதிரிப் பரீட்சையும்
By: சுஜீகரன்
ஆரம்பம்: 30.01.2005 ஞாயிறு 7.30 (ப.நே.)
★ 2007 - இலங்கை வரலாறு நடைபெறுகின்றது.
(41255)



CATWAS.COM
Computer Academy
N0.26, Somasundram Avenue,
Chundukuli. T.P.: 021 222 3805
One Month Online Batches
1.Microsoft Office
2.Hardware
3.Desktop Publishing
01.02.2005 ஆம் திகதி ஆரம்பமாகும்.
(சி-40673)



அதிரடிச் சலுகை!.......
ஒரேதடவையில் பெருமளவு
புகைப்படச் சுருள்களை பிரதியாக்கம் செய்வோருக்கு
விஷேட விலைக்கழிவு
4R - 9.75 சதம் மட்டுமே!
இன்னும் கொழும்பு செல்லவேண்டுமா?



இலவசமாகப் பதிவு செய்து தருகின்றோம்
MOORTHY LAZER DIGITAL
COLOUR LAB
யாழ்.வீதி , மானிப்பாய்.
(சி-40690)(43-11-45)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.